# கனியே அமுதே



சத்யா இராஜ்குமார்

# கனியே அமுதே



1

''ஓ காட்.''

''என்னடா என்னாச்சு?''

''டாடி வரவர வாணிக்கு டென்ஷன் அதிகமாயிட்டே போகுது டாடி, எதுக்கெடுத்தாலும் இப்படியே இருக்கக் கூடாதுன்னு சொல்லி வைங்க.''

''அப்படியாம்மா, என்ன வாணி விஷயம்?''

''இருங்க டாடி நானே சொல்றேன்'' என்று மீண்டும் தனது சின்ன மகளே முந்திக் கொள்ள, ''சரி சொல்லு'' என்றார் தாமோதரன்.

''நம்ம வீட்ல மொத்தம் எத்தன கார் இருக்கு?''

''அஞ்சு.''

''எத்தன டிரைவர்ஸ் இருக்காங்க?''

''மூணு பேர்.''

''அதுல குமார் டிரைவர் இருக்கான்ல?''

''நம்மள விட வயசுல பெரியவங்களுக்கு மரியாத குடுக்கணும் தேவி.''

''நான் டாடிகிட்ட தான் பேசிட்டிருக்கேன் வாணிக்கா, சொல்லுங்க டாடி அதுல குமார் டிரைவர்க்கு என்ன வேல?''

''டிரைவர் வேலையாத்தான் இருக்கும், அதனாலதான் டிரைவர்னு சொல்றோம்.''

''நான் பேசறதெல்லாம் உங்களுக்கும் கிண்டலா இருக்கா?''

''இல்லடா கண்ணா சொல்லு.''

''அந்த டிரைவர்க்கு என் வண்டியப் பாத்துக்கறதுதான டாடி வேல?''

''இல்ல அதுவும் ஒரு வேல.''

''ப்ளீஸ்'' என்று தனது உடன் பிறந்த அக்காவைப் பார்த்தவள், ''நேத்துதான் நீங்க என்னவோ வேல சொன்னீங்களாமே பரவாயில்லன்னு விட்டேன், இன்னைக்கென்ன வந்ததாமா? வெளிய போறதுக்குப் போய் என் வண்டியப் பாக்கறேன், துடைக்கல டேங்க் பில் பண்ணல அனாத மாதிரி கிடக்கு. அதனாலதான் நல்லாத் திட்டி விட்டேன் இதுல தப்பிருக்கா டாடி?''



''நம்மகிட்ட சம்பளம் வாங்கறவங்கன்ற ஒரு காரணத்துக்காக நாய் மாதிரின்னு சொல்றியே, உண்மையாவே இதெல்லாம் இப்பிடிப் பேசற நமக்குதான் கேவலம். முதல்ல உன் தலைக்கு ஏறியிருக்கற திமிரக் கொஞ்சம் இறக்கி வெச்சுட்டுப் பாரு, அப்புறம் தான் தெரியும் யாருக்கு டென்ஷன் அதிகமா இருக்கு, யாருக்குக் குறைவா இருக்குன்னு.''

''க்கும்'' என்று உதட்டைப் பிதுக்கி ஜாடை காட்டி விட்டு தேவி உள்ளே போக, சற்றே எரிச்சல் கலந்த கோபத்துடன் அவளுக்கு எதிர்ப்புறமாக சென்றாள் வாணி.

குணத்தில் எதிரெதிர் துருவங்களான தனது இரண்டு மகள்களையும் நினைத்து எப்பொழுதும் போல சிரித்துக் கொண்டே, தனது கையிலிருந்த பேப்பரைப் படிக்க ஆரம்பித்தார் தாமோதரன்.

தாமோதரனின் இரண்டு செல்ல மக்கள் தான் பெரியவள் கலைவாணி, சிறியவள் ஸ்ரீதேவி. தேவி பி.எஸ்ஸி., பிஸிக்ஸ் கடைசி ஆண்டு படித்துக் கொண்டிருக்கிறாள், வாணி கம்ப்யூட்டரில் இன்ஜினியரிங் முடித்துவிட்டு தனது தந்தையுடன் சேர்ந்து பிஸினஸ் பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

தாமோதரனின் மனைவி மூன்று வருடங்களுக்கு முன்பு இறந்து விட்டிருக்க, தனது இரண்டு மகள்களையும் தாயில்லாப் பிள்ளைகள் என்று யாரும் சொல்லி விடக் கூடாது என்பதற்காகப் பார்த்துப் பார்த்து வளர்த்தார்.

கூடவே அவரது தாயும், தந்தையும் இருப்பதால் தனது மக்களை வளர்ப்பதற்கு அவர் அதிகப்படி கவலையேதும் கொள்ளவில்லை எனலாம்.

தனது மனைவி கீதா லட்சுமியின் மறைவு ஒரு மிகப் பெரிய இழப்புதான் என்றாலும், முடிந்த அளவு அதை எப்பொழுதும் யாரிடமும் வெளிக்காட்டிக் கொள்ள மாட்டார் தாமோதரன்.

கீதா லட்சுமிக்கு தொழில் தான் உயிர் மூச்சாக இருந்தது.

கூடவே தனது குழந்தைகளிடமும் அன்பைப் பொழி வார் தான் என்றாலும், குழந்தைகளின் சிறு வயதிலிருந்தே வேளைக்கு ஊட்ட வேண்டும், தூங்க வைக்க வேண்டு மென்றெல்லாம் கவலைப்பட்டவரும் கிடையாது.

அதாவது அவசியம் இருக்கவில்லை.

அதனாலோ, என்னவோ தாயின் மறைவு அவர்களை விட்டுக் கொஞ்சம், கொஞ்சமாகக் குறைந்து கொண் டிருந்தது.

தேவி முழுக்க முழுக்க தந்தை செல்லமாதலால் தாயின் மறைவை மறந்தே விட்டாள் எனலாம். ஆனால் தாயைத் தவிர யாரிடமுமே அவ்வளவாக ஒட்டாத கலைவாணி யால் அந்த இழப்பிலிருந்து இன்னும் முழுமையாக மீண்டு வர முடியவில்லை.

தாமோதரனின் பெற்றோரும் மிகுந்த முற்போக்குக் கருத்துடையவர்கள், யாருடைய உணர்ச்சிகளையும் அவமதித்துப் பழக்கப்படாதவர்கள்.

அதிலும் தங்களது ஒரே மகனான தாமோதரனின் குழந்தைகள் வாணி தேவி இருவருமே, அவர்களுக்கு மிகுந்த செல்லம் எனலாம்.

தனது மனைவி இல்லையே என்ற மிகப்பெரிய குறை தவிர, தனது குடும்பம் சந்தோஷமாகத் தான் இருக்கிற தென்பதில் தாமோதரனுக்கும் மனதில் ஒரு திருப்தி.



தனது தாயின் ஆசைக்காகவே கம்ப்யூட்டர் கல்வியை முடித்துவிட்டு, தந்தையோடு சேர்ந்து பிஸினஸ் பார்த்துக் கொண்டிருந்தாள் கலைவாணி.

அனைவரையும் புண்படுத்தும்படி நடந்து கொள்வதே வாழ்வின் லட்சியம் என்பதைப் போல நடந்து கொள்பவள் தேவி. ஆனாலும் நல்ல பெண்ணே, சற்று முன் கோபம் அதிகம் அவ்வளவுதான்.

ஆனால் வாணி தங்கைக்கு நேர் எதிர் அது யாராக இருந்தாலும் அவர்களது மனம் புண்படாதவாறு நடந்து கொள்ளும் இனிய குணம் கொண்டவள்.

என்னதான் இருந்தாலும் தங்கை தன்னை விட வயதில் சின்னவள், பாவம் அவளுக்கு வெளியுலகம் சுத்தமாகத் தெரியாது என்று தங்கை செய்யும் சிறிய தவறுகளுக்கும் மற்றவர்களிடம் தானே பேசி சமாளித்து விடுவதோடு, இப்படியெல்லாம் நடந்து கொள்ளக் கூடா தென்று இதமாகத் தங்கைக்கு எடுத்தும் சொல்லுவாள் கலைவாணி.

எப்பொழுதும் இரவு எட்டு மணிக்கு டிஃபன் சாப் பிடுவது வழக்கமாதலால், பெரியவர் கங்காதரனும் தாமோ தரனும் டைனிங் டேபிள் சேரில் வந்து அமர்ந்திருந்தார்கள்.

''கலா குழந்தைங்க ரெண்டு பேரையும் காணமே, போய் சாப்பிட அழைச்சுட்டு வா.''

பாட்டி புஷ்பவள்ளி ஏவ, ''இதோம்மா போய் வரச் சொல் றேன்'' என்று சென்றாள் வேலைக்காரப் பெண் கலா.

தேவியின் அறைக் கதவைத் தட்டிவிட்டு உள்ளே சென்றவள், ''சின்னம்மா டிஃபன் சாப்பிடலாம் வாங்க'' என்று அழைத்தாள்.

"ஏய் நானென்ன உனக்கு அம்மாவாக்கும்? என்ன இப் படிக் கூப்பிடாதன்னு உனக்கு எத்தன தடவ சொல்றது?"

"ஸாரிம்மா" என்றவள் மீண்டும் தன்னையே நொந்து கொண்டு "வாங்க மேடம்" என்று சொல்லிவிட்டு வெளியே வருவதற்குள் போதும் போதும் என்றாகி விட்டிருந்தது.

ஆனால் அதற்குள் வெளியே வந்திருந்தாள் வாணி.

"ஒரு புக்க இன்ட்ரஸ்ட்டிங்கா படிச்சுட்டிருந்ததால டைம் போனதே தெரியல கலா" என்றவள், "ஆமா மேடம் என்ன சொன்னாங்க?" என்று தேவியின் அறைக் கதவைக் காட்டிக் கேட்டாள்.

"வர்றேன்னு சொன்னாங்கம்மா" என்று கலா சாதாரணமாக சொல்ல முயல, "வழக்கம் போலத்தானா?" என்றவள் "சரி நீ போ நாங்க வர்றோம்" என்றாள்.

சில வினாடிகளில் கலைவாணியும், ஸ்ரீதேவியும் டைனிங் ஹாலுக்கு வந்திருக்க, "வாங்க குழந்தைகளா இப்பவாவது டிஃபன் சாப்பிட்ற நினைப்பு வந்ததுக்கு சந்தோஷம்" என்றார் பாட்டி.

"போதும் பாட்டி, பசி நேரத்துல ஒண்ணு சாப்பிடுங்க இல்ல சாப்பிட விடுங்க" என்று சொல்லிக் கொண்டே ஒரு சேரை இழுத்துப் போட்டு அமர்ந்தாள் தேவி.

"சரிடியம்மா, நீ சாப்பிட்டு முடிக்கற வரைக்கும் இனி நான் வாயத் திறந்தாக் கேளு."

"பாவம் தாத்தா நீங்க, எப்படித்தான் சமாளிக்கறீங் களோ போங்க."

"அதையேன் தேவி கேக்கற? இன்னொரு கல்யாணம் பண்ணிக்கலாம்னு இருக்கேன் ஆளு கூட ரெடி" என்று



தாத்தா கங்காதரன் சொன்னதைக் கேட்டு அனைவரும் சிரிக்க ஆரம்பித்தார்கள்.

தாமோதரன் ஏதோ யோசனையில் இருக்க, தன் மகன் இருக்கும் நிலைமையில் தான் இப்படிப் பேசியிருக்கக் கூடாதென்று தன்னையே நொந்து கொண்டார் கங்காதரன்.

"அப்பா இன்னைக்கு டிபன்ஸ்ல நமக்குப் புடிச்ச சப்பாத்தி சென்னாவும் இருக்கு" என்று வாணி சொல்ல,

"ஆமாம் பாப்பா ஒரு கை பாத்துடலாம்" என்று சிரித்தார் தாமோதரன்.

"சரிசரி வெறும் வாய சப்புக் கொட்டாம சாப்பிட ஆரம்பிக்கலாமே" என்று தேவி சொல்ல, "அப்பாடா மகாராணி யார் கட்டளை அமலுக்கு வந்து விட்டதப்பா" என்று சாப்பிட ஆரம்பித்தார்கள்.

## 2



"ரொம்ப சரியா சொன்னீங்க அங்கிள்" என்ற பேச்சை யடுத்து வந்த கம்பீரமான சிரிப்பொலியில் நிமிர்ந்து பார்த்தாள் தேவி.

தனது தந்தையுடன் பேசிக் கொண்டே வீட்டிற்குள் வந்து கொண்டிருந்த அந்த இளைஞன், அதுவரை தனது தந்தைக்குப் பழக்கப்படாதவனாக இருந்தான்.

ஆறடிக்கும் மேலான உயரத்திலும், பார்ப்பதற்குப் பிரமாதமாக இருந்த அவனது தோற்றத்திலும், அவனை

யாரென்று தெரிந்துகொள்ள வேண்டுமென்ற உந்துதல் ஏற்பட்டது தேவிக்கு.

அதற்குள் பாட்டி புஷ்பவள்ளி ஹாலுக்கு வர, ''அம்மா தம்பிய அடையாளந் தெரியுதா?'' என்று தனது தாயைப் பார்த்தார் தாமோதரன்.

இவருதான இப்ப நம்பர் ஒன் ஹீரோ தெரியாம இருக்குமா என்று ஏளனமாக எண்ணியபடி, தன் பாட்டுக்கு திரும்பி நின்று ஷெல்ஃபில் புத்தகங்களை அடுக்கிக் கொண்டிருந்தாள் தேவி.

சில வினாடிகள் யோசித்துப் பார்த்துவிட்டு ''தெரியலையேப்பா'' என்று தனது தாய் சொல்ல, ''எங்கூடப் படிச்சானே குணசீலன் அவரோட பிள்ளை தான்'' என்றார் தாமோதரன்.

''ஓ, அப்படியா! சின்ன வயசா இருக்கும் போது உன்னப் பாத்த ஞாபகம், எப்படி வளர்ந்துட்ட தம்பி ராஜாவாட்டம்! வீட்ல எல்லாரும் நல்லார்க்காங்களா?''

''எல்லாரும் நலம் பாட்டி, நீங்க எப்படியிருக்கீங்க?''

''எல்லாரும் நலமா இருக்கோம், சரி பேசிட்டிருங்க நான் போய் டிபன் கொண்டு வரச் சொல்றேன்'' என்று உள்ளே சென்றார் பாட்டி புஷ்பவள்ளி.

''தேவி என்னடா பண்ணிட்டிருக்க?''

''புக்ஸ அடுக்கி வைச்சுட்டிருக்கேன் டாடி, இல்லன்னா நம்ம வீட்டு சாமியாரினிகிட்ட யாரு திட்டு வாங்கறது?'' என்று அவர்களை நோக்கி வந்தாள் தேவி.

''இவ என் சின்ன மகள் ஸ்ரீதேவி'' என்று தேவியை அந்தப் புதியவனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தவர், ''வாய் மட்டும் அதுவும் ரொம்பவுமே கொஞ்சம் தான் அதிகம்'' என்றார்.



''போதும் டாடி என் புகழ் தானாகவே பரவும் நீங்க கஷ்டப்பட வேண்டாம்'' என்றவள், ''வணக்கம் மிஸ்டர்...'' என்று சிறிது நேரம் இழுத்தாள்.

சிரித்துக் கொண்டே ''பேர் கேட்டா சொல்வேன்'' என்றான் அவன்.

''பரவாயில்லயே, கேட்டா சொல்ற அளவுக்காவது பெருந்தன்மை இருக்கே'' என்று ஆச்சரியம் போலக் காட்டிக் கேட்டவள், ஹாலில் இருந்த லேண்ட் லைன் போன் ஒலிக்க சென்று எடுத்துப் பேசினாள்.

சில வினாடிகளில் திரும்பி வந்த தேவி ''உங்க அருமை பெரிய மகளுக்கு அதிசயமா அவ ஃப்ரண்ட் விகாசினி கிட்ட இருந்து போன் டாடி அவ வந்ததும் மறக்காம சொல்லிடுங்க'' என்றாள்.

''அது சரி நீ எங்க கிளம்பிட்டிருக்க?'' என்று அவளது பாட்டி புஷ்பவள்ளி ஹாலுக்கு வர, ''நான் ஏற்கனவே டாடிகிட்ட எல்லாம் சொல்லிட்டேன், வேணும்னா உங்க மகனக் கேட்டுத் தெரிஞ்சுக்கோங்க'' என்றவள், ''பாக்கலாம் மதிவதணன் ஸார்'' என்று தனது தந்தையிடம் பேசிக் கொண்டிருந்தவனிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் புறப்பட்டு விட்டிருந்தாள் ஸ்ரீதேவி.

## 3



''மேடம் ஸார மீட் பண்றதுக்காக மதிவதணன்னு ஒருத்தர் வந்து காத்துட்டிருக்கார்.''

"ஸார் சொல்லும்போது, உள்ள அனுப்புங்க."

"அதுக்கில்ல மேடம்" என்று தனது தந்தையின் பி.ஏ. தயங்க, என்னவென்று கேட்டாள் கலைவாணி.

"ஸார் மீட்டிங் முடியற வரைக்கும் யாரையும் அலோ பண்ண வேண்டாம்னு சொல்லியிருக்கார் மேடம், அதான்..."

"மீட்டிங் முடிய இன்னும் ஒரு மணி நேரத்துக்கு மேல ஆகுமே, நீங்க ஒரு பி.ஏ.வா என்ன பண்ணனுமோ பண்ணுங்க."

வாணி சொல்வதைக் கேட்டு அந்தப் பெண் மேலும் தயங்க, தானே இன்டர்காமில் தந்தைக்கு அழைத்துப் பேசினாள் கலைவாணி.

"காத்திருப்பவருடன் நீயே பேசிவிடு வாணி" என்று தந்தை சொல்ல, யோசனையுடன் ரிசீவரை வைத்தாள்.

வாணிக்கு அன்றைக்கு மனம் ஏனோ உற்சாகமாகவே இல்லை.

தான் சொல்லப் போகும் பதிலுக்காக பி.ஏ. சாந்தி தன் முகத்தையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிய, "அவர மூணு மணிக்கு மேல ஸார வந்து மீட் பண்ணச் சொல் லிடுங்க" என்று சொல்லியனுப்பினாள் கலைவாணி.

"யெஸ் மேடம்" என்று சென்றவளுக்கும், அன்றைக் குத் தன்னுடைய முதலாளி அம்மாவின் உற்சாகமின்மை மிகுந்த ஆச்சரியத்தையே கொடுத்தது.

கலைவாணியைப் பொறுத்தவரை தான் தான் உரிமைக் காரி, தன் வார்த்தைகளைத் தான் அனைவரும் கேட்டாக வேண்டுமென்று நினைப்பவள் அல்ல.



முதலாளி என்ற பந்தா சிறிதும் இல்லாமல், இன்முகத் துடன் அனைவரிடமும் நன்றாகப் பழகும் வாணியை அனைவருக்குமே மிகவும் பிடிக்கும்.

அதிலும் ஏதாவது பிரச்சனை என்றால் மற்றவர்களை குறை கூறிக் கொண்டிருக்காமல், தானே நேரடியாக இறங்கி அதற்குத் தீர்வும் கண்டு விடுவாள்.

அதற்குத் தோதாக வாணியும் கல்லூரிப் படிப்பில் ஆரம்பித்து, இன்றைக்கு அப்டேட் ஆனது வரை படித்து கம்ப்யூட்டர் கல்வியில் மிகுந்த புலமை பெற்றிருந்தாள்.

அதோடு அவர்களது தொழிலும் ஒன்றும் சாதாரண மானதாக இருக்கவில்லை.

தேவி கம்ப்யூட்டர்ஸ், வாணி சாஃப்ட்வேர் சல்யூஷன்ஸ், கலைவாணி கம்ப்யூட்டர் எஜுகேஷன் என அனைத்துப் பெரிய நகரங்களிலும் அவர்களது நிறுவனங்களும், அவற்றின் கிளைகளும் பரவிக் கிடந்தன.

சிறிய கம்பெனிகளில் ஆரம்பித்து, மிகப்பெரிய நிறு வனங்கள், மருத்துவமனைகள், டிப்பார்ட்மெண்டல் ஸ்டோர்ஸ், பேங்க்ஸ் என இன்னும் பலவிதமான துறை களுக்கும் ப்ராஜெக்ட் செய்து கொடுத்தார்கள்.

ஏற்கனவே பரந்து விரிந்திருந்த அவர்களது தொழில் வாணியின் புதுத் திட்டங்களாலும், அயராத முயற்சியி னாலும் மேலும் மேலும் வளர்ந்து கொண்டே போனது. தொழிலைத் தனது உயிர் மூச்சாகக் கொண்டிருந்த தாமோ தரனின் விடா முயற்சியும், திறமையும் கூட வளர்ச்சிக் கான முக்கியமான காரணங்களென்றால் அது சற்றும் மிகையல்ல.

என்றைக்குமில்லாத அதிசயமாக டி.வி. முன்பு அமர்ந் திருந்த பெரிய மகளை ஆச்சரியத்துடன் பார்த்தார் தாமோதரன்.

"என்ன டாடி?"

"என்ன பாப்பா ஒரு மாதிரியிருக்க?"

"இல்லையே டாடி, இருங்க உங்களுக்குக் குடிக்க ஏதாவது எடுத்துட்டு வர்றேன்" என்று எழுந்த மகளைத் தடுத்தார் தாமோதரன்.

"நீ உக்காருமா நான் ஏற்கனவே பாட்டிகிட்ட சொல் லிட்டேன். ஆமா மதியம் நான் உன்ன ஒருத்தர்கூடப் பேசச் சொன்னேனே, ஆனா நீ பேசல போலிருக்கு."

"ஆமா டாடி வேறொரு வேலையாகக் கிளம்பி வந் துட்டேன். பாக்கப் பெரிசா எதுவும் இருந்த மாதிரி தெரி யல, ஏன் ஏதாவது முக்கியமான வேலையா டாடி?"

"பிஸினஸ்னு வந்துட்டா எல்லாமே முக்கியமானது தான் பாப்பா, சின்ன விஷயங்களக் கூட நாம கேர் எடுத்து டீல் பண்ணித்தான் ஆகணும்!

"என்ன பிஸினஸ், என்ன வாழ்க்கை? பணம் தான நம்மள இந்தப்பாடு படுத்துது."

தொழிலில் முதல் முறையாக அலுத்துக் கொள்ளும் தனது மகளை ஆச்சரியத்துடன் பார்த்தார் தாமோதரன்.

"அதுல என்னமா தப்பிருக்க முடியும்? எங்கப்பா எனக்காக பணம் சேத்து வெக்காம இருந்திருந்தா, நாம இன்னைக்கு இந்த அளவுக்கு வந்திருக்க முடியுமா? அதே மாதிரி நான் உங்க ரெண்டு பேருக்காகவும் பாக்கறேன் அவ்வளவுதான்."



"இருக்கலாம் டாடி, நம்ம கிட்ட அளவில்லாத செல்வ மும், செல்வாக்கும் இருக்கு. ஒத்துக்கறேன். நியாயமான வழில வர்ற இந்த செல்வத்தால பெருமையாக்கூட இருக்கு தான், ஆனா எல்லாத்துக்கும் முதல்ல முக்கியம் ஹெல்த்து டாடி."

மகள் சொல்ல வருவதைப் புரியாமல் பார்த்தார் தாமோ தரன்.

"நான் உழைக்கறது தப்புன்னு சொல்லவே மாட்டேன், நீங்க பாட்டுக்கு ஓவரா திங்க் பண்ணி, புதுபுதுசா பிசினஸ்ல இன்வெஸ்ட் பண்ணி ரொம்பவும் ஸ்ட்ரெய்ன் பண்ணிக்கறீங்க. அப்புறம் உடம்புக்கு ஏதாவது வந் துட்டா, கஷ்டப்பட்றதும் நாம தான டாடி?"

"அதுலயும் நாம ஏற்கனவே பட்டிருக்கோமே டாடி. மம்மி பிஸினஸ், பிஸினஸ்னு ரொம்பவும் ஸ்ட்ரெய்ன் பண்ணிக்கப் போய் தான அவங்களுக்கு அட்டாக்கே வந்தது. ஆனா அத அவங்களும் பெரிசா எடுத்துக்காம, நம்ம கிட்டயும் சொல்லாம விட்டதால தான செகண்ட் டைம் அது அம்மாவோட உயிரையே பறிச்சுட்டுப் போயிடுச்சு."

மகளுக்கு பதில் சொல்ல முடியாமல் திகைத்த தந்தையிடம், "ஸாரி டாடி" என்றாள் வாணி.

"என்னடாம்மா?"

"இல்ல தேவையில்லாம மம்மிய ஞாபகப்படுத்தி உங்க மனசக் கஷ்டப்படுத்திட்டேன்."

"இல்ல பாப்பா, நீ சொல்றதுலயும் நியாயமிருக்கே. இனமேல் நான் ஸ்ட்ரெய்ன் பண்ணிக்க மாட்டேன்டா" என்ற தந்தையை சந்தோஷமாகப் பார்த்தாள் கலைவாணி.

இந்த அளவுக்கு ஆழமாக யோசிக்கும் மகளை நினைத்து மனதிற்குள் பெருமைப்பட்டுக் கொண்டார் தாமோதரன்.

தான் மிகுந்த பணக்காரி, சிறந்த அழகி என்றெல்லாம் எந்தக் கர்வமும் இல்லாமல், மிகவும் மென்மையான மனம் படைத்த தன் மகளை அவளது அருமை புரிந்து பூப்போல வைத்துக் கொள்ளும் நல்ல மணாளன் அமைய வேண்டுமென்று மனதார நினைத்துக் கொண்டார் தாமோதரன்.

## 4



தன்னுடன் படித்த தோழிகள் நான்கு பேர் வீட்டிற்கு வந்திருக்க, அவர்களுக்கிடையே நடந்த நட்பான பேச்சு எங்கெங்கோ சுற்றி கடைசியில் விவாதத்தில் வந்து முடிந்தது.

''நம்ம நாலு பேரும் சேந்துட்டா இனி கேக்கவே வேண்டாம், விவாதத்துக்கு பட்டிமன்றம் தோத்துப் போய்டும்'' என்றாள் ராணி.

''ஏய் சங்கீதா முதல்ல உனக்குத்தான் கல்யாணமாகும்னு நினைக்கறேன், பாவம்டி உனக்கு வரப் போறவன்'' என்றாள் கௌரி.

வித்யா அவர்களைப் பார்த்து சிரித்துக் கொண்டே ஏதோ சொல்ல, வாணிக்குத்தான் அதில் யாருடைய கருத்தையும் ஏற்றுக் கொள்ள முடியாமல் போனது.



அதாவது திருமணமானால் நிம்மதி தொலைந்து போகும். ஆண் ஆனாலும், பெண் ஆனாலும் சினிமா, கதைகளில் வருவது போல அன்பு செலுத்தி சந்தோஷமாக வாழ்வதெல்லாம் நிஜ வாழ்க்கையில நடக்காத, முடியாத ஒன்று என்று சாதித்தார்கள்.

தங்களின் கருத்துக்களை துளியளவாகக் கூட ஏற்றுக் கொள்ளாத வாணியைப் பார்த்துச் சிரித்தார்கள்.

''வாணி நீ இன்னும் சின்னக் குழந்தையாவே இருக்க, உன்னால எப்படித்தான் இப்படியெல்லாம் இருக்க முடியுதோ, அதுவும் நீ இருக்கற அழகுக்கு ரொம்பவுமே கர்வமா நடந்துக்கலாம், அப்பதான் வர்றவனும் உனக்கும் உணர்ச்சிகள் இருக்குங்கறதப் புரிஞ்சுக்குவான்'' என்றார்கள்.

''ஒரு கணவனும், மனைவியும் ஆத்மார்த்தமா அன்பு செலுத்தும்போது, அங்க சண்டை சச்சரவுக்கெல்லாம் துளிகூட இடமிருக்காது அதை முதல்ல நீங்க எல்லாரும் தெரிஞ்சுக்கோங்க'' என்றாள் வாணி.

''அப்படியா வாணி? உன் கருத்து இதுதான்னா அத நாங்க தப்புன்னு சொல்ல மாட்டோம். ஆனா மனுஷன் உணர்ச்சிகளுக்குக் கட்டுப்பட்டவன், உணர்ச்சிகளால கண்டிப்பா எதிர்பார்ப்புகள் அதிகமாகும். எதிர்பார்த்து ஏமாந்து போனா பிரச்சனைகள் தானா வரும்.''

போனால் போகிறது என்றுகூட வாணியால் அவர்கள் சொல்வதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

ஒரு சமயம் இவர்கள் சொல்வதும் சரியாக இருக்குமோ, என்று மனதின் மூலையில் ஒரு எண்ணம் தோன்றி மறைந்தது.

எப்பொழுதும் போல, தன் மனதிற்குள் நினைத்துக் கொள்கிற மாதிரி தனக்கே சொந்தமான தன் சிறிய உணர்ச்சிகளையும் மதித்து, தன் தோளோடு தோள் உரசி தன்னோடு வாழ்க்கை முழுமைக்கும் வாழப் போகும் அந்த ஆறடி முகம் தெரியா மனிதனுக்காக மனதிற்குள் அதுவும் ஒரு நொடிதான் ஏங்கினாள் எனலாம்.

"வாணி படிக்கும்போது எப்படியிருந்தாளோ அப்படியே தான் இருக்கா, சரி விட்டுடலாம்பா கல்யாணமானா அவளே புரிஞ்சுக்குவா."

அப்பொழுதும் தன்னுடைய கருத்துக்களை ஒரு சதவிகிதமாகக் கூட ஏற்றுக் கொள்ளாத தோழிகளை நினைத்து ஆச்சரியமே மேலோங்கியது வாணிக்கு.

மேலும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு வாணியின் தோழிகள் புறப்பட, "அடடா உன் ஃப்ரண்ட்ஸ் எல்லாரும் உனக்கு ஆப்போஸிட்டா இருக்காங்களேக்கா நாளைக்கு உனக்கு வரப்போறவனும் இப்படித்தான் இருக்கப் போறான்னு நினைக்கறேன்" என்று தேவி நிச்சயமாக மனதில் எதையும் நினைக்காமல் சாதாரண மாகத்தான் சொல்லியிருப்பாள்.

ஆனால் தங்கையின் வார்த்தைகளின் அதிர்ச்சியில், தன்னையறியாமல் வந்த இரண்டு சொட்டுக் கண்ணீரில் தான் நடப்புக்கு வந்தாள் வாணி.

## 5



இருந்திருந்து எதற்குத்தான் இன்றைக்கு அப்பாவுடன் வந்தோமோ என்றாகி விட்டது வாணிக்கு.



எங்காவது சென்று அமரலாம் என்றால் தனிமையாக உணர்ந்தாள்.

அப்பா பாட்டுக்கு பிஸினஸ் பேசிக் கொண்டிருக்க ஆட்கள் கிடைத்துவிட்ட சந்தோஷத்தில் சுற்றுப்புறத் தையே மறந்து விட்டது தெரிந்தது.

அப்பா அறிமுகப்படுத்தியிருந்த பெண்களோ அங்கே வாருங்கள் இங்கே வாருங்கள் என்று அலைக்கழிக்க, பிடித்திருந்தாலும் போயிருப்பாளோ என்னவோ அவர் களின் ஜாடைமாடையான பேச்சு அதுவும் சுத்தமாகப் பழக் கமே இல்லாத வாணிக்கு கொஞ்சம் கூடப் பிடிக்க வில்லை.

தாமோதரனின் பால்ய நண்பனான குணசீலனின் மகள் திருமணத்திற்குத்தான் வந்திருந்தார்கள்.

தந்தையுடன் முதலில் தேவி வருவதாகத்தான் இருந்தது. இப்படித் தனிமையில் நிற்க நேரிடுமென்று முன்னரே தெரிந்திருந்தால் அந்த வாயாடியையே அனுப்பி யிருக்கலாமென்று நினைத்தாள் வாணி.

பெண்களால் ஆங்காங்கே மின்னலடிக்க, கேமராக் களும் வேறு தன்னுடைய வேலையை ஒருங்கே செய்ய அந்த சூழ்நிலையை ரசித்துக் கொண்டே எங்காவது சென்று அமரலாமென்று திரும்பியவள், தந்தை தன்னை அழைப்பதைப் பார்த்தாள்.

தனது தந்தையுடன் பலர் பேசிக் கொண்டிருந்தாலும், அந்த ஆறடிக்கும் மேலான உயரத்துடன் நின்றிருந்த அந்த இளைஞன் தனியாகத் தெரிந்தான்.

"வாணி இவர்தான் என்னோட டியர் மோஸ்ட் ஃப்ரண்ட் குணசீலன்னு ஏற்கனவே உனக்குத் தெரியும். இவர் பேரு

மதிவதணன், குணசீலன் அங்கிளோட சன். இவங்க இவரோட தங்கை நிவேதா, இவரோட பெரிய தங்கை ராதிகாவோட கல்யாணத்துக்குத்தான் இப்ப வந்திருக் கோம்னும் உனக்கே தெரியும்'' என்று சொல்லிவிட்டு விட்டடித்து விட்டது போல தந்தை சிரிக்க, சின்னப் புன்னகையுடன் அனைவருக்கும் பொதுவாக ஒரு ''ஹலோ'' சொன்னாள் கலைவாணி.

''என்னமா இன்னுந்தான் கொஞ்சம் சிரிக்கறது?''

''இந்தளவுக்குப் போதுமாப்பா?'' என்று முடிந்தவரை இதழ்களை விரித்து வெண் பற்களைக் காட்டினாள் வாணி.

அவளுடைய பாவனையில் அதுவரை பேசாமலிருந் தவர்கள் அனைவருமே சிரித்து விட்டார்கள்.

''இவள் என்னோட பெரிய மகள் கலைவாணி. கல் யாணத்துக்கு முதல்ல சின்னவ தேவிதான் வர்றதா இருந்தா, ஆனா ஒரு வேலைய செஞ்சு முடிக்கற வரைக் கும் அவ விஷயத்துல உறுதியா எதையும் சொல்லிட முடியாது'' என்று தந்தை சொல்லிக் கொண்டிருக்க, இந்த அப்பா இப்படியா எல்லாவற்றையும் சொல்லுவது என்று மனதிற்குள் சங்கடப்பட்டாள் வாணி.

''எந்த மேக்கப்பும் இல்லாம சிம்பிளாவே வாணிக்கா எவ்வளவு அழகா இருக்காங்க அங்கிள்?'' என்று நிவேதா உண்மையான ஆச்சரியம் காட்ட, பழக்கமில்லாதவர் களுக்கு மத்தியில் தன்னை சாதாரணம் போலக் காட்டிக் கொள்ள வாணி சற்றே சிரமப்பட்டாள்.

முக்கியமாக அந்த மதிவதணன் முன்னிலையில்.

ஆனால் அப்படிச் சொன்ன நிவேதாவும் அழகாக இருக்க, வாணியும் அதை வெளிப்படையாகவே சொன்னாள்.



''ரெண்டு பொண்ணுங்க புதுசா பாத்துக்கிட்டா முதல்ல பேசற விஷயம் இதுவாத்தான் இருக்கும்'' என்று சிரித் தான் மதிவதணன்.

''உன்னப் போலவே என் பெரிய மகள் வாணி குணத் துலயும் தங்கம்மா, எல்லாருக்குமே அவளப் பாத்ததுமே புடிச்சுப் போகும்'' என்று சந்தோஷமாக நிவேதாவிடம் சொல்லிக் கொண்டிருந்தார் தாமோதரன்.

''ஓ, அப்ப உங்க சின்ன மகள் அப்படியில்லையா அங் கிள்? இருங்க அடுத்த முறை வீட்டுக்கு வரும்போது தேவி கிட்ட சொல்லிக் கொடுக்கறேன்'' என்று மதிவதணன் சொல்வதைக் கேட்டு, ஏற்கனவே தனது வீட்டிற்கும் இவன் வந்திருக்கிறான் போலிருக்கிறதே என்ற எண்ணம் தான் வாணிக்கு மனதிற்குள் ஓடிக் கொண்டிருந்தது.

''எப்படியோ உங்க பெரிய பொண்ணு வாணி தேவிய விட குணத்துல ரொம்பப் பிரமாதம்னு சொல்றீங்க?'' என்று கண்களில் ரசனையுடன் வாணியைப் பார்த்தான் அவன்.

''அப்படியெல்லாம் ஒன்னுமில்ல, அவளுக்கு உங்கள மாதிரி அதிகமாப் பேசறவங்கள கொஞ்சம் தட்டி வெச்சுப் பழக்கம் அவ்வளவுதான்'' என்று வாணி அவனைப் பார்த்துச் சொல்ல, ''ஓஹோ'' என்று நன்றாகவே சிரித்தான் மதிவதணன்.

கோபப்படாததோடு, உடன் வந்து சேர்ந்துகொள் என்று சொல்லாமல் சொன்ன அவனது கம்பீரமான புன்னகை யில் அது ஒரு கணமே ஆனாலும் தன்னை மறந்தாள் கலைவாணி.

சில வினாடிகளுக்குள் தன்னிலை உணர்ந்து கொண் டாள் என்றாலும் அதற்குள் மதிவதணன் தன்னைக் கண்டு

கொண்டதில் வாணி மனதிற்குள் மிகவும் சங்கடமாக உணர்ந்தாள்.

நல்லவேளையாக மற்ற அனைவரும் மும்முரமாக வேறு எதைப்பற்றியோ பேசிக் கொண்டிருந்ததால் இவர்களைக் கவனிக்கவில்லை.

திருமணம் முடிந்து வீட்டிற்கு வந்துவிட்ட பின்னரும் கூட, மதிவதணனின் புன்னகை தன்னைத் துரத்திக் கொண்டிருப்பதைப் போலவே தோன்றி, மனதிற்குள் ஒரு குறுகுறுப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தது வாணிக்கு.

## 6



''வாணி.''

''என்னப்பா?''

''ஆபீஸ் கிளம்பலாமா?''

''நான் வரல டாடி.''

''ஏன் பாப்பா?''

''இன்னைக்கு ஒரு நாளைக்குத்தான், நாளைக்கு வந்துடறேனே.''

''என்ன பாப்பா, என்னாச்சு?''

''அதெல்லாம் ஒன்னுமில்ல டாடி, சும்மா ஒரு நாள் ரெஸ்ட் எடுக்கலாம்னு ஒரு எண்ணம் அவ்வளவுதான்.''

''இல்லையே வாணி, பாக்க ரொம்ப டல்லா இருக்கற மாதிரி தெரியறையேம்மா.''



தந்தை விடாமல் கேட்டுக் கொண்டே இருக்க, ''இந்த பாட்டிதான் டாடி'' என்றாள் மகள்.

''காலைல எழுந்ததுலிருந்து உங்கம்மா இருந்திருந்தா உங்கம்மா இருந்திருந்தான்னு அதையே பேசிட்டிருக்காங்க'' என்றவளுக்கு கண்களில் நீர்த்திரையிட்டது.

பேத்தியின் பேச்சையடுத்து மகனின் முகத்தைப் பார்த்த புஷ்பவள்ளிக்கு, அவனது கண்களில் தெரிந்த வலி மனதிற்கு மிகுந்த வேதனையை அளித்தது.

''என்னமா நீங்க எப்பதான் மாறுவீங்க?''

''அதில்லப்பா மருமக இருந்திருந்தா இந்நேரம் வாணிக்குக் கல்யாணத்த முடிச்சிருப்பா, ஆனா நீ அதப்பத்தி நினைக்கற மாதிரியே தெரியலையே.''

''அதெல்லாம் ஒரு சைட்ல பாத்துட்டுத்தான் இருக்கேன். இனி நீங்க அவளுக்கு முன்னாடி கீதாவோட பேச்ச தயவு செஞ்சு எடுக்காதீங்க'' என்று சன்னக் குரலில் உள்ளறைக்குள் சென்று கொண்டிருந்த மகளின் முதுகைக் காட்டி சொன்னார் தாமோதரன்.

''என்னவோ போப்பா, இருவத்தி ரெண்டும் ஆகப் போகுது அவளுக்கு. நீ எப்பப் பாத்து எப்பக் கல்யாணத்த முடிச்சு'' என்று அலுத்துக் கொண்டவர், பிறகு மகனுடைய நிலையையும் யோசித்து அவனையே தேற்றினார்.

''சரி விடுங்கம்மா, நீங்களும் போய் உங்க கடவுளயெல்லாம் கவனிச்சிட்டு சாப்பிடுங்க. ஆனா வாணிக்கு முன்னாடி இப்படி இன்னொரு தடவ நீங்க அவ அம்மாவப் பத்திப் பேசாதீங்க.''

''சரிப்பா.''

மகன் அலுவலகத்திற்குக் கிளம்பியதும் வழக்கம் போல பூஜையறைக்குச் சென்றார் புஷ்பவள்ளி.

மனம் மட்டும் வாணியைச் சுற்றியே ஓடிக் கொண் டிருந்தது.

என்னதான் பெரிய இழப்பென்றாலும், இப்படியா இல்லாதவர்களைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பது?

அவள் மட்டுமா? மகன் அந்தப் பெண்ணை மிஞ்சி விடுவான் போலிருக்கிறதே.

''பாட்டி.''

''என்னடாம்மா?''

''உனக்கு மண்டைல கொஞ்சமாவது ஏதாவது இருக்கா?''

''ஆமாண்டியம்மா, உங்க அப்பன் இப்பத்தான் ஒரு போடு போட்டுட்டுப் போறான் இனி நீ ஆரம்பிச்சுட்டியா?''

''ஆமாம், உனக்கு அப்படித்தான் வேணும்.''

''அது சரி, என்னடி விஷயம் சொல்லு?''

''இன்னொரு முறை என் டிரஸ்ஸ மாத்தி வெச்சு என்னத் தேட வெச்ச அப்புறம் நடக்கறதே வேற'' என்று பாட்டியின் கழுத்தில் இரு கைகளையும் வைத்து பொய்யாக் கோபம் காட்டினாள் தேவி.

''அப்படி எங்க மாத்தி வெச்சேனாம்?''

''ம், வாணியோட செல்ஃப்ல வெச்சிருக்கீங்க.''

''என்ன பண்றது அவளோட இடத்துக்குத்தான் கை தானாப் போகுது, அந்தளவுக்கு நீட்டா வெச்சிருக்கா.''

''வயசானாலும் உங்களுக்கு இந்த நக்கல் மட்டும் போகல.''



''அது சரி, முதல்ல போய் உங்கக்காவ சாப்பிட அழைச் சுட்டு வா.''

''ஏன்?''

''என்னது ஏன்?''

''அவ ஆஃபீஸ் போய்ட்டா தான?''

''ஆமாம் போ, அவ ரூம்ல போய்ப் பாரு, முடிஞ்சா டைனிங் ஹாலுக்குக் கூட்டிட்டு வா.''

''அதான் ஏன் பாட்டி?''

''என்னவோ மனசு சரியில்லன்னுட்டிருந்தா'' என்று சின்னப் பேத்தியிடம் முடிந்த அளவு மறைத்துப் பார்த்தார்.

''ஏன் மம்மிய நினைச்சு அழறாளா?''

''அப்படித்தான் போலிருக்குமா.''

''அவளுக்கு வேற வேலையில்ல. அவளுக்கு மம்மி இல்லாதது கூடப் பிரச்சனையில்ல, நீங்க இருக்கறது தான் பிரச்சனையே.''

''அடி பெண்ணே, அதுக்கு நான் என்னடி செய்யட் டும்? அந்தக் கடவுள் என்ன அழைச்சுக்க மாட்டேங் கறானே.''

''அடச்சீ வாயக் கழுவுங்க பாட்டி, நான் சொல்றது உங்க நச்ச.''

''வயசாயிட்டா எல்லாம் அப்படித்தான் இருக்கும். நீ போய் சாப்பிட்டுக் கிளம்புடி, நான் என் வேலைய சீக்கிரம் முடிச்சுட்டுப் போய் அவளப் பாக்கறேன்.''

''என்னவோ பண்ணுங்க'' என்று தேவி டைனிங் ஹாலுக்குப் போக, அங்கே வாணி தனக்கும் தங்கைக்கு

மாக இரண்டு ப்ளேட்களை எடுத்து வைத்துப் பரிமாறிக் கொண்டிருந்தாள்.

''என்னக்கா எல்லாம் சரியாயிடுச்சா?''

''என்ன சரியாயிடுச்சா? நீ முதல்ல சீக்கிரம் சாப்புட்டு முடிச்சுட்டு காலேஜ் கிளம்பு, அப்புறம் லேட்டாயிடுச்சுன்னு டிரைவரத் திட்டாத.''

''சரிக்கா. அந்தப்பாட்டி ஒரு நச்சுக்கா நீ ஒண்ணும் ஃபீல் பண்ணாத'' என்றவள், ''அந்த லூசுப்பாட்டிய நான் கவனிச்சுக்கறேன்'' என்று சாப்பிட ஆரம்பித்தாள் தேவி.

தங்கையின் பேச்சினால் வந்த சிரிப்பை முடிந்த அளவு மறைத்து, ''பெரியவங்களை நீ முதல்ல இப்படிப் பேசறத நிறுத்து தேவி'' என்றாள் வாணி.

''என்னவோ போ'' என்றவள், வேலைக்காரப் பெண்ணிடம் எதற்கோ எகிற ஆரம்பித்தாள்.

## 7



''மதி.''

''என்னமா?''

''நீ கொஞ்சம் வந்தா ராதிகாவப் போய்ப் பாத்துட்டு வரலாம்பா, பாவம் புது இடத்துல குழந்த தனியா தவிச்சுட்டிருப்பா.''

''போகலாம்மா, ஆனா இன்னைக்கேவா?''

''ஆமாம்பா, நாளைக்குக் காலைல அவங்க வெளியூர் கிளம்பிப் போனாங்கன்னா திரும்பி வரப் பத்து நாளாகுமே.''



''அது சரிமா, அப்பாவும் உங்ககூட வர்றார் தான?''

''பின்ன அவரில்லாமலா? நீயும் வாப்பா போய்ட்டு மதியத்துக்குள்ள நீ உன் வேலையைப் பார்க்க கிளம்பிடலாம்.''

''நான் வரலமா, நீங்க ரெண்டு பேரும் போய்ட்டு வந்துடுங்க.''

மகன் இந்தக் குரலில் சொல்லிவிட்ட பிறகு இனி அவனை வற்புறுத்தினால் கோபப்படுவானென்பது தெரிந்து விட, அத்தோடு விட்டு விட்டார் மஹாலட்சுமி.

ஏற்கனவே அவன் அவ்வளவாக பொறுமைசாலி கிடையாதென்பதோடு, தங்கையின் கல்யாணத்திற்காக கொஞ்ச நஞ்ச அலைச்சலா அலைந்திருக்கிறான்?

வெறும் உடல் உழைப்பு மட்டுமென்றால் அது சகஜமான விஷயம் தான்.

பல மடங்கு தங்களுடைய சக்திக்கு மீறிய இடமென்று தெரிந்திருந்தும், தங்கைக்கும் பையனைப் பிடித்து விட்டிருந்ததென்ற ஒரே காரணத்திற்காக முன்னின்று திருமணத்தை முடித்திருந்தான் மதிவதனன்.

அவர்களும் அப்பொழுதுதான் வீட்டைக் கட்டி முடித்திருந்ததால், இருந்த பணம் அனைத்தையும் அதற்கே செலவழித்திருந்தார்கள்.

நல்ல இடம் வந்திருந்தாலும் கையில் சுத்தமாகப் பணமே இல்லாமல் மகளின் திருமணத்தை எப்படி நடத்த முடியுமென்று பெற்றவர்கள் திகைத்துப் போய் நின்றுவிட, அந்த வாரத்திற்குள்ளேயே தங்கையின் திருமணத்திற்கான பாதி ஏற்பாடுகளை செய்து முடித்திருந்தான் மதிவதனன்.

என்னதான் மகனுடைய தொழில் நன்றாகப் போய்க் கொண்டிருந்தாலும், ஒரு திருமணத்தையே நடத்தி முடிப்பதென்பது சாதாரண விஷயமல்லவே என்று அவர்களுக்கு சற்று பயமாகக் கூட இருந்தது.

அதே நேரம் மகனுடைய திறமையிலும், ஒன்றை நினைத்து விட்டால் அதை சாதித்து முடிக்கும் வரை ஓய்ந்து விடாத அவனது முயற்சியிலும் பெற்றவர்களுக்கு முழு நம்பிக்கையிருந்தது. சொன்னதை விடச் சிறப்பாக தங்கையின் திருமணத்தை மகன் நடத்தி முடித்தபோது அவனை நினைத்து மிகவும் பெருமைப்பட்டுப் போனார்கள்.

''அண்ணா.''

''என்ன மேடம், இப்பதான் மணி ஒன்பதே ஆகியிருக்கு அதுக்குள்ள எழுந்து வந்துட்ட?''

''அடப் போங்கண்ணா, எனக்கென்ன உங்கள மாதிரி உடம்பு இரும்புலயா செஞ்சிருக்கு? கல்யாணம் முடிஞ்சு நாலு நாளாகியும் கூட அலைஞ்ச டயர்ட் எனக்கு இன்னும் சரியாகல.''

''நேரன்டா சாமி, மேக்கப் பண்ணிட்டு வந்து சேர்ல சும்மா உக்காந்துட்டு வந்ததுக்கேவா?''

''அதிருக்கட்டும்ணா, நான் நேத்து ஒன்னு கேட்டனே அத மறந்துட்டிங்களா?''

''எத?''

''அதாண்ணா அந்த செகண்ட் ஹேண்ட் கார், என்னோட மேம் விக்கறதா சொன்னாங்கன்னு சொன்னேன்ல.''

''நேத்தே வேண்டாம்னு சொன்னதா தான் எனக்கு ஞாபகம்.''



''திரும்பவும் யோசிக்கறதா சொன்னீங்க.''

''அடடா அப்படி யோசிச்சதால மட்டும் நம்ம நிதி நிலைமை தலைகீழா மாறின மாதிரி எனக்குத் தெரியலையே.''

''விளையாடாதீங்கண்ணா நான் சீரியஸா பேசிட்டிருக்கேன்.''

''ஓ அப்ப நான் ஜோக் பண்றேன்னு நினைச்சுட்டிருக்கியா?''

''அப்ப நாம அந்தக்கார வாங்கவே முடியாதா?''

''நாம இன்னைக்கிருக்கற ஸ்டேஜ்ல அத வாங்கறதைப் பத்தி நினைச்சுக்கூடப் பாக்க முடியாது. செகண்ட் ஹேண்ட் காரெல்லாம் எதுக்கும்மா நீ காலேஜ் படிச்சு முடிச்சு வெளிய வரும்போது நான் நீ சொன்ன அந்தக் காரயே புதுசா வாங்கித் தர்றேன்.''

''சரிண்ணா.''

தன் அண்ணன் தான் சொல்வதை நிச்சயமாக செய்து முடிப்பான் என்பதை அனுபவத்தில் கண்டிருந்ததால், நிவேதாவுக்கு அவன் சொன்னதைக் கேட்டு சந்தோஷமாகக்கூட இருந்தது.

இருந்தாலும் ''ஒரே கார் அதுவும் ஓட்ட மாருதி அதத்தான் எல்லாரும் யூஸ் பண்ணியாகணுமா?'' என்ற தங்கையின் முகத்திலிருந்த எரிச்சல் வெளிப்படையாகவே தெரிந்தது.

கடவுளே தங்கையும் தன் தாயைப் போலத் தானா? என்று மனதிற்குள் ஒரு வினாடி நினைத்தவன், பிறகு அப்படி எண்ணியதற்காகத் தன்னையே நொந்து கொண்டான்.

பாவம் சிறு பெண் குடும்ப வரவு செலவு தெரியாமல் விளையாட்டுத் தனமாக இருக்கிறாள்.

எப்படியாவது தனது வருமானத்தை உயர்த்தியாக வேண்டும். அதற்கு நேரங்காலம் பாராது பாடுபடவும் வேண்டுமென்று மனதிற்குள் நினைத்துக் கொண்டான் மதிவதணன்.

இப்பொழுதுமே ஒரு நாளில் நான்கில் மூன்று பங்கு நேரம் தன் தொழில் தவிர வேறு எண்ணமே இல்லாமல் உழைத்துக் கொண்டு தான் இருக்கிறானென்றாலும், எந்த விதத்திலும் தனது குடும்பத்தின் தற்போதைய நிலையை மேலும் உயர்த்துவதற்கு இது மட்டும் போதாது என்பது நிச்சயமாகத் தெரிந்தது.

அவனது தந்தை குணசீலன் எலக்ட்ரிகல் கடை ஒன்றை நடத்தி வருகிறார்.

அதில் ஓரளவு நல்ல வருமானமே வருகிறது என்றாலும், ஐந்து பேர் அடங்கிய ஒரு உயர்மட்ட நடுத்தரக் குடும்ப வாழ்க்கைக்கு அது பற்றாக்குறையாகவே தான் இருந்து கொண்டிருந்தது.

மதிவதணன் குடும்பத்தின் மூத்த பிள்ளை, அவனுக்கு சிறு வயதிலிருந்தே கம்ப்யூட்டர் துறை மேல் தீராத மோகம்.

புதிது புதிதாக எதையாவது செய்ய வேண்டுமென்ற வெறி, அந்த அளவிற்கு அவனது திறமையும் அசாதாரணமாகவே இருந்தது.

''மதி.''

''என்னப்பா?''



''இன்னைக்கு சாயங்காலம் நீ உன் வேலய கொஞ்சம் ஒதுக்கி வெச்சுட்டு எங்கூட வர முடியுமாப்பா?''

''என்னப்பா சொல்லுங்க.''

''தாமோதரன் அங்கிள் வீட்டுக்குத்தான் மதி, ரொம்ப நாளா நம்மளக் குடும்பத்தோட அழைச்சுட்டே இருக்கார்.''

''சரிப்பா அம்மாவையும், நிவேதாவையும் அழைச்சுட்டுப் போய்ட்டு வாங்க.''

''நீ?''

''எனக்கு வேலையிருக்கு.''

''என்னப்பா நீ, இப்படி ஓய்வே இல்லாம உழைக்க உன்னால மட்டும் எப்படி முடியுது?''

''அப்படியெல்லாம் இல்ல, எனக்காகப் பாக்க வேண்டாம் நீங்க மூணு பேரும் போய்ட்டு வாங்க.''

''என்னங்க அப்பாவும், மகனுமா ஏதோ பேசிட்டிருக்கீங்க?''

''இல்ல, மதி சாயங்காலம் தாமோதரன் வீட்டுக்கு நம்ம கூட வரலையாம்.''

''நல்லதுதான் குடும்பத்தோட ஒட்டு மொத்தமா போறது எனக்கும் பிடிக்கல, ஏற்கனவே பெரிய பணக்காரங்கன்னு சொல்றீங்க எல்லாரும் போனா மட்டமா நினைச்சுக்கப் போறாங்க.''

''சேசே, அவங்கெல்லாம் அந்த மாதிரி கிடையாதுமா.''

தனக்கும் ஓரளவு தாயின் கருத்து தானென்றாலும் அதைத்தானே ஒத்துக் கொண்டால் அப்பா வருத்தப் படுவதோடு, அம்மா பேசிக் கொண்டே இருப்பார்களென்று தான் வருவதற்கில்லையென்று ஒரே வார்த்தையில்

முடித்துவிட்டு தனது வேலையைப் பார்க்கக் கிளம்பிவிட்டான் மதிவதணன்.

"அம்மா."

"என்னடி சொல்லு? எங்களுக்கு லேட்டாயிடும் இனி ராதிகா வீட்டுக்குக் கிளம்பினாத்தான் சரியா இருக்கும்."

"அது சரிமா, நான் ஈனிவிங் வாணிக்கா வீட்டுக்கு எந்த டிரஸ் போட்டுட்டு வரட்டும்?"

"ராதிகா கல்யாண ரிசப்ஷனுக்குக் கட்டின சேலயக் கட்டிக்கோடி, அதான் பாக்க ரொம்ப நல்லார்க்கும்."

"அது வேண்டாம்மா, ரொம்ப ஓவரா இருக்கும்."

"இருக்கட்டுமேடி. அவங்க நம்மள ஒண்ணும் இல்லாதவங்கன்னு நினைச்சுக்கக் கூடாது பாரு அதான் சொல்றேன்."

ஒரு டிரஸ்ஸ வெச்சு மட்டும் நம்மளப் பத்தி முழுசா கணக்குப் போட்டுட மாட்டாங்க என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டவள், "அக்கா மேரேஜ்க்கு வந்தப்ப வாணிக்கா எவ்வளவு சிம்பிளா போட்டுட்டு வந்தாங்க தெரியுமா?" என்றாள்.

"பாவம் எப்படிப் போடணும்னு சொல்லிக் குடுத்திருக்க மாட்டாங்களா இருக்கும். அதான் அம்மா இல்லையே வயசானவங்க என்னத்த சொல்லித் தந்துடப் போறாங்க?"

"அச்சச்சோ அப்படியில்லமா, சிம்பிளா இருந்ததுன்னு சொன்னேனே தவிர எவ்வளவு சூப்பரா அழகா இருந்தது தெரியுமா?"

"போதும்டி."



"அட ஆமாம்மா, விலையும் என்னோட அக்கா ரிசப்ஷன் சேலைய விட குறைஞ்சது நாலஞ்சு மடங்காவது அதிகமாத்தான் இருக்கும்."

"அப்படின்னா நீ எந்த டிரஸ்ஸைப் போட்டுக்கப் போற நிவேதா?" என்று தாய் கவலையுடன் கேட்க, அதனால விலையெல்லாம் பாக்காம எனக்கு அழகா இருக்கற ஏதோ ஒரு சுடிதார் போட்டுக்கறேன்மா" என்றாள் பெண்.

"அப்படின்னா இப்பவே போய் அது எதுன்னு எடுத்துக் காட்டு" என்று தாய் சொல்ல, "இதோ இப்பவே எடுத்துட்டு வர்றேன்" என்று சென்றாள் நிவேதா.

## 8



"ஹாய் டாடி."

"அட பாப்பா வாடாம்மா!"

"என்ன டாடி இவ்வளவு ஆச்சரியம்?"

"இல்ல இன்னைக்கொரு நாளைக்கு யாரோ லீவ் கேட்டாங்கம்மா" என்றார் சிரிப்புடன்.

"அது யாரு டாடி?" என்று கேட்டுக் கொண்டே தந்தைக்கு எதிர்ப்புறமாக இருந்த சேரில் அமர்ந்த வாணி, அன்றைக்கு வந்திருந்த கடிதங்களைப் பிரித்து தானே பார்த்து விடுவதைப் பார்த்து முடித்துவிட்டு மற்றதை தந்தையின் பார்வைக்காக நகர்த்தி வைத்தாள்.

"நீ வந்ததும் நல்லதாப் போச்சு வாணி எனக்கு வெளிய வேலையிருக்கு முடிச்சுட்டு வந்துடறேன், ஏதாவது

டவுட்னா என் செல்லுக்குக் கூப்பிடு'' என்று கிளம்பினார் தாமோதரன்.

''அப்புறம் மதிவதணன் வருவாரும்மா, அவர்கிட்ட இந்தக் கவரக் குடுத்துடு'' என்று தந்தை கொடுத்ததை வாங்கிக் கொண்டாள் கலைவாணி.

''இது என்னன்னு நான் தெரிஞ்சுக்கலாமாப்பா?''

''கண்டிப்பாமா, நம்மகிட்டிருந்து ஒரு பதினாறு சென்ட் இடம் விலைக்கு வாங்கியிருக்கார், அதனோட ஒரிஜினல் டாக்குமெண்ட்.''

''ஓ, நாமகூட அத விக்கறதா பேப்பர்ல ஆட் குடுத் திருந்தோமே டாடி.''

''ஆமாம்மா, அதப் பாத்துட்டு தான் அவர் கேட்டதே.''

''அவருக்குன்னு விலைய ரொம்பவே குறைச்சிருப் பீங்க இல்லையாப்பா?''

''நல்லாக் கேட்டமா, முதல்ல அன் எக்ஸ்பெக்டடா போன் பண்ணியிருக்கார், நம்மளதுன்னு தெரிஞ்சதும் வேண்டாம்னு சொல்லிட்டார்.''

''ஏன்?''

''குணசீலனுக்காக நான் ரேட்டக் குறைச்சு சொல்லு வேனாம்.''

''அதுல அவருக்கு லாபம் தானே?''

''அவருகிட்ட அந்தப் பேச்சுக்கே இடமில்லமா, அதோட யாரோட தயவும் அவருக்குப் பிடிக்காது. அந்தத் தம்பி உழைப்பத் தவிர மத்த எப்படியும் முன்னுக்கு வர விரும்புறவர் கிடையாது.''



...............

''வெளிய புரோக்கர்கிட்ட இன்னைக்கு மார்க்கெட் ரேட் கேட்டு, அந்த விலையப் போட்டுக் குடுத்துட் டார்மா. சரி பாப்பா நான் கிளம்பறேன் மதியத்துக்குள்ள வந்துடறேன்'' என்று கிளம்பினார் தாமோதரன்.

வேலையில் மும்முரமாக இருந்த வாணி, இண்டர்காம் வர எடுத்துப் பேசினாள்.

''சரி ரெண்டு நிமிஷம் கழிச்சு அனுப்பு'' என்று சொன் னவள், எம்.டி. சீட்டில் சென்று அமர்ந்தாள்.

கதவைத் தட்டிவிட்டு உள்ளே வந்தவனை அமரச் சொன்னவளுக்கு, மனதிற்குள் ஏனோ சற்று பரபரப்பாக இருந்தது.

''என்ன சின்ன வேலையெல்லாம் கூட மேடம் பாக்க ஆரம்பிச்சுட்டிங்க போலிருக்கு?'' என்று வாணியைப் பார்த்தான் மதிவதணன்.

வாணிக்கு சில வினாடிகள் என்ன சொல்வதென்றே தோன்றாவிட்டாலும் ''நேத்தைக்கு ரொம்ப முக்கியமான வேலையொன்னு உடனே செய்ய வேண்டியதாயிடுச்சு'' என்றவள், இண்டர்காமில் யாரையோ அழைத்து இரண்டு டீ கொண்டு வரச் சொன்னாள்.

''உங்களுக்கு சின்னவேல மத்தவங்களுக்கு பெரிய வேலையா இருக்கலாம்.''

எல்லாம் இந்த அப்பாவால் வந்தது, இந்த குணசீலன் அங்கிளின் குடும்பத்தைப் பார்த்தாலே இப்படி அனைத்தை யுமா சொல்லி விடுவது என்று மனதிற்குள் எரிச்சல் பட்டாள் கலைவாணி.

''பேச விருப்பமில்ல போல?''

''பேச வேண்டிய அவசியமில்லாததுனால கூடப் பேசாம இருக்கலாமே.''

''பதில் சொல்ல முடியாதுன்னு வெளிப்படையாவே சொல்லியிருக்கலாம்'' என்று சற்றே குற்றம் சாட்டும் பார்வையுடன் வாணியைப் பார்த்தான் மதிவதணன்.

''ஸாரி நான் நேத்து அப்படி சொல்லியிருக்கக் கூடாது தான்.''

விசித்திரமான வகையில் விட்டுக் கொடுத்தும் கூட மனதிற்குக் கஷ்டமாக இருக்கவில்லை.

''உங்க ஸாரியெல்லாம் எனக்கெதுக்கும்மா? மத்தவங்க நேரத்துல நீங்க விளையாடாம இருந்தா சரி'' என்று அமர்த்தலாக உரைத்தவனைப் பார்த்தாள் கலைவாணி.

கதவைத் தட்டிவிட்டு உள்ளே வந்த அவளுடைய பி.ஏ. இரண்டு டீ கப்களைக் கொண்டு வந்து வைக்க, மதிவதணனை எடுத்துக் கொள்ளச் சொல்லி உபசரித்தாள் கலைவாணி.

பி.ஏ. தயங்க என்னவென்று கேட்டாள்.

''மேடம் இன்னைக்கு சேலரி டேட். பேங்க்ல கேஷ் ட்ராப் பண்ணனும்.''

''ஒரு நிமிஷம்'' என்று செக்கை எடுத்து தொகையை நிரப்பிக் கையெழுத்திட்டுக் கொடுத்தனுப்பினாள்.

''இப்பதான் வீட்ல டீ குடிச்சுட்டு வர்றேன், என்னக் கேக்காம நீங்க பாட்டுக்கு சொல்லிட்டிங்க?'' என்று டீயை எடுத்துக் கொண்டான் மதிவதணன்.



'சரியான கல்லுளி மங்கனாக இருப்பான் போலிருக்கிறதே. அனைத்திற்குமே ஏதாவது சொல்லுகிறான்' என்று வாணியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

வாணி குடிக்காமலே வைத்திருக்க, ''ஏன் எனக்குக் கம்பெனிக்காக சொன்ன டீயா?'' என்று கேட்டான் அவன்.

''இல்லில்ல ஸார், நான் டீ சாப்புட்ற டைம் தான்'' என்று டீயைக் குடிக்க ஆரம்பித்தாள் வாணி.

''ஓ, அப்ப உங்க கம்பெனிக்கு தான் நானா?'' என்று குடித்து முடித்துவிட்ட காலி கோப்பையை நகர்த்தி வைத்தான் மதிவதணன்.

''அந்த சின்ன வேலைய சின்ன விஷயமா எடுத்துட்டு இதோட மறந்துடறீங்களா?'' என்று வாணி அவனைப் பார்க்க, ''என்னது திரும்பவும் சின்ன வேலையா?'' என்று மதிவதணன் கேட்ட தோரணையில் இருவருக்குமே சிரிப்பு வந்து விட்டது.

# 9



''தேவி.''

''என்ன டாடி?''

''என்னடா பண்ணிட்டிருக்க?''

''டி.வி. பாத்துட்டிருக்கேன் டாடி பாத்தா தெரியல, பாட்டி தான் கண்ணு தெரியாம இப்படியெல்லாம் கேள்வி கேப்பாங்கன்னா நீங்களுமா?''

''யாருக்குடி கண்ணு தெரியாது. அதெல்லாம் உன்னை விடக் கூட எனக்கு நல்லாத் தெரியும். கண்ணாடியே போடாம பேப்பர் படிக்கறதைப் பாத்துட்டுத்தான இருக்க?''

''நிஜமாவே பேப்பர் படிக்கறீங்களோ இல்ல படிக்கற மாதிரி பந்தா விடறீங்களோ யாருக்குத் தெரியும்?''

''அது சரி, உங்கூடப் பேசி யாரால ஜெயிக்க முடியும்? போய் டிபன் எடுத்துக்கோடி வேலை முடியட்டும்.''

''ஏன் கொண்டு வந்து தர மாட்டாங்களோ?''

''உங்கக்காதான் உன்ன அங்க வரச் சொன்னாள்.''

''எதுக்காம்?''

''அதான் சாயங்காலம் உங்க அப்பா ஃப்ரண்ட் ஃபேமிலி வர்றாங்க தான, அவங்களுக்கு என்ன டிபன் செய்ய லாம்னு கேக்கறதுக்காக இருக்கும்'' என்றவர், ''எழுந்து போய் என்னன்னு கேளு'' என்று அதட்டிவிட்டுப் போனார் பாட்டி புஷ்பவள்ளி.

''ஆமா மகாராஜா, குடும்பம் வருது, அதுக்கு மெனு போடறாளாக்கும்?'' என்று முனகிக் கொண்டே எழுந்து உள்ளே போனாள் தேவி.

''ஏய் கலா, உன்னால டிபன் கூட கொண்டு வந்து தர முடியாதா?''

''அவ தர்றேன்னுதான் எடுத்துட்டு வந்தா, நாந்தான் உன்ன இங்க வரச் சொல்லி சொல்லியனுப்பினேன்.''

''என்ன வாணிக்கா, டி.வி.ல நல்ல ப்ரொகிராம் பாத் துட்டிருந்தேன் அதக் கெடுத்துட்டயே'' என்று சிணுங் கினாள் தங்கை.



''சரி சரி புலம்பாத தேவிக்குட்டி'' என்று தங்கையை விளையாட்டுக்குக் கொஞ்சிய வாணி, ''நைட்டுக்கு என்ன டிபன் பண்ணலாம்னு சொல்லேன்'' என்றாள்.

''என்ன நீ ஓவரா அலட்டிக்கற, யூசுவலா செய்யறது போதாது?''

''மெதுவா பேசு தேவி, டாடி கேட்டா மனசு கஷ்டப்பட மாட்டாரா?''

''இதப்பத்தியெல்லாம் எனக்கென்னக்கா தெரியும் செஞ்சு வெச்சா இப்படி எடுத்துச் சாப்பிடத்தான் தெரியும்'' என்றவள் அங்கு சூடாக பீங்கான் கிண்ணத்தில் ஸ்பூன் போட்டு வைக்கப்பட்டிருந்த பாதாம் அல்வாவை எடுத்துச் சாப்பிட ஆரம்பித்தாள் தேவி.

''சூப்பர்ப்'' என்று வாயை சப்புக் கொட்டியவள் ''நீங் களா செஞ்சீங்க நாயர் தாத்தா?'' என்று கேட்டாள்.

''ஆமாம்மா, அவ்வளவு நல்லார்க்குங்களா?''

''ஓ ரொம்ப, ஆனா டெய்லியும் இப்படி செய்யாதீங்க அப்புறம் ரொம்ப குண்டாயிடுவேன் இது மாதிரி'' என்று அங்கு வந்த தனது பாட்டியைக் கை காட்டினாள்.

''முந்திரி பக்கோடா எடுத்துக்கோங்க, சூடா இருக்கு'' என்று ஒரு ப்ளேட்டைக் கொண்டு வந்து வைத்தார் அவர்.

''வாவ் வாசனையே கமகமன்னு வருது என்றவள், ''உனக்குக்கா?'' என்றாள்.

''நான் எடுத்துக்கிட்டேன், நான் கேட்ட கேள்விக்கு நீ இன்னும் பதில் சொல்லவே இல்லையே.''

''டோன்ட் வொரிக்கா, நாயர் தாத்தா சாய்ஸ்க்கு விட்டு பிரமாதமா ரெடி பண்ணிடுவார்.''

''பின்ன நானா செய்யப் போறேன்'' என்றவள்,

''சரி நாம பேசின மாதிரி அந்த ஆறு டிபன்களையும் ரெடி பண்ணிடுங்க நாயர் தாத்தா'' என்றாள், வாணி.

''கலா உதவிக்கு நீயும், மணியும் கூட இருந்து எல்லாம் செய்ங்க.''

''சரிங்கம்மா.''

''கமலா நீ வீடெல்லாம் இன்னொரு முறை கூட்டித் துடைச்சுடு.''

''சரிங்க.''

''சீக்கிரம் விளக்கேத்தறதுக்கு முன்னாடி முடிச்சுடு. இல்லன்னா பாட்டி திட்டுவாங்க.''

''சரிங்கம்மா.''

''எல்லாப் பொருளும் இருக்கா, இல்ல ஏதாவது வாங் கிட்டு வரச் சொல்லி சகாயத்த அனுப்பனுமா நாயர் தாத்தா?''

''எல்லாமே இருக்கு. இன்னும் ரெண்டு மணி நேரத் துல எல்லாத்தையும் ரெடி பண்ணிடுவேன்மா.''

''ஒண்ணும் அவசரமில்ல, மெதுவா எட்டு மணிக் குள்ள வேலைய முடிச்சுட்டீங்கன்னாப் போதும்.''

''சரிங்கம்மா.''

''அக்கா சல்வார் பத்து செட் கடையிலிருந்து அனுப்பி வைச்சிருக்காங்க, வந்து பாரேன் ப்ளீஸ்.''

''லாஸ்ட் வீக் தான ஏழெட்டு சுடிதார் எடுத்த?''

''அவங்களாவே எப்பவும் போல புது கலெக்ஷன்ஸ அனுப்பி வெச்சிருக்காங்கக்கா.''



''எனக்கும் ஒரு நாலு செட் வேணும்'' என்று வாணி சொல்ல, ''சரி வாக்கா போய்ப் பார்க்கலாம்'' என்றவள் ''ஏய் கலா க்ரேப் ஜூஸ் ஒரு கப் என் ரூமுக்கு எடுத்துட்டு வா'' என்று விட்டுப் போனாள் தேவி.

''எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கு முடிச்சுட்டு அப்புறமா வர்றேன் தேவி'' என்றவள், ப்ரூட் சாலட் போடுவதற்காக பழங்களைக் கழுவி கட் செய்து டாபர் ஹைனி சிறிது ஊற்றிக் கலக்கி ஃபிரிட்ஜில் வைத்து மூடினாள்.

மற்றொரு முறை அனைத்து அறைகளையும் சென்று பார்த்தவள், கடைசியாக சமையலறைக்கு வந்து ''நாயர் தாத்தா நான் ஏதாவது உதவி செய்யணுமா?'' என்று கேட்டாள்.

''என்னமா நீங்க போயி? நீங்க உக்காருங்கம்மா ரொம்ப நேரமா வேல செஞ்சுட்டே இருக்கீங்க.''

''ஆமாம் போங்க இதெல்லாம் வேலையா?'' என்றவள், வெளியே லானில் போடப்பட்டிருந்த குடைச்சேரில் தந்தை அமர்ந்திருக்க தானும் சென்று சற்று ஆசுவாசமாக அமர்ந்தாள்.

''தாத்தா எங்க டாடி?''

''பின்னாடி தோட்டத்துக்குள்ள கொஞ்சம் நடக்கறேன்னு போனாரும்மா.''

''நீங்க எல்லாரும் டிபன் எடுத்துட்டீங்களா டாடி?''

''நாங்க ஆச்சு பாப்பா. பாசிப்பயிறு சுண்டல் பாட்டி செஞ்சிருப்பாங்க போலிருக்கு பிரமாதமா இருந்ததால நிறையவே சாப்பிட்டோம்.''

''செஞ்சது நானு, பாராட்டு மட்டும் பாட்டிக்கா?''

''நீயா செஞ்ச?''

''ஆமா டாடி, உங்க எல்லாருக்கும் ரொம்பப் புடிக்குமே அதான்.''

''அது சரி தான் உடம்புக்கும் ரொம்ப நல்லதாச்சே. நான் கொஞ்சம் ஆபீஸ் வரைக்கும் போய்ட்டு ஒரு மணி நேரத்துல வந்துடட்டுமா பாப்பா?''

''சரிப்பா, ஆனா வேலைல முழுகிப் போயிடக் கூடாது'' என்ற மகளிடம் ''இல்லம்மா சொன்ன மாதிரியே வந்துட்றேன்'' என்று கிளம்பினார் தாமோதரன்.

''வாணி.''

''என்ன பாட்டி?''

''இன்னும் அரை மணி நேரத்துல கோவிலுக்குக் கிளம்பப் போறேன், வர்றதா இருந்தா நீயும் கிளம்பு.''

''கண்டிப்பா பாட்டி'' என்றவள், போய் சீக்கிரமாகக் குளித்துக் கிளம்பி தனக்கு மிகவும் பிடித்தமான அந்த ஆழ்ந்த சிவப்பு நிறக் க்ரேப் சேலையைக் கட்டிக் கொண்டு வந்தாள்.

''உனக்கு சேல பிரமாதமா இருக்குடா கண்ணா'' என்றவர், சொன்னது போல சரியான நேரத்துக்குக் கிளம்பி வந்துவிட்ட தனது பேத்தியுடன் கோவிலுக்குக் கிளம்பினார் புஷ்பவள்ளி.

இருவரும் கோவிலுக்குப் போய்விட்டுத் திரும்ப மணி ஏழாகிவிட, அவசரமாக சமையலறைக்குச் சென்று பார்வையிட்டாள் வாணி.

''வேலையெல்லாம் எந்த அளவுல இருக்கு?''



''வாங்கம்மா எல்லாமே ரெடி இனி சாப்பிடும் போது எண்ணெய்ல போட்டு எடுக்கறது மட்டும் தான் மீதி'' என்றார் நாயர் தாத்தா.

''அப்பாடா ரொம்ப சந்தோஷம் இனி நீங்க கொஞ்ச நேரம் உக்காந்து ரெஸ்ட் எடுங்க'' என்றவள் ரெடியான அனைத்து பதார்த்தங்களையும் டைனிங் டேபிள் மேல் எடுத்து வைக்கச் சொல்லி அழகாக அடுக்கி வைத்தாள்.

அங்கிருந்த சிலருக்கு வாணியின் செய்கை சற்று ஆச்சரியமாக இருந்தாலும் யாரும் அதை வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

வாணி எப்பொழுதும் வீட்டுக்கு வருபவர்கள் யாராக இருந்தாலும் அலட்சியப்படுத்துபவள் கிடையாதென்றாலும், அன்றைக்கு அவளின் அதிகப்படி அக்கறை வெளிப்படையாகவே தெரிந்தது.

தட்டிக் கொடுத்து வேலை வாங்குவதிலும் சரி, வாய் நிறைய அழகாகப் பேசி மற்றவர்களைக் குளிர்விப்பதிலும் சரி, கஷ்டப்படும் நேரத்தில் யாருக்கு எந்த உதவி தேவைப்பட்டாலும் செய்வதிலும் சரி தான் பெரிய பணக்காரி அழகி என்ற அனைத்தையும் மறந்து மன நிறைவுடன் செய்யும் வாணியை அனைவருக்குமே மிகவும் பிடிக்கும்.

## 10



குணசீலன் குடும்பத்தினர் ஏழு மணிக்கு வந்து சேர்ந்தனர்.

தாமோதரனும், அவரது தந்தையும் வராண்டாவில் சேரில் அமர்ந்திருக்க, தேவி தனது பாடம் சம்பந்தமாக ஹாலில் அமர்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தாள்.

''வந்துட்டாங்க போலிருக்கு பாப்பா'' என்று தாமோதரன் எழுந்து செல்ல, வாணியும் தனது தந்தையுடன் சென்று அனைவரையும் சந்தோஷமாக வரவேற்றாள்.

ஒரே ஊர், பள்ளிப் பருவத்தில் ஒன்றாகப் படித்தவர்கள் என்ற அனைத்தையும் கடந்தும், நண்பர்கள் இருவருக்கும் நட்பு வளர்ந்திருந்தது.

திருமணம் ஆன பிறகும் கூட எத்தனையோ வேலைகளுக்கு நடுவிலும் குணசீலனும் தாமோதரனும் சொல்லி வைத்தே சந்தித்துக் கொண்டார்கள். நல்ல, கெட்ட விஷயங்களுக்கு வந்து போய்க் கொண்டும் இருந்தார்கள்.

பொருளாதார நிலையில் இரு நண்பர்களுக்கும் இடையே பல மடங்கு வித்யாசம் இருந்தாலும், அவர்களுக்கிடையே இருக்கும் நட்பு நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டு தான் இருந்தது.

தன் நண்பனைப் பார்த்ததும் சிறு பிள்ளை போல சந்தோஷப்படும் தந்தையைப் பார்க்க வாணிக்கு ஆச்சரியமாக இருந்தத.

''வா நிவேதா, வாங்க ஆன்ட்டி'' என்று இருவரையும் உள்ளே அழைத்துக் கொண்டு போனாள் வாணி.

அதற்குள் பாட்டியும் வந்து அனைவரையும் வரவேற்க, நண்பர்கள் இருவரும் பழைய கதைகள் பேச ஆரம்பித்திருந்தனர்.

மாளிகை போன்ற வீட்டைப் பார்த்ததில் பிரமிப்பு ஏற்பட்டாலும், அதை வெளியே காட்டிக் கொள்ளவில்லை மஹாலட்சுமி.



''உங்க கடைசிப் பொண்ணா?'' என்று பாட்டி மஹாலட்சுமியிடம் நிவேதாவைக் காட்டிக் கேட்க ''ஆமாம்மா'' என்றார் அவர்.

''உங்க பெரிய பொண்ணு கல்யாணத்துக்கு ஒரு நாலு நாள் முன்னாடி வாணியும், அவங்கப்பாவும் வந்திருந்தாங்களே'' என்று பாட்டி புஷ்பவள்ளி சொல்ல,

''ஆமாம் பாட்டி அன்னைக்குதான் நான் வாணிக்காவே ஃபர்ஸ்ட் டைம் பாத்தேன்'' என்று சந்தோஷமாக சொன்னாள் நிவேதா.

''மதி வரல போலிருக்குமா?''

''வரலம்மா.''

மதிவதனன் வராதது மனதிற்குக் கஷ்டமாக இருக்க, தன் எண்ணப்போக்கை நினைத்து மனதிற்குள் ஆச்சரியப்பட்டுக் கொண்டாள் வாணி.

தேவியும், நிவேதாவும் சம வயதினர் என்பதால், அப்பொழுது தான் முதன் முறையாக சந்தித்திருந்தும் கூட நன்றாக ஒட்டிக் கொண்டனர்.

''உக்காருங்க ஆன்ட்டி நான் இதோ வர்றேன்'' என்று வாணி உள்ளே செல்ல, தானும் அவளுடன் சென்றார் மஹாலட்சுமி.

''உனக்குதான் வேல நிறைய போலிருக்கு வாணி.''

''இல்ல ஆன்ட்டி, சமையல் எல்லாமே நாயர் தாத்தா தான். ரொம்ப சுத்தமா நல்லாவும் செய்வாருங்கறதால நாம நிம்மதியா இருக்கலாம்.''

வாணியின் முகம் பார்த்து அவள் அழைப்பதற்கு முன்னரே வந்து நின்று அவள் சொல்லும் வேலைகளை

சந்தோஷமாக செய்யும் வேலைக்காரர்கள் முதல் அங்கு அனைத்துமே மஹாலட்சுமிக்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்தன.

அதிலும் சிறு பெண்ணான வாணியின் பொறுமை, பெரியவர்களிடம் பழகும் தன்மை அனைத்தும் பிரமாத மாக இருப்பது தெரிய அதை வெளிப்படையாகவே சொன்னார் மஹாலட்சுமி.

''ஆமாம்மா வாணிக்கு மருமக மாதிரியே குணம்'' என்ற புஷ்பவள்ளி, டைனிங் ஹாலில் போடப்பட்டிருந்த சோபாவில் மஹாலட்சுமியுடன் சென்று அமர்ந்தார்.

''வாணி தாத்தாவ, உள்ள வரும்போது பாக்கலை யேம்மா.'

''சரியா நீங்க உள்ள வரும்போது அவருக்கு அவர் சினேகிதரோட போன்மா, எவ்வளவு நேரம் பேசினாலும் மனசே இல்லாம வெச்சுட்டு வருவார்'' என்று அவர் சொல்லிக் கொண்டிருக்க, டிபன் ப்ளேட்டுகளுடன் வந்தாள் வாணி.

''எடுத்துக்கோங்க ஆன்ட்டி'' என்று வாணி சொல்ல, பாட்டியும் உபசரித்தார்.

''வாணி நாயர்கிட்ட சொல்லி தாத்தாவுக்கு ஹார்லிக்ஸ் கலக்கச் சொல்லு அப்படியே எனக்கும் ஒரு கப் குடு.''

''சரி பாட்டி'' என்றவள், மற்ற டிபன் ப்ளேட்டுகளுடன் அங்கிருந்து நகர்ந்தாள்.

''நிவேதா, தேவி ரெண்டு பேரும் டிபன் எடுத்துக் கோங்க. அப்புறம் இன்னைக்குக் காலேஜ் போய்ட்டு வந்தாச்சா நிவேதா?''



''ஆமாக்கா இந்த சேலைல நீங்க ரொம்ப நல்லாரக் கீங்க.''

''ஓ, தேங்க்ஸ்'' என்று சிரித்தவள், ''நீ எடுத்துச் சாப்பிடு நிவேதா'' என்றாள்.

''சரிக்கா'' என்று நிவேதா சாப்பிட ஆரம்பிக்க, ''என்ன ரெண்டு பேரும் ஃப்ரெண்ட்ஸ் ஆயிட்டிங்க போலிருக்கு?'' என்று கேட்டாள் வாணி.

''நிவேதா கூடப் பேசினா டைம் போறதே தெரியலக்கா ரொம்ப ஜாலி டைப்பா இருக்கா'' என்று தேவி சொல்ல, ''நீயும் தான்'' என்று சந்தோஷமாக சொன்னாள் நிவேதா.

மதிவதணனைப் பற்றிக் கேட்க நினைத்த வாணி, முதலில் ராதிகாவைப் பற்றி விசாரித்தாள்.

''அக்காவும் மாமாவும் வெளியூர் போயிருக்காங்கக்கா'' என்று சொன்னவள், ''அண்ணா வந்திருக்கலாம் ஆனா வேற வேலையிருக்குன்னு சொன்னாரு'' என்றாள் நிவேதா.

''ஓ! ஸார் பெரிய பிஸினஸ் மேக்னட்டாக்கும், எல்லாம் முடிச்சுட்டாவது வரச்சொல்லேன் நிவேதா.''

''அண்ணா வரமாட்டார் தேவி, அவரு ஒன்ன நினைச் சுட்டா யாருக்காகவும் மாத்திக்க மாட்டார். சரி அதவிடு தேவி'' என்றவள், கையிலிருந்த ஸ்வீட்டை டேஸ்ட் பார்த்துவிட்டு வாணியிடம் ''சூப்பர்க்கா'' என்றாள்.

''ஓ அப்படியா, நானும் ஒன்ன நினைச்சுட்டா அத முடிக்காம விடமாட்டேன். பாக்கலாமா இன்னைக்கு உங்க அண்ணாவ நான் இங்க வர வைக்கறேன்'' என்றாள் தேவி.

''சும்மாயிரு தேவி, என்ன வேலையோ நீ பாட்டுக்கு பேசிட்டிருக்காத.''

''சான்ஸே இல்ல வாணிக்கா, அண்ணாவ வரவைக்க முடியாது'' என்றாள் நிவேதா.

''பாக்கலாமா?'' என்று தேவி பந்தயக் குரலில் கேட்க, நிவேதாவும் அதே குரலில் ''பாத்துடலாம்'' என்றாள்.

''சரி என்ன பந்தயம்?''

''என்னன்னாலும், ஏன்னா லாபம் எப்படியும் எனக்குத் தான்.''

''ஓ அவ்வளவு நம்பிக்கையா?'' என்றவள், அங்கு பக்கத்திலிருந்த பத்து சல்வார் பெட்டிகளையும் காட்டி ''இதுதான் பெட்'' என்றாள் தேவி.

''வேண்டாம் தேவி, உனக்கு லாஸ் பெரிசா இருக்கும்.''

''நோ ப்ராப்ளம், ஆனா நான் ஜெயிச்சுடுவேன்.''

''தேவி ஏமாந்து போயிடாத, எங்க அண்ணாவப் பத்தி உன்னைவிட எனக்கு நல்லாத் தெரியும்.''

''நிச்சயமா நிவேதா ஆனா என்னைப் பத்தியும் உனக்கு முழுசாத் தெரியாது தான'' என்றவள், மொபைலை எடுத்து நிவேதாவிடமே அவளது அண்ணனுடைய நெம்பர் கேட்டு டயல் செய்தாள்.

வாணிக்கு அவள் பேசுவதை நின்று கேட்க, ஆசையாய் இருந்தாலும், மற்றவர்களுக்கு டிபன் கொடுக்க வேண்டு மென்று அவ்விடத்தை விட்டு நகர்ந்தாள்.

காரணமே இல்லாமல் இதயத் துடிப்பு அதிகமாவது தெரிந்து, ஆச்சரியமாக இருந்தது வாணிக்கு.

''ஸ்நேக்ஸ் எடுத்துக்கோங்க அங்கிள்.''

''ஏன் பாப்பா இந்த நேரத்துக்கு இதையெல்லாம் கொடுத்தா, டிபன் எப்படிச் சாப்புட்றது?''



''அதனால தான் கொஞ்சமா வெச்சுக் கொண்டு வந்திருக்கேன் டாடி.''

''வாணி அப்படியே அவங்கம்மா மாதிரி இல்லையா?'' என்ற நண்பனிடம் ''ஆமாம்ப்பா'' என்றார் தாமோதரன்.

திரும்பவும் தாமோதரன் அவர்கள் பேசிக் கொண் டிருந்த பழைய பேச்சுக்கே போய்விட, அங்கிருந்து சென்றாள் கலைவாணி.

லேசாகப் படபடத்த மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு, ''என்ன நிவேதா உங்கண்ணா என்ன சொல் றார்?'' என்று கேட்டாள் வாணி.

''அதேங்கா கேக்கறீங்க? தேவி பயங்கரமான ஆள் தான்.''

''ஏன், என்ன சொன்னா?''

''அண்ணாவுக்கு போன் பண்ணி அவர் லைன்ல இருக்கும்போதே அவருக்குக் கேக்கற மாதிரி வெச்சுக் கிட்டு எங்கப்பாகூடவும், அங்கிள்கூடவும் பேசற மாதிரி பேசிட்டிருக்காக்கா.''

''சரி டாடி நீங்க சொல்ற எல்லாத்தையும் சொல்லிட் டேன். இனி நீங்க தனியா போன்ல பேசலேன்னா என்ன அதான் நேர்ல வரப் போறாரேன்னு சொல்லிட்டு, சரி அங்கிள் நீங்க சொன்னதையும் சொல்லிடறேன்னு அண்ணாவுக்குக் கேக்கற மாதிரி சொல்றாக்கா.''

''பின்ன என்னப்பத்தி என்ன நினைச்ச?''

''நிவேதா அண்ணா என்ன சொன்னார்?'' என்று வாணி கேட்க தேவியால் சிரிப்பைக் கட்டுப்படுத்த முடிய வில்லை.

''அவர் எல்லாத்தையும் உண்மைன்னு நம்பிட்டாருக்கா, பாரேன் இன்னொரு பத்து நிமிஷத்துல விழுந்தடிச்சுட்டு வந்து நிக்கப் போறார்'' என்றாள் தேவி.

''சரி எங்கண்ணா என்னதான் சொன்னார்?''

''ஓ அப்ப என்ன ஆவலா எதிர்பாத்துட்டிருக்கீங்க போலிருக்குன்னு சிரிக்கறார் நிவேதா.''

''பாரேன் இன்னும் கால் மணி நேரத்துல உங்க அண்ணா இங்க இருக்கப் போறார்'' என்று தேவி சொல்ல, ''சான்ஸே இல்ல எங்கண்ணாவப் பத்தி உனக்குத் தெரியாது'' என்றாள் நிவேதா.

என்னதான் சாதாரணமாக சொல்லிவிட்டாலும், பந்தயத்தில் தோற்று விடுவோமா என்ற சிறு பயம் என்னவோ நிவேதாவுக்கு வந்து விட்டிருந்தது.

''சரி ரெண்டு பேரும் வாங்க டிரெஸ் எல்லாம் பாக்கலாம்'' என்று வாணி அழைக்க, சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டே மூவரும் அனைத்தையும் பார்த்து முடித்தார்கள்.

இருப்பதிலேயே மிகக் குறைந்த விலையே மூவாயிரமாக இருக்க, தான் அணிந்திருப்பதைவிட இரண்டு மடங்கு அதிகமென்று நினைத்துக் கொண்டாள் நிவேதா.

''நிவேதா உனக்கு இன்னைக்கு லக்கிடே தான்.''

''ஏன் வாணிக்கா அப்படிச் சொல்றீங்க?''

''நீதான் பந்தயத்துல ஜெயிக்கப் போறியே, உங்கண்ணா வரமாட்டார்னு தான் எனக்கும் படுது.''

''சரியா சொன்னீங்கக்கா'' என்று நிவேதா சொல்ல, ''ரெண்டு பேரும் நல்லா ஏமாறப் போறீங்க'' என்றாள் தேவி.



''சரி தேவி நிவேதாக்கு நம்ம வீடெல்லாம் சுத்திக் காட்டு பேசிப் பேசியே போரடிக்காத.''

''தேவி ஒண்ணும் போரடிக்கலக்கா'' என்று நிவேதா சொல்ல, ''பெரிய மைசூர் மஹாராஜா அரண்மனை சுத்திக் காட்டணுமாக்கும்'' என்ற தேவி ''சரிவா'' என்று நிவேதாவின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனாள்.

காலி ட்ரேயோடு கிச்சனுக்குப் போனவள், அங்கு நிவேதா அம்மாவும் பாட்டியும் சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

மனது ஏனோ பாரமாக இருக்க, ஏனென்று யோசிக்கப் பிரமாத மூளை தேவையிருக்கவில்லை.

குணசீலன் அங்கிள் குடும்பம் வரப் போகிறதென்று தெரிந்ததிலிருந்தே, மனதிற்குள் ஏற்பட்ட சந்தோஷம் ஞாபகத்திற்கு வந்தது.

உள் மனது மதிவதனனை மிகவும் எதிர்பார்த்திருக்கிறது.

அவன் வராதது ஏமாற்றமாயிருக்கிறது.

ஆனாலும் இந்த அளவுக்கா?

யாரோ ஒரு மதிவதனன் வராததற்கு தன் மனம் ஏன் இவ்வளவு பாரமாகி விட்டது?

மேலும் அதே கோணத்தில் யோசித்துக் கொண்டே போனவளுக்கு, திடீரென நிற்க முடியாமல் கால்கள் துவண்டு போயின.

அவசரமாகக் குளியலறைக்குள் சென்று கதவைத் தாளிட்டவள், குளிர்நீரை எடுத்து முகத்திலடித்துக் கழுவினாள்.

கடவுளே நான் ஏன் இப்படி ஆகி விட்டேன்? என்று நினைத்தவளுக்கு அழுகை வரப் பார்த்தது.

சிரமப்பட்டு அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண் டாள், பிறகு என்னவென்று கேட்பவர்களுக்கு பதில் சொல்ல முடியாமல் திணற நேரிடும்.

வெளியே பாட்டி அழைப்பது கேட்க, மனதை திடப் படுத்திக் கொண்டு வெளியே வந்தாள் வாணி.

''சொல்லுங்க பாட்டி.''

''காணலயேன்னு கூப்பிட்டேன், டிபன் எடுத்து வைக்க லாமா வாணி.''

''இன்னும் கொஞ்ச நேரம் போகட்டும் பாட்டி, நான் ஒரு பத்து நிமிஷத்துல வர்றேன்.''

''சரிமா.''

சிறிது நேரத்தில் டின்னருக்காக அனைவரும் வந்து அமர, பரிமாறினாள் கலைவாணி. உடன் அமர்ந்து கொள்ளுமாறு அனைவரும் சொல்லியும், மறுத்து விட் டாள்.

''என்ன இன்னும் காணோம்'' என்று தேவி கேட்க, சிரித்தாள் நிவேதா.

''இப்பக்கூட நீ தப்பிச்சுக்கலாம்'' என்று நிவேதா சொல்ல, மற்றவர்கள் என்னவென்று கேட்டார்கள்.

வாணி பந்தயத்தைப் பற்றிச் சொல்ல, ''அவன் ஒரு அவசர வேலையா மதியம் ரெண்டு மணிக்கே சென் னைக்கு ஃப்ளைட் ஏறிட்டானேம்மா'' என்றார் குணசீலன்.

தேவி நிவேதாவைப் பார்க்க, ''அச்சச்சோ அப்படி யாப்பா?'' என்று கேட்டாள் அவள்.



''ஆமாம்மா, உனக்குத் தெரிய வாய்ப்பில்லை தான். மதி திடீர்னு கிளம்பிப் போனதாச்சே.''

''நிஜமாவே எனக்குத் தெரியாது தேவி'' என்று நிவேதா சொல்ல, வாணியால் சிரிப்பைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

''அண்ணா சாயந்தரம் கடைக்கு வந்து உங்கள ரிலீவ் பண்றதா சொல்லிட்டிருந்தாரேப்பா'' என்று நிவேதா கேட்டுக் கொண்டிருக்க, தனது செல்போன் ஒலிக்க ''அவந்தான்'' என்று எடுத்துப் பேசினார் குணசீலன்.

சில வினாடிகள் பேசிவிட்டு போனை வைத்தவர், ''ஒரு பிஸினஸ் மீட்டிங்காகத்தான் திடீர்னு கிளம்பிப் போனான்'' என்றார் பொதுவாக.

''போதும்மா வாணி, அப்படியே நீயும் உக்காந்துக்கோ.''

''இல்ல அங்கிள், நான் அப்புறமா சாப்பிட்டுக்கறேன்.''

''மதி எப்பக் கிளம்பறான்?'' என்று மஹாலட்சுமி கேட்க, ''திரும்பவும் கூப்பிடுவான்'' என்றார் அவர்.

தேவி கமுக்கமாக சிரிக்க, என்னவென்று கேட்டாள் நிவேதா.

''இல்ல நான் அப்பா, அங்கிள் ரெண்டு பேரும் சொல்ற மாதிரியெல்லாம் பேசினது அவருக்கு எவ்வளவு சிரிப்பா இருந்திருக்கும்?''

''அதானே அப்பக்கூட இந்த அண்ணா உண்மைய சொல்லலையே'' என்று நிவேதா சற்றே கோபத்துடன் சொல்ல, அவன்தான் மகா அழுத்தக்காரனாயிற்றே என்று எப்பொழுதும் போல மனதிற்குள் நினைத்துக் கொண்டாள் கலைவாணி.

டிபன் சாப்பிட்டு முடித்த பிறகு கூட ஒரு மணி நேரம் கழித்தே நிவேதா குடும்பத்தினர் கிளம்பினர்.

அவர்கள் காருக்குப் பக்கத்தில் போவதற்குள் தேவி அனைத்து சல்வார் கவர்களையும் கொண்டு போய் காருக்குள் வைத்திருந்தாள்.

நிவேதா நிறைய நேரம் பேசியும் தேவி அவற்றைத் திரும்ப எடுத்துக் கொள்ள மறத்து விட்டாள்.

''நாந்தான் தோத்துப் போய்ட்டனே பின்ன எதுக்கு உனக்கு சேர வேண்டியத வாங்கிக்க மாட்டேங்கற?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் தேவி.

''பந்தயமே தப்பாயிடுச்சே, அண்ணா தான் ஊர்லயே இல்லையே, அதான்.''

''உங்கண்ணா இங்க லோக்கல்லயே இருந்திருந் தாலும் வந்திருக்க மாட்டார், பேசாம எடுத்துட்டுப் போ நிவேதா.''

''ஏதோ கடைசியாவாவது புரிஞ்சுகிட்டயே'' என்று சிரித்தவள், ''சரி பாதிய வேணும்னா எடுத்துக்கறேன்'' என்றாள்.

''இன்னொரு அஞ்சு நிமிஷம் பேசினா மீதியயும் சேத்து எடுத்துக்குவியா?'' என்று தேவி கேட்க, ''மாட்டேன் அதுக்கும் மேல நீ கம்பல் பண்ணிக் குடுத்தனுப்பினா நாளைக்கே பார்சல் சர்வீஸ்ல எல்லாத்தையும் திருப்பி அனுப்பி விட்டுடுவேன்'' என்றாள் நிவேதா.

அதுவரை வேறு ஏதோ மும்முரமாகப் பேசிக் கொண் டிருந்த பெரியவர்கள், ''இன்னுமா நீங்க முடிச்சுக்கல?'' என்று தேவியையும், நிவேதாவையும் பார்த்தனர்.



கடைசியாக ஏற்கனவே நிவேதா தனக்குப் பிடித்ததாக சொல்லியிருந்தவற்றில் ஐந்தை எடுத்துக் கொடுத்து விட்டு மீதியை எடுத்துக் கொண்டாள் தேவி.

''அண்ணாகிட்ட என்ன பதில் சொல்றதுன்னு தெரி யல'' என்று புலம்பிக் கொண்டே நிவேதா வாங்கிக் கொள்ள, ''நீ கவலைப்படாம போ அவர்கிட்ட நான் சொல் லிக்கறேன்'' என்று பெரிய மனுஷியாய் விடை கொடுத்து அனுப்பினாள் தேவி.

## 11



''அக்கா வா.''

''என்ன தேவி, நீ மாறவே மாட்டியா?''

''ம், உனக்கு பர்த்டேன்னு ஊர்ல இருக்கற எத் தனையோ இல்லாதவங்களுக்கு சாப்பாடு அது இதுன்னு எவ்வளவோ செஞ்சிருக்க, எங்களுக்காக ஒரு கேக் கூட வெட்ட மாட்டியாக்கும் நீ வா முதல்ல'' என்று வாணியைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்தாள் தேவி.

அங்கு ஹாலில் அலங்கரிக்கப்பட்ட பெரிய கேக் வைக்கப்பட்டிருக்க, அங்கிருந்த தாத்தா பாட்டி தந்தை மற்றும் வேலையாட்கள் அனைவரையும் பார்த்தாள் வாணி.

''என்ன மேடம் உங்களுக்காக எவ்வளவு நேரம் வெய்ட் பண்றது?'' என்று தந்தை கேட்க ''நீங்களு மாப்பா?'' என்று குறைபட்டாள் கலைவாணி.

"என்ன பொண்ணுடி நீ? ஒண்ணும் இல்லாதவங்கெல்லாம் எவ்வளவு பந்தா விட்டுக்கறாங்க. ஆனா நீ இப்படி இருக்க?" என்றார் புஷ்பவள்ளி.

அனைவரும் வாழ்த்த, கேக்கை கட் செய்து முடித்த வாணி ப்ளேட்டில் வைத்து அனைவருக்கும் கொடுத்தாள்.

"நீங்க ரெண்டு பேரும் குணத்துல தான் எதிர்ப்பதம்னு பாத்தா எல்லா விஷயத்துலயுமே எதிராதான் இருக்கீங்க. உனக்குப் பிறந்தநாள்னா நீ குறைஞ்சது ஒரு இருநூறு பேரையாவது அழைச்சிருக்க மாட்ட?" என்று தனது சின்னப் பேத்தியைப் பார்த்தார் பாட்டி புஷ்பவள்ளி.

"பின்ன என்னயும் அவள மாதிரியே இருக்கச் சொல் நீங்களா?" என்று கேட்டவள், "அக்கா எனக்கு இன்னொரு பீஸ் கேக் குடேன்" என்று கேட்டாள்.

"வேணும்னா நீயே எடுத்துக்கோ போடி" என்ற வாணி, ஒரு கேக் துண்டை எடுத்துக் கொண்டு வெளியே லானில் போடப்பட்டிருந்த அந்த இரும்பு ஊஞ்சலில் போய் அமர்ந்தாள்.

கீழே இருந்த பசிய புல்வெளியும், சுற்றிலும் இருந்த செடி கொடிகளும், முகத்தில் வந்து மோதிய குளுமையான காற்றும் மனதிற்கு மிகுந்த இதத்தைக் கொடுத்தன.

மூன்று பேர் தாராளமாக ஆடக்கூடிய அந்த ஊஞ்சலில் "அக்கா நானும்" என்று தேவியும் கேக் ப்ளேட்டோடு வந்து அமர்ந்தாள்.

"ஏய் நீ வேகமா ஆடுவியே இரு நான் இறங்கிக்கறேன்" என்று இறங்க முயன்ற வாணியைத் தடுத்துவிட்டு மிகவும் வேகமாக ஆடவும் செய்தாள் தேவி.



"என்ன விட்டுடேன் இறங்கிக்கறேன்" என்று வாணி கெஞ்சியும் கேட்காமல் தன் பாட்டுக்கு அதே வேகத்துடன் ஊஞ்சலை நிறுத்தாமலே ஆடிக் கொண்டிருந்தாள் தேவி.

அதே நேரம் உள்ளே வந்து பைக்கை விட்டு இறங்கியவனை வெளியே வந்த தாமோதரன் சந்தோஷமாக வரவேற்க, "முதல்ல நிறுத்து தேவி" என்று தனக்கு இடது பக்கமாக அமர்ந்திருந்த தங்கையின் வலது கையைப் பிடித்து வாணி அழுத்த ப்ளேட்டோடு கேக் கீழே விழுந்து சிதறியது.

அதற்குள் தங்களுக்கு அருகிலேயே வந்து விட்டிருந்த மதிவதனனை, ஊஞ்சலிலிருந்து கீழே இறங்கி விட்டிருந்த வாணியும் வரவேற்றாள்.

"அப்புறம் தேவி நேத்து என்ன ரொம்பவும் எதிர்பாத்த போல" என்றவன், "ஐடியா வந்தது இங்கிருந்தா?" என்று வாணியைப் பார்த்தான்.

"என்னது வாணியா? அவ கருத்துல பட நீங்கன்னு இல்ல எந்த ஆணாலும் முடியாது" என்று தங்கை சொல்ல, அவன்தான் தேவையின்றி வாயைப் பிடுங்குகிறானென்றால் தங்கை அவனையும் மிஞ்சி விடுவாள் போலிருக்கிறதே என்று மனதிற்குள் சங்கடத்துடன் நினைத்தாள் வாணி.

தொடர்ந்து வாணியைப் பார்த்தவன், "அப்படியா?" என்று கேட்டு கண்களால் சிரித்தான்.

எதுவும் பேசாமல் தன்னை சாதாரணமாகக் காட்டிக் கொண்டாலும், தன் மனதிற்குள் ஏற்பட்ட ஒரு இனம் புரியாத படபடப்பைத் தன்னால் முழுமையாக மறைக்க முடியவில்லையென்றே வாணிக்குத் தோன்றியது.

அதற்குள் மதிவதணன் தாமோதரனைத் தொடர்ந்து வீட்டிற்குள் சென்றிருந்தான்.

"அக்காவோட பர்த்டேக்கு வரணும்னு முடிவு பண்ணிதான நேத்து வராம இன்னைக்கு வந்திருக்கீங்க?" என்று மதிவணனைப் பார்த்தாள் தேவி.

"அட கரெக்டா கண்டு பிடிச்சுட்ட" என்றவன் "உன் அக்காவுக்கும் சேத்து வெச்சு நீயே பேசுவ போலிருக்கே" என்றான்.

"அதுலென்ன சந்தேகம்? விட்டா உங்களுக்கும் சேத்து வெச்சுக்கூட நானே பேசுவேன்."

"அதனால தான் நானும் வாயாடிங்ககிட்ட என்னைக் குமே ஒரு கேப் மெயின்டெய்ன் பண்றது."

"ஆனா அதெல்லாம் எங்கிட்ட முடியாது, என்னைக் குமே உங்கள மாதிரி இருக்கறவங்கள பேச வெக்கறது தான் எனக்கு ரொம்பப் புடிக்கும்."

"ஓ, அப்ப சரிதான் நீ ரொம்பப் பெரிய வாயாடி தான் ஒத்துக்கறேன். உங்கிட்ட கேப் மெயிண்டெய்ன் பண்ற வீண் முயற்சில எல்லாம் நான் இறங்கல போதுமா?"

வாணி ஸ்நேக்ஸ் ப்ளேட்டைக் கொண்டு வந்து வைத்து உபசரிக்க, "மெனி மோர் ஹேப்பி ரிட்டன்ஸ் ஆஃப் தி டே" என்று வாழ்த்தினான் மதிவதணன்.

ஒற்றை வார்த்தையில் நன்றியுரைத்துவிட்டுத் திரும்பிய வளை தந்தை அழைக்க, திரும்பி அவரைப் பார்த்தாள் வாணி.

"ரொம்ப நாளா நாங்க உங்களக் கேட்டுட்டிருந்தத நாங்க எதிர்பார்த்தத விடப் பிரமாதமா வேறொரு இடத்து



லிருந்து செஞ்சு குடுத்திருக்காங்கன்னு அந்தக் கம் பெனில இருந்து கூப்புட்டு சொன்னதா காலைல நீ சொல்லிட்டிருந்தயே பாப்பா."

"ஆமா டாடி."

"அந்த ப்ராஜெக்ட செஞ்சு குடுத்ததே இவர்தான்" என்று மதிவதணனைக் காட்டினார் தாமோதரன். "நிஜ மாவே ரொம்பப் பிரமாதமான, ரொம்பப் பெரிய வேலை தான் செஞ்சிருக்கீங்க" என்று மனதாரப் பாராட்டினார் தாமோதரன்.

"ரொம்ப நன்றி ஸார். நிஜமாவே அந்தப் ப்ராஜக்ட் செஞ்சு முடிக்கும் போது இருந்தத விட, உங்கள மாதிரி ஒரு பெரிய பிஸினஸ் மேன்கிட்ட இருந்து வர்ற உண்மை யான பாராட்டுல தான் எனக்கு ரொம்பப் பெருமையாவும் சந்தோஷமாவும் இருக்கு" என்று உணர்ந்து சொன்னான் மதிவதணன்.

"ஆனாலும் என்ன ஊக்குவிக்கறதுக்காக கொஞ்சம் மிகைப்படுத்தி சொல்றீங்கன்னு நினைக்கறேன்" என்றவன் "என்ன வெறும் கேக் மிக்சரோட என்ன அனுப் பிடலாம்னு ஐடியா போலிருக்கு" என்று வாணி கொண்டு வந்து வைத்திருந்த ப்ளேட்டைக் காட்டிக் கேட்டான் மதிவதணன்.

"அதுவும் இன்னைக்கா சான்ஸே இல்ல" என்று ஹாலுக்கு வந்தாள் தேவி.

"என்ன சான்ஸே இல்ல" என்று சின்ன மகளிடம் தாமோ தரன் கேட்க, தானும் தங்கையைப் பார்த்தாள் வாணி.

"இன்னைக்கு தனக்கு பர்த்டேன்னு சொல்லி ரோட்ல போறவங்கள்ள இருந்து குறைஞ்சது பல நூறு பேருக்

காவது சாப்பாடு குடுத்திருப்பா, அப்படியிருக்கும் போது டாடிக்கு ரொம்ப வேண்டியவரான உங்களுக்கு விருந்து உபசரிப்பே நடக்கும் கவலையே படாதீங்க'' என்று தந்தையின் அருகில் சென்று அமர்ந்தாள் ஸ்ரீதேவி.

''அப்பாடா இப்பதான் நிம்மதி'' என்று மதிவதணன் சொன்ன பாவனையில் தேவியும், தாமோதரனும் சிரிக்க, ''அது சரிதான் சாப்புட்ற எண்ணமும் வயித்துல இடமும் இருந்தா இன்னைக்கு நீங்கன்னு இல்ல யாரா இருந் தாலும் இந்த வீட்ல இருந்து சாப்பிடாம வெளிய போக முடியாது'' என்று மதிவதணனைப் பார்த்துச் சொன்னாள் வாணி.

''அடடா எப்படியோ சுத்தி வளைச்சு மறைமுகமா வாவது சாப்பிடச் சொன்னதுக்கு ரொம்ப நன்றி'' என்று மதிவதணன் வாணியைப் பார்க்க, வாணியாலும் இந்த முறை சிரிப்பை அடக்கிக் கொள்ள முடியவில்லை.

''ஸார்'' என்ற அழைப்பில் அனைவரும் வாயிலைப் பார்க்க, சுந்தரம் மோட்டார்ஸிலிருந்து சீருடையுடன் வந்து நின்றிருந்த அவன் கண்களில் பட்டான்.

''என்ன கார் ரெடியா?'' என்று தாமோதரன் கேட்க, ''ஆமா ஸார் டெலிவரிக்கு எடுத்துட்டு வந்திருக்கேன் கார் வெளிய இருக்கு'' என்றான் அவன்.

''என்ன கார் எதுக்கு?'' என்று வாணி கேட்டுக் கொண்டிருக்கும்போதே, ''அது சர்ப்ரைஸ்'' என்று எழுந்து வெளியே போனாள் தேவி.

''வெளிய வந்து பாரு புரியும்'' என்று தனது பெரிய மகளைப் பார்த்த தாமோதரன், ''வாங்க மதிவதணன்'' என்று அவனுடன் வெளியே சென்றார்.



எதுவும் புரியாமல் வெளியே சென்ற வாணி அங்கு புதிதாக நின்றிருந்த அந்த விலையுயர்ந்த காரை ஆச் சரியமாகப் பார்க்க, ''உன் பர்த்டேக்கு எங்க ப்ரஸண்ட்கா'' என்று குதித்தாள் தேவி.

''எதுக்கு டாடி இதெல்லாம்?'' என்று வாணி தனது தந்தையைப் பார்க்க, அவர் மதிவதணனுடன் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்.

''நானும் டாடிகிட்ட அதத்தான் கேட்டேன். நீ எப்பவோ இந்தக் கார் ரொம்ப நல்லார்க்குன்னு சொன்னியாம், அப்பவே இத உன் பர்த்டேக்கு ப்ரஸன்ட் பண்ணணும்னு மனசுக்குள்ளே முடிவு பண்ணி அதே மாதிரி இப்ப செஞ்சுட்டார்'' என்று வாணியைப் பார்த்தாள் தேவி.

''என்ன டாடி இது?'' என்று வாணி தனது தந்தையைப் பார்க்க, ''நீதான் அவருக்கு எப்பவுமே ஸ்பெஷலாச்சே பந்தா பண்ணாம வாங்கிக்கோ'' என்று உதட்டைப் பிதுக் கினாள் தேவி.

''உனக்குத்தான் பாப்பா, நல்லார்க்கா?'' என்று வாணியைப் பார்த்தார் தாமோதரன்.

''எப்படியோ இந்தக்கார வாங்கணும்னு டாடி டிஸைட் பண்ணிட்டார், அதுக்கு உன் பர்த்டே ஒரு சாக்கு'' என்ற தேவி, ''ஸாரிக்கா'' என்று தன் அக்காவின் அருகில் வந் தாள்.

காரை எடுத்து வந்தவன் அதை ஹேண்ட் ஓவர் செய்து விட்டு, வாணியிடம் டெலிவரி நோட்டில் கையெழுத்து வாங்கிக் கொண்டு கிளம்பினான்.

''இனி தப்பித் தவறிக்கூட எதையும் நல்லா இருக் குன்னு சொல்லிடக் கூடாது போலிருக்கே'' என்று தனது

தந்தையைப் பார்த்தவள், ''எனிவே தேங்க்ஸ்'' என்று சிரித்தாள்.

''நாங்களும் இப்படித் தப்பித் தவறி உன் பர்த்டேக்குன்னு எதையாவது வாங்கிக் குடுத்தாத்தான் ஆச்சு, மத்தபடி நீ எதையுமே வாயத்திறந்து கேக்க மாட்டியே தேவி மாதிரி'' என்று அந்த தேவி என்கிற வார்த்தைக்கு அழுத்தம் கொடுத்து சொன்னார் தாமோதரன்.

''அதான, உனக்கு இந்தக் காரப் புடிச்சிருக்கு தானக்கா'' என்று தேவி தன் அக்காவைப் பார்க்க, ''ரொம்பவே சரி நான் போய் டிபன் எடுத்து வைக்கறேன்'' என்று சென்றாள் வாணி.

## 12



பதினைந்து நாட்கள் சென்றிருந்தன.

தாமோதரன் வெளிநாடு போய்விட்டு அன்றைக்குத் தான் திரும்பியிருந்தார்.

''ஹாய் டாடி.''

''வா தேவிம்மா, நான் இல்லாதப்ப உனக்கு எப்படியெல்லாம் டைம் போச்சு?''

''போங்க டாடி நீங்க பிஸினஸ் பாக்கறதுக்கும் ஒரு அளவு இருக்குதான?''

''ஏன்டா அப்பா இல்லாம போரடிச்சதா?''

''இருந்தா மட்டுமென்ன, ஒரு நாளைக்கு அஞ்சு நிமிஷத்துக்கு மேல எங்கூட செலவழிக்கவா போறீங்க?''



''என்னடா பண்றது, இந்த டூ இயர்ஸா முடிஞ்ச அளவுக்கு அவாய்ட் பண்ணிட்டே வந்தது. இப்பப் போய் எல்லா வேலைகளையும் ஒன்னா முடிச்சுட்டு வந்துட்டேன்.''

''தேவி டாடி இப்பதான வந்திருக்காரு. அவரக் கொஞ்சம் ரெஸ்ட் எடுக்க விடேன்.''

''க்கும்'' என்று உதட்டைப் பிதுக்கினாள் தேவி. ''நீங்களாவது பரவாயில்ல டாடி ஐ.எஸ்.டி.லயாவது தினம் அஞ்சு நிமிஜம் பேசினீங்க, ஆனா இந்த மேடம் ஒரு நாளைக்கு ஒரு நிமிஷம் எல்லார் கூடவும் பேசியிருந்தா அதுவே ஆச்சரியம்'' என்றாள் தேவி.

''வாணி என்னம்மா செய்வா? அவ தினமும் எத்தன ஆபீஸ் போய்ப் பார்க்கணும், எவ்வளவு வொர்க் லோட் தெரியுமா? நான் இருந்து பாக்கறது விடவும் ரெண்டு மடங்கு நல்லாக் கொண்டு வந்திருக்கா.''

''அப்படியாக்கா?'' என்று ஆச்சரியப்பட்டவள், ''நான் கூட ரொம்பக் கஷ்டப்பட்டு ரெண்டு தடவ சினிமாவுக்குப் போய்ட்டு வந்தேன். ஃப்ரண்ட்ஸ் கூட அவங்க வீட்டுக்கு அப்புறம் பிக்னிக் எல்லாம் கூடப் போய்ட்டு வந்தேனாக்கும்'' என்றாள் தேவி.

''ஆமாம்பா தேவி இவ்வளவு பெரிய உதவி செஞ்சதுனாலதான் என்னாலயும் பிஸினஸ இந்த அளவுக்குப் பாக்க முடிஞ்சது'' என்று வாணி சிரிக்காமல் சொல்ல, அதன் உள்ளர்த்தம் புரிந்து தனது அக்காவை அடிக்கக் கையை ஓங்கினாள் தேவி.

இரவு உணவை முடித்துக் கொண்டு வெளியே வராண்டாவில் போடப்பட்டிருந்த சேர்களில் அமர்ந்து தந்தையும், மகனும் ஆசுவாசமாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

''அப்பா எனக்குக் கொஞ்ச நாளாவே ஒரு எண்ணம்'' என்று தனது தந்தையைப் பார்த்தார் தாமோதரன்.

''சொல்லுப்பா.''

''என் ஃப்ரண்ட் குணசீலனோட மகன் மதிவதணனை நம்ம வாணிக்குப் பாத்தா என்னப்பா?''

தந்தை சொன்னதைக் கேட்டதில் பாலும், பழமும் எடுத்து வந்த வாணியின் கைகள் லேசாக நடுங்க, அதை யாரும் கண்டு கொள்ளும் முன்னரே ட்ரேயை அங்கிருந்த டீபாயின் மேல் வைத்து விட்டாள்.

சில வினாடிகளிலயே ''எடுத்துக்கோங்க'' என்று பொதுவாக சொல்லிவிட்டு அந்த இடத்தைவிட்டு நகர்ந்தும் விட்டாள்.

ஆனாலும் பக்கத்து அறையிலிருந்து தாத்தாவின் பதிலுக்காகக் காத்திருந்த அந்த சில வினாடிகள் பல யுகங்கள் போலப் போய்க் கொண்டே இருந்தன வாணிக்கு.

''நீ இந்த மாதிரி பெரிய முடிவுகள பிரமாதமா எடுக்கறது தான் உன்னோட ப்ளஸ் பாயிண்டே, ஆனா...''

''என்னப்பா சொல்லுங்க?''

''வசதியில நம்ம பக்கத்துல நிக்கக்கூட அவங்களால முடியாதுங்கறது இருக்கட்டும், நம்ம தகுதிக்கு சமமான சம்பந்தங்கள் நிறைய வந்துட்டிருக்கேப்பா.''

''அது சரிதான்பா. இந்த தம்பி மதிவதணனோட உழைப்பு அசாதாரணமா இருக்கு. நம்ம நிலைய அந்தத் தம்பியும் சில வருஷங்கள்ள எட்டிப் பிடிப்பாருங்கற நம்பிக்கையும் இருக்கு. அதோட மத்தவங்க சொத்துக்கு ஒரு பைசாவுக்குக் கூட ஆசப்படறதும் கிடையாது.''



''அதையே பெரிய தகுதின்னு சொல்றயா?''

''உங்களுக்குப் பிடிக்கல போலிருக்குப்பா.''

''நான் என்னோட ஒரு பக்கக் கருத்த சொன்னேன் அவ்வளவுதான்பா. மத்தபடி பாக்கவும் ராஜா மாதிரி, கம்பீரமா, எதுலயுமே ஒரு சின்னக் குறை கூட சொல்ல முடியாத அளவுக்குப் பிரமாதமாத்தான் இருக்கார். எல்லாத்துக்கும் மேல நம்ம வாணிக்குப் பிடிச்சிருக்கணும், அதப் பாத்துக்கோ!''

''வாணியக் கேட்டுட்டாப் போகுது'' என்று தாமோதரன் தனது பெரிய மகளை அழைக்க, ஏதோ ஒரு சந்தோஷமான உணர்ச்சிப் பெருக்கில் கால்கள் நடுங்கின வாணிக்கு.

கடவுளே நான் இவ்வளவு பலவீனமானவளா?

வெகு சிரமப்பட்டு முக பாவனையை மறைத்துக் கொண்டு, ''கூப்டீங்களாப்பா?'' என்று தந்தையிடம் வந்து நின்றாள் வாணி.

அதன் பிறகு கலைவாணி, மதிவதணனின் திருமணத்திற்கான ஏற்பாடுகள் வெகு சிறப்பாக நடந்தன.

'வாணி மாதிரி ஒரு பொண்ணு எனக்கு மனைவியா வர்றதுக்கு நான் ரொம்பக் குடுத்து வெச்சிருக்கணும். நான் விரும்பறது வாணிய மட்டும் தான், கல்யாணம் முடியற வரைக்கும் வேணும்னா உங்க விருப்பப்படி நீங்க எல்லாமே பண்ணுங்க.

ஆனா அதுக்கப்புறம் என் மனைவிக்கு யாரையும் பாதிக்காதபடி ஒரு சில கட்டுப்பாடுகள் இருக்கும்' என்று தனது வருங்கால மருமகன் சொன்னதை திரும்பத் திரும்பச் சொல்லி உடல் பூரித்துப் போனார் தாமோதரன்.

பிறர் சொத்துக்கு ஆசைப்படாத மருமகனாம்.

அது மட்டுமா? எவ்வளவு கம்பீரம், திறமை!

தனது மென்மையான, அழகான மகளுக்குப் பொருத்த மான மணாளனைத் தேர்ந்தெடுத்து விட்ட திருப்தியும், சந்தோஷமும் தாமோதரனுக்கு மிகுதியாக இருந்தன.

ஆனாலும் அந்த மதிவதணன் தனக்குக் கட்டளை விதித்திருக்கிறான் என்பது தன் மகனுக்கு சிறிதும் புரிய வில்லையே என்று பெரியவர் கங்காதரனால் நினைக் காமல் இருக்க முடியவில்லை.

தொடர்ந்து வந்த நாட்களில் வாணி வானத்திலேயே மிதந்தாள் எனலாம்.

தன்னைத் தனக்காகவே மணக்க சம்மதித்திருக்கிறானே.

ஒரு பெண்ணுக்கு இதைவிடப் பெரிய பாக்கியம் வேறென்ன இருக்க முடியும்?

அந்த மாதத்திலேயே கலைவாணி மதிவதணனின் திருமணத்திற்கான நிச்சயம் நடந்தேறியது.

அதற்கு அடுத்து வந்த மாதத்திலேயே திருமணத் தேதியும் முடிவாகி விட்டிருந்தது.

வாணியிடம் தெரிந்த அசாதாரணமான அழகு அனை வரையும் வியப்பில் ஆழ்த்தியது.

முதலில் வசதியில் மிகக் குறைவான இடமென்ற எண்ணம் சற்றே அந்த வீட்டுப் பெரியவர்களுக்கு இருந்திருந்தாலும், வாணியின் மனதை அறிந்து கொண்ட பிறகு அப்படி நினைத்ததைக் கூட மறந்து போனார்கள்.

அதிலும் மதிவதணனின் கம்பீரமான தோற்றத்திலும் குரலிலும், அவனைப் பற்றிய நினைவே வாணியை சிறகடித்து வானில் பறக்க வைத்தது எனலாம்.



முன்பு வந்த தோழிகள் கூட மீண்டும் செய்தியறிந்த தில் வந்து விட்டுப் போனார்கள்.

அவர்கள் செய்த கேலி, கிண்டல் அனைத்தையும் வெகு சாதாரணமாகவும் சந்தோஷமாகவும் எடுத்துக் கொண்டாலும், அவர்கள் பழையபடியே விவாதம் செய்ததில் வாணியின் மென்மையான மனம் சில வினாடிகள் நடுங்கி மீண்டும் நடப்புக்கு வந்தது.

ஒரேயடியாக நின்று மதிவதணனின் போட்டோவைத் தோழியிடமிருந்து வாங்கிப் பார்த்தவர்கள், ''நிஜமாவே உனக்கு செம பொருத்தம் நீ ரொம்ப லக்கி வாணி'' என் றார்கள்.

''நம்ம வாணியக் கல்யாணம் பண்ணிக்கறதுக்கு அவர் தான் குடுத்து வெச்சிருக்கணும்'' என்றாள் வாணியின் நெருங்கிய தோழியான ஆஷா.

எது எப்படியோ இந்த சந்தோஷம், மோகம் அனைத்தும் அதிக பட்சம் ஆறு மாதத்திற்குத்தான் இருக்கும் என்று அவர்கள் அடித்துப் பேசியதைத் தான் வாணியால் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை.

எப்படி இவர்களால் மற்றவர்களுடைய வாழ்க்கையைப் பற்றிக் கூட இப்படி ஆணித்தரமாக அடித்துப் பேச முடிகிறதென்ற ஆச்சரியமே மேலோங்கியது வாணிக்கு.

'ஊர் உலகத்துல நடக்கறத சொன்னோம் வாணி அவ்வளவுதான், உன் வாழ்க்கை பிரமாதமா அமையும்' என்று வாழ்த்திவிட்டும் போனார்கள்.

''இன்விடேஷன் கொண்டு வந்து குடுக்கறேன். அதக் கல்யாணத்துக்கு வந்து சொல்லுங்க'' என்று சந்தோஷமாக

சொன்ன வாணி, தோழிகள் கிளம்ப அவர்களை வழியனுப்பிவிட்டு வீட்டிற்குள் வந்தாள்.

அனைவரை விடவும் மதிவதனனின் தாயான மஹாலட்சுமிக்கு வரப்போகும் மகனின் திருமணத்தை நினைத்து மனதிற்குள் மிகுந்த சந்தோஷமாக இருந்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ள சற்று பயமாகவும் இருந்தது.

அதற்குக் காரணமும் மகனேதான்.

அப்பொழுது தான் நிறைய செலவு செய்து தங்கையின் திருமணத்தை முடித்திருந்ததால், எங்கே தனக்கு இப்பொழுது திருமணம் வேண்டாமென்று சொல்லி விடுவானோ என்று முதலில் மனதிற்குள் மிகவும் பயந்து தான் போனார் மஹாலட்சுமி.

ஏனென்றால் மகளைக் கொடுத்திருந்த இடமே வசதியில் பெரிதென்னும் போது, மகனுக்காக வந்திருக்கும் இடம் அதைவிடப் பல மடங்கு வசதி நிறைந்த இடமாயிற்றே.

நல்ல வேளையாக மகனுக்கும் அந்தப் பெண்ணை மிகவும் பிடித்து விட்டது போலிருக்கிறது, தான் பயந்தது போல எதுவும் நடந்து விடவில்லையென்று மனதிற்குள் மிகவும் சந்தோஷப்பட்டுக் கொண்டார் மஹாலட்சுமி.

மற்றபடி கட்டாயத்தின் பேரில் அவனை ஒரு சிறு செயலைக் கூட செய்ய வைக்க முடியாதே.

எப்படியோ இந்தத் திருமணம் நல்லபடியாக நடந்தேறினால் சரியென்று ஒரு தாயாகவும் மனதார கடவுளை வேண்டிக் கொண்டார்.



# 13



"பாப்பா."

"என்ன டாடி?"

"இன்னைக்கு ஆபீஸ்க்கு நம்ம மாப்ள வந்திருந்தார்மா."

..............

"என்ன எதுவும் பேச மாட்டேங்கற?"

"சொல்லுங்க டாடி."

"நீ என்னவோ ரொம்பவும் மெலிஞ்சு போயிட்டயாமே, ஏன்னு என்னயே கேள்வி கேக்கறார் பாப்பா."

"போங்க டாடி சும்மா சொல்லாதீங்க."

"அட நிஜமாதான் வாணி, இனி என் வாணி ஒரு கிராம் கூட மெலியக் கூடாதுன்னு எனக்கே ஆடர் போடுவார் போலிருக்கு."

"டாடி போதும்" என்று வாய் சொன்னாலும், மனம் படபடக்க தந்தை மேலும் என்ன சொல்லப் போகிறாரோ என்ற ஆவலுடன் அவரைப் பார்த்தாள் வாணி.

"நான் சொன்னது எல்லாமே நிஜந்தான் பாப்பா, அதோட உனக்கு நகை, புடவை எல்லாம் உன் விருப்பப்படி எடுக்கணுமாம் நான் வந்து அழைச்சுட்டுப் போலாமான்னு கேட்டார்."

"வேண்டாம்னா சரின்னு சொல்லிடுவாராக்கும்?" என்று ஹாலுக்கு வந்தாள் தேவி.

''பேசாம இவளுக்கும் ஒரு மாப்ளயப் பாத்துட்டா என்னடாப்பா?'' என்று பாட்டி புஷ்பவள்ளி ஹாலுக்கு வர, ''சான்ஸே இல்ல, அப்படியே ஆனாலும் நான் சொல்றதத் தான் அவன் கேட்டாகணும்'' என்றாள் ஸ்ரீதேவி.

''வேண்டாம்டியம்மா, வாழ்க்க ஒன்னும் நீ நினைக்கற மாதிரி மெத்தனமான விஷயம் கிடையாது. விட்டுக் கொடுத்து பணிஞ்சு போனாத்தான் வாழ்க்கை சந்தோஷமா, நிம்மதியாப் போகும்.''

''போதும் பாட்டி, அக்காவுக்கு இந்த அட்வைஸ் அவசியப்படாதுங்கறதால எனக்கு இப்பவே ஆரம்பிச் சுட்டீங்களாக்கும்?''

''ஆனாலும் இந்த விஷயத்துல உன் ஃப்ரண்ட்ஸ் ஒபீனியன் தான்கா எனக்கும், நீ கொஞ்சமாவது கர்வமா, சுயநலமா நடந்துக்கிட்டாத்தான் நாளைக்கு உன்னையும் எல்லாரும் மதிச்சு பயந்து நடப்பாங்க'' என்று வாணியைப் பார்த்தாள் தேவி.

''வாணிக்கு அட்வைஸே தேவையில்ல, அதுலயும் நீ பண்ற இந்த பைத்தியக்காரத்தனமான அறிவுர சுத்தமாத் தேவையே இல்லை'' என்று பாட்டி புஷ்பவள்ளி அதட்ட, ''அவ சும்மா ஜோக்காதான் சொல்றா பாட்டி'' என்று தங்கைக்காகப் பரிந்து வந்தாள் கலைவாணி.

''இல்லக்கா நான் நிஜமாதான் சொல்றேன், அதுவும் உம்மேல இருக்கற அக்கறையால தான்'' என்றவள்,

''நானும் உன்கூட பர்ச்சேஸுக்கு வர்றேன் வாணிக்கா'' என்றாள்.

''நீ இல்லாமலா தேவிக்குட்டி?'' என்று வாணி சொல் லிக் கொண்டிருக்க, ''சாயங்காலம் மூணு மணிக்கு மேல



போலிருக்கு கிளம்பறதுக்கு முன்னாடி மாப்ள வீட்லிருந்து கூப்பிடுவாங்க'' என்றார் தாமோதரன்.

அதன் பிறகு நாட்கள் இறக்கை கட்டிக் கொண்டு பறந்தன.

இதோ இதோ என்று நெருங்கி வந்து விட்ட திருமண நாள் இனிதே கடந்தும் போனது.

திருமணத்திற்கு ஆயிரக்கணக்கானோர் வந்திருக்க, மதிவதனனின் 'திருமதி' ஆகியிருந்தாள் கலைவாணி.

என்னதான் செல்வத்தில் வாணியின் வீட்டினர் மிகவும் பெரியவர்களாக இருந்தாலும், மதிவதனனின் வீட்டினர் செல்வாக்கில் அவர்களை மிஞ்சியிருந்தார்கள்.

அந்த அளவிற்கு அவர்களின் பக்கமிருந்து ஏராள மானோர் திருமணத்திற்கு வந்திருந்தார்கள்.

ஃபுல் சூட்டிலும் தனது உயரத்திலும் மாப்பிள்ளையாக நின்றிருந்த மதிவதனன் மேலும் கம்பீரமாகத் தெரிய, அவனது மனைவியாக அவனருகில் நின்றிருப்பதை மிகுந்த பெருமையாக உணர்ந்தாள் கலைவாணி.

''ரொம்ப நேரமா நின்னுட்டிருக்கோம், உனக்குக் கால் வலிச்சா சொல்லுமா கொஞ்ச நேரம் உக்காந்துக்கலாம்'' என்று அவன் கரிசனமாகக் கேட்டதில் வாணிக்குக் கண் கள் கூட கலங்கி விட்டன.

அதை வேறு யாரும் அறியாமல் மறைத்துக் கொண் டாள் என்றாலும், ''என்னம்மா இது?'' என்று கணவன் மெதுவாகக் குனிந்து கேட்க அதைத் தனது கணவன் கண்டு கொண்டானே என்று வேறு மேலும் உள்ளம் பூரித்துப் போனாள் வாணி.

அடுத்த சில வினாடிகளில் முழுமையாக நடப்புக்கு வந்து விட்டிருந்தாள் வாணி.

''என்ன எங்க அக்காவ இப்பவே அழ வெக்கறீங்க?'' என்று வாணியின் அருகில் வந்து நின்றிருந்த தேவி மதிவதணனைக் கேட்டாள்.

''உன்னப் பிரியணுமேன்னு நினைச்சாக் கஷ்டமா இருக்காம்.''

''யார் சொன்னது? நான் உன் கூடவே வந்து இருந்துக் கறேன் கவலைப்படாதக்கா'' என்றாள் தேவி.

ஏதோ சொல்ல வாயெடுத்தவன், அதற்குள் தங்களை நோக்கி வந்தவர்களை வரவேற்று மனைவிக்கு அறிமுகப் படுத்தினான்.

இப்படியே மேலும் சற்று நேரம் கழிய, மற்ற சடங்கு களும் விருந்தும் கூட பிரமாதமாக நடந்து முடிந்தன.

திருமணத்திற்கு வந்திருந்தவர்கள் மணமக்களின் ஜோடிப் பொருத்தத்தை வாயாரப் புகழ்ந்து, நூறு வரு டங்கள் நிறைவாக வாழும்படி மனதார வாழ்த்தி விட்டுப் போனார்கள்.

பாட்டியின் சொந்தங்களான சின்னப்பாட்டியின் மகள், அவருடைய மக்கள் என்று ஒரு நான்கைந்து பேர் மட்டும் மறுநாள் அதிகாலை ட்ரெயினுக்குக் கிளம்புவதாக வீட்டில் இருந்தார்கள்.

''உனக்குக் கசகசன்னு இருக்கும், நீ போய்க் குளிச் சுட்டு வந்து இந்த சேலையக் கட்டிக்கோ'' என்று பாட்டி சொல்ல அதன்படி செய்தாள் கலைவாணி.

பாட்டியும், அத்தையும் லேசான ஒப்பனை செய்து திருஷ்டி கழிக்க, ''என் கண்ணே பட்டுடும் போல பிர



மாதமா இருக்கம்மா'' என்று கண் கலங்கினார் பாட்டி புஷ்பவள்ளி.

''இந்த விசேஷத்துக்கு என் மருமக மட்டும் இருந் திருந்தா எவ்வளவு நல்லா இருந்திருக்கும்?'' என்று மனதார உணர்ந்து சொன்னவர், மகன் வர கண்களைத் துடைத்துக் கொண்டு சற்று விலகி நின்றார்.

தொடர்ந்து வந்த தந்தையும் அதையே சொல்லி கண் கலங்க, அழுதுவிட்டாள் பெண்.

''சரிசரி போதும்.. வாணி இந்த நேரத்துல அழுது கண்ணக் கசக்கக்கிட்டிருந்தா எப்படி?''என்ற பாட்டியின் லேசான அதட்டலில் தானும் நடப்புக்கு வந்தாள் வாணி.

''உங்க அம்மா உனக்குத் துணையிருந்து காப்பாத்து வாம்மா, உனக்கு சொல்ல வேண்டியதே இல்ல நீ நல்ல பொண்ணாத்தான் நடந்துக்குவ'' என்று மனதார மகளை ஆசீர்வதித்து விட்டுப் போனார் தாமோதரன்.

''மாப்பிள்ளையோட மனசு புரிஞ்சு கெட்டிக்காரியா நடந்துக்கோம்மா'' என்று ஆசீர்வதித்த பாட்டி, பால் சொம்பைப் பேத்தியின் கைகளில் கொடுத்து உள்ளே அனுப்பிவிட்டு அந்தப் பொது அறையின் கதவை வெளிப்புறமாக மூடிவிட்டுச் சென்றார்.

வாணி தங்களின் அறைக் கதவை மூடிவிட்டு உள்ளே வர ஆட்டோமேட்டிக் டோர் தானாக லாக் செய்து கொண்டது.

சற்றே நடுங்கிய படபடத்த மனதுடன் உள்ளே வந்த மனைவியை எல்லையில்லாத காதலுடன் எதிர்கொண்ட மதிவதணன், அவளிடமிருந்து பால் சொம்பை வாங்கி அங்கிருந்த டேபிள் மேல் வைத்தான்.

அதே நிலையிலேயே அவனது காலடியில் விழக் குனிந்தவளை, "என்னடா இதெல்லாம்?" என்று அதற்கு விடாமல் தடுத்து பட்டுப் போன்ற மென்மையுடன் மனைவியை மார்போடு அணைத்துக் கொண்டான்.

பல காலம் தட்டுத் தடுமாறி கடைசியாகத் தன் புகழிடம் வந்து சேர்ந்து விட்டாற் போன்ற பரவசம் நாடி நரம்பெல்லாம் பாய, கணவனது மார்பில் மேலும் வாகாக ஒண்டிக் கொண்டவளை இறுக அணைத்துக் கொண் டான் மதிவதணன்.

## 14



மறுநாளே நாள் மிகவும் நன்றாக இருந்ததால் மதி வதணனின் வீட்டிலிருந்து வந்து புதுமணத் தம்பதியை அழைத்துக் கொண்டு போனார்கள்.

வாணியின் வீட்டினர் மருமகனையும், மகளையும் மன நிறைவுடன் சந்தோஷமாக வழியனுப்பிவிட்டு வீட்டுக் குள் வந்தார்கள்.

மருமகனது பார்வையும், அதைத் தொடர்ந்து முகம் சிவந்த மகளின் வெட்கத்தையும் பார்த்த தாமோதரனுக்கு மனம் மிகுந்த நிம்மதியடைந்தாலும், பேத்திக்குக் கைய சைத்து விடை கொடுத்த தாயின் கண்கள் கலங்கு வதைக் கண்டு தானும் சற்று மன பாரத்துடனேயே உள்ளே வந்தார்.



"வாணி போற இடமே கோவிலா மாறும், என்ன தவம் பண்ணினாங்களோ என் பேத்திய மருமகளா அடையற துக்கு?" என்று வீட்டிற்குள் வந்தார் புஷ்பவள்ளி.

"அப்படிப்பட்ட உங்க பேத்திய கால் டேக்ஸில கூட்டிட்டுப் போறாங்க பாட்டி, நம்ம வீட்ல வரிசையா ஏழெட்டுக் கார் நின்னும் அக்காவுக்குப் பயன்படலையே" என்றாள் தேவி.

"என்ன தேவிம்மா இது, எந்த நேரத்துல என்ன பேசற?" என்று தாய் சற்றே வருத்தத்துடன் சொல்ல, "இனி இந்த மாதிரி சில விஷயங்கள நாம பெரிசா எடுத் துக்கக் கூடாது" என்று தந்தை சாதாரணமாக சொல்லி யிருந்தாலும் அதில் உள்ளர்த்தம் ஏதும் இருக்குமோ என்று தாமோதரனால் நினைக்காமல் இருக்க முடிய வில்லை.

நாட்கள் சில சென்றிருந்தன.

கள்ளம் கபடமே சிறிதும் அறியாத மென்மையான குணம் படைத்த வாணி, சிறுசிறு நெருடல்கள் இருந் தாலும் புகுந்த வீட்டு மனிதர்களோடு அழகாகப் பொருந்திப் போனாள்.

பிறந்த வீட்டில் இருப்பது போல, எந்த வேலைக்கும் தனித்தனியாக ஆட்கள் இருக்கவில்லை.

அனைத்து வேலைகளையும் அவரவர்களே தான் செய்து கொண்டார்கள்.

பாவம் சுகமாக இருந்த பழக்கப்பட்ட பெண்ணென்று மஹாலட்சுமியே பெரும்பாலான வேலைகளை இழுத்துப் போட்டுச் செய்ய, வாணி தன்னால் செய்ய முடிந்த ஒரு சில வேலைகளை மட்டுமே செய்தாள் எனலாம்.

ஆனால் பழக்கப்படாத அந்த சில வேலைகளை செய்வதற்கே வாணி மிகவும் சிரமப்பட்டாள் என்றால் அது மிகையாகாது.

எது எப்படியோ கணவனின் கரிசனமான அன்பில் திளைத்த வாணிக்கு, மற்ற பிரச்சனைகள் அனைத்துமே சூரியனைக் கண்ட பனி போல காணாமல் போய்க் கொண்டிருந்தன.

அதிலும் காலையில் சென்றால் இரவு உணவு வேளையைக் கடந்த பின்னரே தினமும் வீடு திரும்பும் கணவனின் உழைப்பில், தந்தை அவனைப் பற்றி சொன்னது தான் நினைவுக்கு வந்தது கலைவாணிக்கு.

உன்னைப் பார்க்கும் ஆவலில் இப்பொழுதெல்லாம் மிகவும் நேரத்திலேயே வந்து விடுகிறானே என்று அத்தை சொல்லிச் சிரித்தது நினைவு வர, பாவம் அப்படி யானால் திருமணத்திற்கு முன்பு இதைவிட அதிகமாக உழைத்திருக்கிறான் போலிருக்கிறது என்று தான் வாணிக்குத் தோன்றியது.

அதிலும் இரவு எந்த நேரம் வீடு வந்தாலும் எந்த வேலையும் செய்யாமல் முதலில் நேராகத் தன்னிடம் வந்து இரண்டு வார்த்தைகளையாவது பேசிச் சிரிக்க வைத்து விட்டுப் போகும் கணவனின் அன்பில் உள்ளம் பூரித்துப் போவாள் கலைவாணி.

அப்படிக் கணவன் வந்து பேசும் அந்தத் தருணங் களுக்காக உள்ளுக்குள் மனம் எவ்வளவு ஏங்கினாலும், பார்க்கும் மற்றவர்கள் என்ன நினைப்பார்களென்று வாணி அவனிடம் சிலமுறை கேட்டும் இருக்கிறாள்.

பாவம் பயல் புதுப் பொண்டாட்டி மோகத்தில் இருக் கிறான் என்று நினைத்துக் கொள்வார்கள் என்பவன், அந்த



மற்றவர்களுக்காகத்தான் மிகவும் சிரமப்பட்டு வெறும் பேச்சோடு அப்போதைக்கு என்னைக் கட்டுப்படுத்திக் கொள்கிறேன் என்று முகம் சிவக்க வைப்பான்.

அப்பொழுதெல்லாம் தன் தோழிகள் சொன்னது தான் நினைவுக்கு வரும் வாணிக்கு.

இப்படிப்பட்ட அன்பு எப்படிக் கசந்து போகும்? அவர்களுடைய தப்பான அபிப்ராயம் மாற வேண்டும், அதற்கு அவர்களுக்கும் தன்னைப் போன்ற நல்ல வாழ்க்கையும், வாழ்க்கைத் துணையும் அமைய வேண்டு மென்று மனதார நினைத்துக் கொள்வாள் வாணி.

நிவேதா தூங்கி எழுந்து கண்ணைக் கசக்கிக் கொண்டே வர, கணவனுக்குக் காபியைக் கொடுத்துவிட்டு நகர்ந்தாள் வாணி.

''அண்ணா.''

''அட பாத்துப் பாத்து, தூங்கிட்டே வந்து யாராவது மேல விழுந்துடாத.''

''கண்டிப்பா உங்க வொய்ஃப் மேல விழ மாட்டேன் கவலப்படாதீங்க, அதுக்கான ஏகபோக, உரிமையெல்லாம் உங்களுக்கு மட்டும்தான் இருக்கு.''

''கொஞ்ச நாளா உனக்கு வாய் கொஞ்சம் அதிகமா யிடுச்சு.''

''இல்லையேண்ணா எப்பவும் போலத்தான் இருக்கு. அண்ணா எங்க காலேஜ்ல டூர் போறாங்க நானும் போய்ட்டு வரட்டுமா.''

''வேண்டாம்னு சொன்னா, விட்டுடுவ தானே?''

................

''எங்க?''

தன் அண்ணன் கேட்டதே போதுமென்று அனைத்து விவரங்களையும் ஒப்புவித்தாள் நிவேதா.

''சரி மேடம் போதும், காது வலிக்கிறது.''

''நானும் போய்ட்டு வரட்டுமாண்ணா?''

''சொல்றேன், முதல்ல போய் கிளம்பற வேலையப் பாரு. அப்புறம் காலேஜ் போகும்போது லேட்டாயிடுச் சுன்னு எல்லாரையும் ஒரு வழி பண்ணாத.''

''சரிண்ணா, ஆனா நல்ல பதிலா சொல்லணும் ப்ளீஸ்'' என்று நகர்ந்தாள் நிவேதா.

''வாணி.''

சமையலறையில் வேலையாக இருந்த வாணி கண வனின் அழைப்பில் என்னவென்று சென்று கேட்டாள்.

''பாத்ரூம்ல டவலக் காணோம் எடுத்துட்டு வா'' என்று தன் அறையை நோக்கிப் போனான் மதிவதணன்.

வெச்சனே என்று வாயைத் திறக்கப் போனவள், எப்படியும் போகாமல் விட மாட்டானென்று தெரிந்து விட ''எடுத்துட்டு வர்றேங்க'' என்றாள்.

''சீக்கிரம் வா'' என்று சென்றவனைத் தந்தை அழைக்க நின்று திரும்பிப் பார்த்தான்.

''சொல்லுங்கப்பா.''

''இப்படித் தொழிலையே பாத்துட்டிருந்தா எப்படிப்பா? சொந்தங்கள் எல்லாரும் விருந்துக்கு வரச் சொல்லி உங்கள அழைச்சுட்டே இருக்காங்க, தினமும் கொஞ்சம் நேரத்துல வந்து வாணிய அழைச்சுட்டுப் போய்ட்டு வரலாமே.''



''அடுத்த வாரத்திலிருந்து பாக்கலாம்பா, இப்ப வேல கொஞ்சம் அதிகமா இருக்கு.''

''என்னப்பா நீ, சரி வாணிய அழைச்சுட்டு அவங்க வீட்டுக்காவது போய்ட்டு வா. நீங்க அங்க போய்ட்டு வந்து பதினஞ்சு நாள் இருக்குமே.''

''சரிப்பா. அப்புறம் பணம் ஒரு ரெண்டு லட்சம் இருக்கு. சாயங்காலம் எடுத்துட்டு வந்து தர்றேன், கல்யாணத்துக்கு வாங்கினதுல உடனே கொடுக்க வேண்டிய கடனாப் பாத்துக் குடுத்துடுங்க.''

''சரி, நான் சொன்னத மட்டும் கொஞ்சம் ஞாபகத்துல வெச்சுக்கோப்பா'' என்று சென்றார் குணசீலன்.

சில வினாடிகளில் மேலே வந்த கலைவாணி, ''பாருங்க இங்க டவல ரெடியாதான் எடுத்து வெச்சிருக்கேன்'' என்று சொல்லிக் கொண்டே திரும்ப பின்னாலிருந்து வந்த மதிவதணன் அவளை இழுத்து அணைத்தான்.

''சரி அதுக்கென்ன'' என்ற மதிவதணன் மனைவியை சரசத்துடன் பார்க்க, ''என்னங்க இது?'' என்று அவனது பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றாள் வாணி.

''விடுங்க மதி ப்ளீஸ்.''

''ம்கூம்'' என்றவனது அணைப்பு மேலும் இறுகியது.

''என்ன மதி நீங்க இந்த நேரத்துல போயி, யாராவது பாத்தா?''

''அதனாலென்ன கதவ லாக் பண்ணிட்டேன், ஐயாவப் பத்தி என்ன நினைச்ச?''

''ம் சரியான பைத்தியம், அதுவும் வாணிப்பைத்தியம்.''

''தெரிஞ்சா சரி, நான் என்ன ஏற்கனவே எவ்வளவு கன்ட்ரோல் பண்ணிட்டிருக்கேன் தெரியுமா?''

''ஓ, கன்ட்ரோல் பண்ணியே இவ்வளவா?'' என்று கிளுக்கிச் சிரித்தவள், ''கிச்சன்ல நிறைய வேலையிருக்கு மதி'' என்று சிணுங்கினாள்.

''வாணி.''

''ம்.''

''இங்க எல்லா வேலையும் செய்யக் கஷ்டமா இருக் காடா?''

''இல்லையே.''

''நிஜமா?''

''ஆமாங்க, எல்லா வேலையும் அத்த தான் செய்ய றாங்க. கொஞ்ச வேல மட்டும் தான் நான் செய்யறேன்.''

மேலும் சில நிமிடங்கள் கழித்து மனதே இல்லாமல் மனைவியை விடுவித்தவன், ''வீட்லயே அடைஞ்சு கிடக்கக் கஷ்டமா இருந்தா எங்காவது போய்ட்டு வாடா'' என்றான்.

''அச்சச்சோ, எனக்கு ஏற்கனவே வீட்ல நேரம் போறதே தெரியல. அத்த கூடப் பேசிட்டே வீட்டு வேல செஞ்சுட் டிருந்தா, நாலு மணிக்கு நிவேதா வந்துடுவா. அப்புறம் நாங்க ரெண்டு பேரும் பக்கத்துல கோவிலுக்கு பார்க்குக்கு பர்ச்சேஸ்க்குன்னு நேரம் பறந்துடும், நீங்க எனக்காக வெல்லாம் கவலையே படாதீங்க மதி.''

பிறந்த வீட்டில் குடும்பத்தை நிர்வகிக்கும் பொறுப்பி லிருந்து பிஸினஸ் அது இதென்னு எந்நேரமும் எவ்வளவு பிஸியாக இருந்தவள் தன் மனைவி திருமணம் என்ற



பெயரில் அவளது திறமைகளையெல்லாம் முடக்கி விடுவோமோ என்று சில நாட்களாகவே மதிவதனனின் மனம் உறுத்திக் கொண்டே தான் இருந்தது.

எதற்காகவுமே வினாடி நேரம் கூட ஒதுக்க முடியாமல் உழைத்தாக வேண்டிய தருணத்தில் இருந்தான் மதி வதனன்.

கூடிய விரைவிலேயே கழுத்து வரை இருக்கும் பிரச் சனைகளை ஓரளவு சரி செய்து கொண்டு, மனைவியிடம் அவளது விருப்பம் கேட்டு அதன்படி அவளுக்குப் பயன் படும்படி எதையாவது செய்து கொடுக்க வேண்டுமென்று எப்பொழுதும் போல நினைத்துக் கொண்டான்.

ஒரு விதத்தில் பார்த்தால் மதிவதனன் அவனுடைய திருமணத்தைப் பற்றி அப்போதைக்கு நினைத்துக் கூடப் பார்த்திருக்கவில்லை.

உண்மையாக சொல்லப் போனால் மதிவதனன் படித்து முடித்து தொழில் கற்று, ஓரளவு வெற்றிகரமாகத் தனது தொழிலையும் நடத்திக் கொண்டிருக்கும் இந்த நான்கைந்து வருடங்களாகவே அவன் நிம்மதியான தூக்கத்தை அறிந்திருக்கவில்லை.

ஆரம்பத்திலிருந்தே அவனது தந்தையின் சம்பாத் தியம், குடும்ப செலவுகளுக்கு பற்றாக்குறையாகவே தான் இருந்து வந்தது.

அரையோ, முக்கால் வயிறோ கஞ்சியையாவது குடித்துக் கொண்டு சம்பாதித்த பணத்தையெல்லாம் சேர்த்து வைக்க வேண்டுமென்று நினைத்திருந்தால், அவர்களும் ஓரளவு நன்றாகவே இருந்திருக்கலாம் தான்.

ஆனால் குணசீலனைப் பொறுத்தவரை அவர் அப்படி யெல்லாம் செய்தவர் கிடையாது.

தனது குழந்தைகள் மூவரையும் நன்கு செலவு செய்து பெரிய பள்ளி, கல்லூரிகளிலேயே பிரமாதமாகப் படிக்க வைத்திருந்தார்.

என்னதான் உபகாரச் சம்பளத்திலேயே மதிவதனன் தனது படிப்பை முடித்திருந்தாலும், மற்ற அனைத்து விதத்திலுமே அவன் தனது தொழில் திறமைகளை வளர்த்துக் கொண்டதும் அப்படித்தான்.

தனது குடும்பத்தைத் தான் எப்பாடு பட்டாயினும் மேலே கொண்டு வந்தாக வேண்டுமென்று அவன் இன் னும் இன்னும் என்று பறந்து கொண்டிருந்த வேளையில் தான், அவனுடைய திருமணப் பேச்சு வந்ததே.

அதற்காக தாமோதரன் அவனிடம் பேசியபோது, அவன் முதலில் மனதிற்குள் உணர்ந்தது ஒரு நம்ப முடியாத ஆச்சர்யத்தையே.

இப்போதைக்குத் திருமணம்மா அதுவும் தனக்கு? என்ற எண்ணத்தால் வந்த ஆச்சரியமே அது.

அதோடு மிகப்பெரிய கோடீஸ்வரரான அவருடைய பெண்ணுக்குக் கல்யாணச் சந்தையில் மிகுந்த வரவேற்பு இருக்குமே, அப்படியிருக்கும் போது அவர் தன்னை ஏன் கேட்கிறார் என்ற எண்ணமும் கூட.

அதற்காக மதிவதனன் தன்னைக் குறைத்து மதிப் பிட்டான் என்றில்லை.

அதாவது அந்த நிமிடம் வரை அவன் தன்னுடைய திருமணத்தைப் பற்றி ஒரு வினாடி நேரம் கூட யோசித் திருக்கவில்லை.



எதற்கும் யோசித்துச் சொல்லுமாறு தாமோதரன் சொன்ன பிறகே, அதுவரை அவர் தனது பதிலை எதிர் பார்த்துக் காத்திருந்திருக்கிறார் என்பதை அவன் புரிந்து கொண்டான்.

இதில் யோசிக்க ஒன்றுமில்லை. வாணியை மணந்து கொள்ள நான் கொடுத்து வைத்திருக்க வேண்டுமென்று அந்த வினாடியே மதிவதனனும் சொல்லி விட்டிருந் தான்.

வாணியின் அழகும், எளிமையான அடக்கமும் அனை வரிடமும் இதமாகப் பழகும் குணமும் அவன் நன்கு அறிந்தவையே.

ஆனால் பின்னர் தனிமையில் யோசித்தபோதுதான் அவனது உள் மனம் வாணியை விரும்பியிருக்கிறது என்பதை அவன் உணர்ந்து கொண்டான்.

அதாவது அவனுடையதை அவனுக்கே முழு உரிமை யாக்கிக் கொள்ளும் எண்ணத்தில் தான் உடனே தனது சம்மதத்தைத் தெரிவித்திருக்கிறான்.

தாமோதரனின் உயர்ந்த பெருந்தன்மையான குணத் தைப் பார்த்த மதிவதனனுக்கு, தான் அவரது மருமகனா வதை நினைத்துப் பெருமையாகக் கூட இருந்தது.

அவர் என்றைக்குமே பணத்தைப் பெரிதாக மதித்தவர் கிடையாது, அதனாலேயே அவரிடம் கோடி கோடியாகப் பணம் சேர்ந்து கொண்டே போகிறதென்று தனது தந்தை அடிக்கடி சொல்வது தான் நினைவுக்கு வந்தது மதிவதனனுக்கு.

ஆனாலும் மேலும் மேலும் தொழிலை நன்றாகக் கொண்டு செல்ல வேண்டுமென்ற அவரது எண்ணமும்,

உழைப்பும் மதிவதணனுக்கு தாமோதரன் மீது மிகுந்த மரியாதையை ஏற்படுத்தியிருந்தது.

அத்தனை உயரத்தில் இருக்கும் மனிதர் தன் உழைப்பையும், திறமையையும் மனம் திறந்து பாராட்டுகிறார் என்றால் அவர் எவ்வளவு பரந்த மனமுடையவராக இருக்க வேண்டுமென்றும் நினைத்துக் கொள்வான்.

மேலும் ஒருமுறை கணவனுக்குத் தேவையான அனைத்தையும் சரி பார்த்து அவனுக்கு முன்பாக எடுத்து வைத்தவள், கிச்சனில் வேலையிருக்கிறது நான் போகிறேனென்று ஓடியே போய் விட்டாள்.

விரைவாகக் கிளம்பும் எண்ணத்தில் ஷேவ் செய்து கொண்டிருந்தவனின் முன்பு மீண்டும் மனைவி வந்து நிற்க ஆச்சரியத்துடன் பார்த்தான்.

''என்னங்க ஒரு சின்ன ரிக்வெஸ்ட்.''

''சொல்லு.''

''அத்தையே எல்லா வேலையும் ரெஸ்ட் இல்லாம செய்யறதப் பாத்தா எனக்குக் கஷ்டமா இருக்குங்க, நாம வேணும்னா வீட்டு வேலைக்கு ஒரு ஆளப் போட்டுக்கலாமா?''

''வேலைக்குன்னா?''

''காலைல வந்து வீடெல்லாம் கூட்டித் துடைச்சு, துணி துவைச்சு, பாத்திரம் கழுவறதுக்கு மட்டும். என்னங்க நான் ஏதாவது தப்பாக் கேட்டுட்டனா?''

''இல்லமா.''

''மாசம் ரெண்டாயிரம் மட்டும் குடுத்தாப் போதுமாம்.''

''ஓ ஆளக்கூட ரெடியாப் பாத்து வெச்சுட்டயா?''



''இல்லங்க அன்னைக்கு ஒரு நாள் நானும் நிவேதாவும் பார்க்ல உக்காந்து பேசிட்டிருந்தப்ப அந்தம்மாவே தான் வந்து கேட்டாங்க.''

''அந்தம்மாவ அத்தைக்குக் கூடத் தெரியுமாம் நிவேதா சொன்னா.''

மாதம் இரண்டாயிரம் என்றால் இன்றைக்குக் குடும்பம் இருக்கும் நிலையில் சற்றுப் பெரிய தொகை தான், ஆனால் அது மனைவிக்குத் தெரிய வாய்ப்பில்லையே.

''பாக்கலாம்மா, அதுக்குள்ள நீ அம்மாகிட்டயும் ஒரு வார்த்த கேட்டுப்பாரு.''

''நீங்க கேட்டீங்களேன்னு தான் சொன்னேங்க, வேண்டாம்னு சொன்னாலும் எனக்கொன்னும் பிரச்சனையில்ல.''

பணமில்லாமல் எந்த முக்கியமான செலவுகளும் நின்றுவிடவில்லை என்றாலும், கண்டிப்பாக செய்தாக வேண்டிய எத்தனையோ தேவைகள் செய்யப்படாமல் அப்படியே கிடந்தன.

''எதுக்கும் இன்னொரு மூணு மாசம் போகட்டும்மா அப்புறமாப் பாக்கலாம்.''

''சரிங்க'' என்று சிரித்த முகத்துடன் சொல்லிவிட்டுப் போன தனது மனைவியைப் பார்த்து மனம் உருகிப் போயிற்று மதிவதணனுக்கு.

## 15



திருமணம் முடிந்திருந்த இந்த ஒரு மாதத்தில் இரண்டு முறை மனைவியை அழைத்துக் கொண்டு அவளது வீட்டிற்குச் சென்று வந்தான் மதிவதணன்.

வாணியின் வீட்டிலிருந்தும் இரண்டு முறை வந்து விட்டுப் போனார்கள்.

பணம் முன்னும், பின்னும் இருந்தாலும் வாணி புகுந்த வீட்டில் சந்தோஷமாக வாழ்வதில் அனைவருக்கும் ஒரு நிம்மதி கலந்த திருப்தி.

நாளுக்கு நாள் மெருகேறி வந்த மகளின் அழகும், திருமணமான பெண்ணுக்கே உரிய குடும்பப்பாங்கும் கண்டு மனம் நெகிழ்ந்து போனார் தாமோதரன்.

மருமகனின் உழைப்புக்கும், திறமைக்கும் மகளும் கூடிய விரைவிலேயே வளம் பெறுவாள்.

மற்றபடி தான் எதையும் கொடுத்து உதவுவதைப் பற்றி அவரால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

தனது மாப்பிள்ளையே அதை ஏற்றுக் கொள்ள மாட்டார் என்பதோடு, அப்படிக் கொடுத்துத் தனது மருமகனின் மனதைக் கஷ்டப்படுத்தும் வேலையை அவர் செய்வ தாகவும் இல்லை.

''நிவேதாம்மா.''

''வாங்கமா.''

''என்ன கால நீட்டி உக்காந்துட்ட?''

''சும்மதான், உக்காருங்கமா.''

''ஏன் ஒரு மாதிரியிருக்க?''

''இப்பதான் துவைச்ச துணிகளக் காயப் போட்டுட்டு வந்தேன், வெயில்ல இருந்துட்டு வந்ததுக்கு ஒரு மாதிரி யிருக்குமா.''

''உனக்குத்தான் ஆறு மாசமா ஒரே அலைச்சலாச்சே, எங்க வீட்ல யாரையும் காணோம்?''



''நிவேதாவும், மருமகளும் சினிமாவுக்குப் போயிருக் காங்க.''

''ஓ அதனால எல்லா வேலையும் நீயே செஞ்சுட் டிருக்கயாக்கும்?''

''அது இருக்கறதுதாம்மா, நீங்க என்ன சாப்புட்டீங்க?''

''இப்பதான் மதிய சாப்பாடு முடிஞ்சதும் வர்றேன், மரு மக வந்தும் உனக்குப் பலனெதுவும் இல்ல போலிருக்கு.''

..............

''பாழும் வெயில்ல துணி துவைக்கறதுலிருந்து எல்லா வேலையும் நீயேதான் செஞ்சுட்டிருக்க.''

''என்ன பண்றதுமா, மருமகளுக்கு இந்த மாதிரி வேலையெல்லாம் செஞ்சு பழக்கமில்ல.''

''என்ன நீ இப்படி சொல்ற? இனிமேல் அவ பழகிக்க வேண்டியது தான், அப்புறம் காலம் பூராவும் நீயே கஷ்டப்படப் போறியா?''

................

''எனக்கெல்லாம் பாரு என் ரெண்டு மருமகளும் பிரமாதமா எல்லா வேலையும் செஞ்சுக்கறாங்க. எனக்குப் பொழுது போகறதுக்காக மட்டும் நானா சில வேலைகள எடுத்து செஞ்சுட்டிருக்கேன் அவ்வளவுதான்.''

''பாத்துட்டுத்தாம்மா இருக்கேன், எல்லா வேலையும் அவங்களே பாத்துக்கறாங்களே.''

''பின்ன உன்ன மாதிரி என்னையும் அப்பாவியா இருக்கச் சொல்றியா? பாவம் நீயும் தான் என்ன செய்வ, ஒண்ணுமில்லாத இடத்திலிருந்து மருமகள எடுத்திருந் தீன்னா உன்ன உக்கார வெச்சுட்டு குடும்பத்தையே அவ

தாங்கியிருப்பா. நீயும் என்ன மாதிரி அக்கடான்னு நிம்மதியா இருந்திருக்கலாம்.''

...........

''ஆனா நீ உன் மருமகளோட துணியையும் சேத்துத் துவைச்சுட்டிருக்க, நீ இந்த அளவுக்கு இடங்கொடுத்தா அப்புறம் அவ எப்படி உன்ன மதிப்பா?''

''நானென்னமா செய்யட்டும்?''

''ம். அவ பிறந்த வீட்ல பணமிருக்கு தான, வேலைக்கு ரெண்டு ஆளப் போட்டு சம்பளத்தையாவது குடுக்கச் சொல்லு.''

''ஆனா அதுக்கு நீயே இடங்குடுத்தா, அப்புறம் எங்கிட்டப் பணமிருக்குன்னு யாரையும் மதிக்காம ஆட ஆரம்பிச்சுடுவா அதயும் யோசிச்சுக்கோ.''

''என்னவோ நீ பாவம்னு எம்மனசுக்குப் பட்டதால சொன்னேன். நீ ஏதாவது உங்க வீட்டுக்காரர்கிட்ட முக்கியமா உன் மகங்கிட்ட சொல்லிடாதம்மா, ஏற்கனவே அவங்களுக்கு என்னப் புடிக்காது.''

மேலும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு அந்தப் பங்கஜமம்மா கிளம்ப, மஹாலட்சுமிக்குத் தான் ஒரே யோசனையாக இருந்தது.

அதிலும் மகனை நினைத்தால் சற்று பயமாகக் கூட இருந்தது, ஏனென்றால் அவன் சொல்லி எதையாவது கேட்காவிட்டால் மிகவும் கோபப்படுவானே.

ஏற்கனவே நேரங்காலம் பாராது அயராது உழைத்துக் கொண்டிருப்பவன் வேறு.

மற்றபடி கணவர் ஒருவருடைய உழைப்பில் மட்டும் குடும்பத்தை இந்த அளவுக்குப் பிரமாதமாகக் கொண்டு



செல்வது கண்டிப்பாக முடியாத காரியம் என்பதில் மட்டும் அவருக்குத் துளிகூட சந்தேகமிருக்கவில்லை.

கணவரால் முடியாது என்றல்ல, மகன் அவரை விடப் பன்மடங்கு திறமை வாய்ந்தவனாக இருந்து சாதித்தும் காட்டியிருந்தான்.

மருமகள் மிகவும் வசதியான இடமென்று சந்தோஷப் பட்டபோதே, வரதட்சணையாக ஒரு பைசா வாங்கக் கூடாதென்று சொல்லி விட்டிருந்தானே.

பெற்ற மகளுக்கு அவர்கள் ஆசையாக சீர் செய்வதற்குப் பெயர் வரதட்சணையா?

அப்படியானால் அவனுடைய தங்கைக்குக் கொடுத் ததை எதில் சேர்ப்பானாம்?

இருக்கிற அனைத்தையும் கொடுத்து அதற்கு மேலும் பல லட்சங்கள் கடன் வேறு பட்டானே.

இவன் மட்டும் என்ன பெரிய நியாயவாதி?

கணவனுக்கு ஏற்கனவே மகனுடைய எண்ணம் தா என்பதும் மஹாலட்சுமிக்குத் தெரியும்.

அதிலும் மருமகள் வேறு நண்பனுடைய மகளா யிற்றே. அதுவே அவருக்குக் கோடானு கோடி பணத் திற்கும் மேலானதாக இருக்கலாம்.

மகனுக்குக் கண்ணுக்கு லட்சணமான அழகான மனைவி கிடைத்ததே பெரிதாக இருக்கும்.

கடைசியாக அனைவரும் சேர்ந்து மிகவும் கூலாகத் தன்னை முட்டாளடித்து விட்டார்களே.

உடம்புக்கு சற்று முடியாமல் போனால் கூட ஒரு வேலையை எடுத்துச் செய்யவும் நல்ல மருமகள்

வாய்க்காமல் போக நான் மட்டும் என்ன பாவம் செய் தேன்?

இந்த மாதிரியான எண்ணங்கள் மஹாலட்சுமியின் மனதில் கடந்த சில நாட்களாகவே இருக்கிறதென்றாலும் இப்பொழுது பக்கத்து வீட்டுப் பங்கஜம் சொன்னது எரிகிற அடுப்பில் எண்ணெயை விட்டாற் போல ஆயிற்று.

இருந்திருந்து தன்னைப் போய் அனைவரும் இளிச்ச வாயன் ஆக்கி விட்டார்களே, பார்க்கலாம் இனி நடக்கப் போவதை என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டார் மஹாலட்சுமி.

அதிலும் பெரிய மகள் ராதிகா வேறு இரண்டு நாட் களுக்கும் முன்பு போன் செய்து அழுதது, மஹாலட் சுமிக்கு அடிக்கடி நினைவுக்கு வந்து கொண்டே இருந்தது.

நீ இல்லாத வீட்டிலிருந்து வந்தவள் தானே என்று தன்னைத் தனது மாமியார் அடிக்கடி குத்திக் காட்டிக் கொண்டே இருக்கிறார்களென்று சொல்லியிருந்தாள்.

அப்படியென்ன மகள் வெறும் கையோடா சென்றிருக் கிறாள்?

தங்கள் வீட்டுப் பெண் வசதியான இடத்திற்கு வாழப் போகிறாளென்று சீர் முறைகள் அனைத்தையும் கடன் வாங்கியேனும் தங்களது சக்திக்கு மீறித்தானே செய்து அனுப்பியிருக்கிறார்கள்.

அப்படிப் பார்த்தால் வசதியான இடத்திலிருந்து வந்த தனது மருமகள் மட்டும் என்னத்தைக் கொண்டு வந்து கொட்டி விட்டாள்?

அதிலும் அண்ணியை நன்றாக வைத்துக் கொள்ளச் சொல்லி வேறு மிகவும் கேட்டுக் கொண்டாளே அந்த அப்பாவிப் பெண் ராதிகா.



நான் எதற்காக நன்றாக வைத்துக் கொள்வதாம்?

எந்த விதத்தில் யோசித்துப் பார்த்தாலும் இந்த விஷ யத்தில் மகனை மீறித் தான் எதுவும் செய்ய முடியா தென்று மஹாலட்சுமிக்கு நன்றாகத் தெரிந்து போயிற்று.

இதற்குத் தானே நன்றாக யோசித்து வேறு ஏதாவது தான் செய்தாக வேண்டும். அதுவும் மகனுக்கும் கணவ னுக்கும் முடிந்த அளவு தெரியாமல்.

மேலும் வெகு நேரம் யோசித்த மஹாலட்சுமிக்குத் தான் இனி என்ன செய்ய வேண்டுமென்று தெரிந்தும் போயிற்று.

இரவு ஒன்பது மணிக்குக் கணவனும் ஒன்பதேகாலுக்கு மகனும் அடுத்தடுத்து வந்து சேர்ந்தார்கள்.

மஹாலட்சுமி தான் ஏற்கனவே முடிவு செய்திருந்தபடி, சுத்தமாக உடம்புக்கு முடியாதது போல காட்டிக் கொண்டு முனகிக் கொண்டு படுத்து விட்டிருந்தாள்.

படுத்திருந்த தாயுடன் தந்தை பேசிக் கொண்டிருக்க, தானும் சென்று பார்த்தான் மதிவதணன்.

''ஏம்மா படுத்துட்டிங்க?''

''என்னவோ தெரியலப்பா, இன்னைக்கென்னவோ உடம்புக்கு சுத்தமா முடியல.''

''என்ன பண்ணுதுமா'' என்று மகன் கேட்டுக் கொண் டிருக்க, ''நான் கொஞ்ச நேரத்துல வந்துடறேன்'' என்று எழுந்து சென்றார் குணசீலன்.

''என்னமா?'' என்று தாயின் அருகில் படுக்கையில் சென்று அமர்ந்திருந்த மதிவதணன் அவரைப் பார்க்க, ''பிரஸ்ஸர் இருக்கும் போலிருக்குப்பா, தல சுத்தி

விட்டுடுச்சு அதான் பேசாம வந்து படுத்துட்டேன்'' என்றார்.

''பின்ன எதுக்குமா இன்னைக்குப் பாத்து அவங்கள சினிமாவுக்கு அனுப்பினீங்க?''

''அதுல என்ன இருக்கு?''

''வாணி வீட்ல இருந்திருப்பாள்ல?''

''அவ இருந்தா மட்டும் என்னடாப்பா செய்துட முடியும்?''

''ஏதாவது உதவி தேவைப்பட்டா செஞ்சிருப்பா, நீங்களும் கொஞ்சம் ஃப்ரியா ரெஸ்ட் எடுத்திருக்கலாமே.''

''அவ எனக்கு உதவி செய்யறதா? போ கண்ணா நீயும் இப்பதான வந்திருக்க, உனக்குத்தான் கண்டிப்பாக் குளிச்சாகணுமே குளிச்சுட்டு வந்து உப்புமா செஞ்சு வெச்சிருக்கேன் சாப்பிடு போ.''

''சரி மெதுவா எழுந்திருங்க, டாக்டர்கிட்டப் போய்ட்டு வந்துடலாம்.''

''அதெல்லாம் வேண்டாம், போன ஆறு மாசமா நல்லா அலைஞ்சதுல உடம்ப கவனிச்சுக்க முடியாமப் போயிடுச்சு. ஒரு பத்து நாள் ரெஸ்ட்ல இருந்தா எல்லாம் சரியாப் போயிடும்.''

''எதுக்கும் நாளைக்குக் கண்டிப்பா டாக்டர்கிட்டப் போய்ட்டு வந்துடலாம். அப்புறம் இனி நீங்க ரெஸ்ட் எடுத்துட்டு வாணிய எல்லா வேலையும் செய்யச் சொல்லுங்கம்மா.''

தான் நினைத்த பாயிண்ட்டுக்கு வருகிறானே என்று மனதிற்குள் சந்தோஷப்பட்டுக் கொண்டவர், எதுவும் பேசாமல் மகனைப் பார்த்தார்.



''என்னம்மா?''

''என்னப்பா விளையாட்றியா?''

''ஏன் அவ செய்யமாட்டாளா?''

''அப்புறம் மூணு நாளைல அவங்கப்பா வீட்டுக்கு கிளம்பிப் போயிடுவா.''

''உங்களுக்குக் கற்பனை வளம் அதிகம்மா.''

''அது சரிதான் புதுப் பொண்டாட்டிய விட்டுக் குடுக்க உனக்கும் மனசு வராதுதான். அதோட உடம்புக்கு முடியாத ஆதங்கத்துல நான் எதையாவது உளறுவேன், நீயும் தப்பா எடுத்துக்காதேப்பா.''

''அதையெல்லாம் விடுங்கம்மா, இனி வாணியும் கொஞ்ச கொஞ்சமா செஞ்சு பழகட்டும் நீங்க முடிஞ்ச அளவுக்கு ரெஸ்ட் எடுங்க.''

............

''என்னமா சொல்லுங்க.''

''அப்படி எல்லா வேலைகளையும் செய்யச் சொன்னா, நாலு நாளைக்குக் கூடத் தாங்க மாட்டா. என்னால உங்களுக்குள்ள பிரச்சன வேண்டாம்பா, நான் வாங்கி வந்த வரமப்பிடி. நானே கொஞ்சம் சிரமப்பட்டாவது எல்லா வேலைகளையும் செஞ்சுக்கறேன் விட்டுடுப்பா.''

''ஏன் நீங்க ஏதாவது வேல சொல்லி வாணி செய்யலயாம்மா?''

''இத்தன நாள் போனதையெல்லாம் விட்டுடலாம் மதி, வாணியும் இந்த ஒரு மாசத்துல எல்லா வேலைகளையும் ஓரளவு கத்துக்கிட்டா. எனக்கு கொஞ்சம் உடம்பு சரியாகற வரைக்கும் அவள மேல் வேலைய

மட்டும் செஞ்சுக்க சொல்லிடுப்பா, அடுப்புல போட்டு இறக்கறதெல்லாத்தையும் நான் பாத்துக்கறேன். சமையல் தான் உங்களுக்கெல்லாம் வாய்க்கு ருசியா இருந்தாக ணுமே, அதனால அத மட்டும் நானே செஞ்சுக்கறேன்.''

''சரிமா இனி நீங்க ரெஸ்ட் எடுங்க அவங்க ரெண்டு பேரும் வந்ததும் உங்களுக்கு டிபன் கொண்டு வந்து தரட்டும்.''

''நான் அப்பவே சாப்டுட்டேன், மதி ஒரு சின்ன வேண்டுகோள்பா.''

''என்னமா சொல்லுங்க?''

''மேல் வேலைய நான் செய்யச் சொன்னதாக்கூட நீ வாணிகிட்ட சொல்ல வேண்டாம்பா, அத்தை இப்படி சொல்லிட்டாங்களேன்னு பாவம் அவ மனசு சங்கடப் படப் போறா. நிவேதா, ராதிகா மாதிரி தான் எனக்கு வாணியும், வசதியா இருந்த பொண்ணு முடிஞ்ச அள வுக்கு செய்யட்டும்.''

''சரிமா, நீங்க ரெஸ்ட் எடுங்க.''

## 16



மறுநாள் அதிகாலையிலேயே எழுந்து சமையலை ஆரம்பித்த மஹாலட்சுமி, ஏழு மணிக்குள் அனைத் தையும் செய்து முடித்து சூடாக எடுத்து டைனிங் டேபிள் மேல் வைத்து விட்டார்.

வாணி கிச்சனில் காபி தயாரித்துக் கொண்டிருக்க, ''அண்ணி'' என்று அழைத்துக் கொண்டே வந்தாள் நிவேதா.



''வா நிவேதா, என்ன இன்னைக்கு நீ நேரத்துலயே எழுந்திருச்சுட்ட போல?''

''ஆமா அண்ணி படிக்க வேண்டியிருந்ததால தான் நேரத்துல எழுந்துட்டேன், ஆனா நீங்க வழக்கத்த விடவும் லேட் போலிருக்கு.''

''ஆமா நிவேதா'' என்றவளுக்கு மனதிற்குக் கஷ்டமாக இருந்தது.

என்ன முயன்றும் தன்னால் அத்தைக்கு முன்பு எழுந்து வர முடியவில்லையே, இதற்கும் அத்தைக்கு இரவி லிருந்து உடல்நிலை வேறு சரியில்லையே.

அதிலும் தான் இன்று வழக்கத்தை விடவும் நேரங் கழித்து எழுந்ததில் மனம் உறுத்த ஆரம்பித்திருந்தது வாணிக்கு.

''நிவேதா காபி எடுத்துக்கோ.''

தன் அண்ணி வைத்திருந்த ட்ரேயிலிருந்து தனக்கு ஒரு டம்ளரை எடுத்துக் கொண்டாள் நிவேதா.

''நானே வேணும்னா எல்லார்க்கும் கொண்டு போய் குடுத்துடட்டுமா அண்ணி?''

''தேங்க்யூ'' என்று தனது நாத்தனாரிடம் ட்ரேயைக் கொடுத்தனுப்பிவிட்டுத் தனது அத்தையிடம் சென்றாள் வாணி.

''ஸாரி அத்தெ, உடம்பு சரியில்லாமக் கூட நீங்களே எழுந்து எல்லா வேலையும் செஞ்சுட்டீங்க போலிருக்கு.''

''இட்லி ரெண்டு ஈடு எடுத்து ஹாட் பாக்ஸ்ல வெச் சிருக்கேம்மா, ஒவ்வொருத்தரா சாப்பிட வர வர சூடா தோச ஊத்திக் குடுத்துடு.''

''அப்படியே லஞ்ச் எல்லாமே தயாரா இருக்கு. அதையே மூணு பேருக்கும் எப்பிடி வெக்கணும்னு கேட்டு லஞ்ச் பேக்ல வெச்சுக் குடுத்துடு.''

''சரி அத்தெ நான் பாத்துக்கறேன், நீங்க போய் ரெஸ்ட் எடுங்க.''

''ஏதோ வாய் நிறையவாவது சொல்றியே'' என்று சிரித்தபடி நகர்ந்த தனது மாமியாரை குற்ற மனப்பான்மை யுடன் சில வினாடிகள் பார்த்துக் கொண்டு நின்றாள் வாணி.

அங்கு வீட்டிலேயே ஆனாலும் கூட பாட்டிக்காக எவ்வளவு பார்த்துப் பார்த்து செய்கிறோம், இங்கு அத்தை யும் அப்படித்தானே என்று அன்றிலிருந்து மனதார அனைத்து வேலைகளையும் தானும் செய்ய வேண்டு மென்று நினைத்துக் கொண்டாள் வாணி.

நினைத்துக் கொண்டதோடல்லாமல் செய்யவும் செய்தாள்.

என்னதான் மனம் விரும்பினாலும் செய்ய வேண்டு மென்ற எண்ணமிருந்தாலும், அத்தனை வேலைகளை யும் செய்து பழக்கப்படாத வாணியால் பாதி வேலை களைத் தான் முடிக்க முடிந்தது.

அதற்கே அவள் எவ்வளவோ சிரமப்பட்டாள் எனலாம்.

அங்கு அப்பா வீட்டிலேயே ஆனாலும் கூட வாணி ஒன்றும் சோம்பியிருக்கும் ரகம் கிடையாது.

காலையில் எழுந்தாளானால் சதா ஏதாவது வேலை களைப் பார்த்துக் கொண்டே தான் இருப்பாள்.

என்ன அங்கு வேலை வாங்கினாளென்றால், இங்கு தானே செய்ய வேண்டியிருந்தது.



அதுவும் அங்கு பலர் செய்த வேலையை இங்கு தான் ஒருத்தியே செய்ய வேண்டியிருந்தது.

முடிந்த அளவு அனைத்து வேலைகளையும் தானே இழுத்துப் போட்டுச் செய்ய ஆரம்பித்திருக்கும் இந்த சில நாட்களுக்குள்ளேயே, வாணி மிகுந்த சிரமப்பட்டுப் போனாள் எனலாம்.

ஆனாலும் ஒரு துளியாகக் கூட அவள் அதை யாரிடமும் காட்டிக் கொள்ளவில்லை.

வாணி இயற்கையிலேயே ஆரோக்யமான பெண், மிகவும் சுறுசுறுப்பானவளும் கூட.

ஆனால் சில நாட்களாகவே தனக்கு ஏதோ சரியில்லா ததைப் போல உணரத் தொடங்கினாள் வாணி, அதிலும் ஏற்கனவே பழக்கப்படாத வேலைகளை மிகவும் சிரமப் பட்டு செய்தவளுக்கு உடலும் ஒத்துழைக்காமல் போக மனமுடைந்து போனாள்.

அதைத் தனது கணவன் கண்டு கொண்டானோ என்ற எண்ணம் வாணிக்கு. அவன் சொல்லித் தான் நிவேதா தனக்குக் காலையிலும் மாலையிலும் நிறைய உதவிகள் செய்கிறாளோ என்று வாணியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அதனால் தானோ என்னவோ தனது கணவனும் முன்பு போலத் தன்னை அனைத்திற்குமே மிகவும் எதிர்பார்ப்ப தில்லையோ என்றும் கூட நினைக்கத் தோன்றியது.

ஒரு விதத்தில் அவன் அப்படி நடந்து கொண்டதில் வாணிக்குத் தான் எதையோ இழந்து விட்டதைப் போலக் கஷ்டமாகக் கூட இருந்தது.

எது எப்படியோ ஏற்கனவே அன்பாகவும், விளை யாட்டுத் தனமாகவும் நடந்து கொள்ளும் நிவேதா தனக்குச் செய்யும் உதவிகள் வாணிக்கு மிகவும் பயனுள்ளவையாக இருந்தன.

'நீ இல்லாமல் இங்கு வீட்டில் அனைவருக்குமே மிகவும் கஷ்டமாக இருக்கிறதக்கா' என்று மதியம் தனது தங்கை தன்னை அழைத்துப் பேசியதிலிருந்து, வாணிக் கும் தனது வீட்டினரைப் பார்க்க வேண்டும் போல ஒரு பேராவல் எழுந்தது.

நேரம் ஆக ஆக அந்த எண்ணம் மிகவும் அதிகமாகிக் கொண்டே தான் போனது.

கடைசியில் ஒரே முடிவாக நிவேதாவை அழைத்துக் கொண்டு அப்பா வீட்டிற்குச் சென்று வரட்டுமா என்று தனது கணவனைக் கேட்கலாமென்று போன் செய்யப் போனவள், அதற்கு முன்பே ஹால் டெலிபோன் ஒலிக்க எடுத்துப் பேசினாள்.

வாணியின் பெரிய நாத்தனார் ராதிகா தான் பேசினாள்.

இன்னும் சிறிது நேரத்தில் நாங்கள் அங்கு வீட்டிற்கு வருகிறோம் அண்ணி என்று சந்தோஷமாக சொன்னாள் அவள்.

பாவம் அவளுக்குத் தனது தாய் வீட்டிற்கு வருகிற சந்தோஷம்.

நிவேதாவைப் போலவே ராதிகாவும் அண்ணி, அண்ணியென்று வாணியிடம் ஆசையாகத்தான் நடந்து கொண்டாள்.

எப்படியும் தான் இன்றைக்கு அப்பா வீட்டிற்கு சென்று வர முடியாதென்பது உறுதியாகத் தெரிந்து விட்டதில் வாணிக்கு மனதிற்கு மிகவும் கஷ்டமாக இருந்தது.



ஆனாலும் உடனே தன்னைத் தானே தேற்றிக் கொண்டாள்.

எரிந்து விழா விட்டாலும் எப்பொழுதும் சற்று இறுக்கமாகவே இருக்கும் அத்தை தனது மகள் வருவது தெரிந்து மிகவும் சந்தோஷமாகி விட, வாணியையும் அந்த சந்தோஷம் தொற்றிக் கொண்டது.

சொன்னது போலவே நான்கு மணிக்கு ராதிகா வீட்டி லிருந்து வந்து சேர்ந்தனர், ராதிகாவும் அவளது கணவனும் கூடவே அவரது தங்கையும்.

தனது அத்தை இவ்வளவு அழகாகக் கூட சிரிப்பார்களா? என்று வாணிக்கு ஆச்சரியமாக இருந்தது.

வந்ததும் வாணியுடன் சந்தோஷமாக சில நிமிடங்கள் பேசிய ராதிகா, பிறகு தனது தாயுடன் பேச ஆரம்பித்து விட்டாள்.

வேண்டா வெறுப்பாக கட்டாயத்தின் பேரில் வந்த வளைப் போல நடந்து கொண்ட ராதிகாவின் நாத்தனார் ஸ்வேதா யாரிடமும் அவ்வளவாகப் பேச மாட்டாளோ என்று வாணியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

ஆனால் நன்றாக கவனித்துப் பார்த்ததில் அவள் வந்ததிலிருந்து தன்னிடம் மட்டும் தான் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லையென்பது வாணிக்குப் புரிந்தது.

தானாக சில வார்த்தைகள் பேசியும் கூட பதில் வர வில்லை.

அதுவரைத் தன்னை யாருமே அப்படி அவமதித்துப் பழக்கமில்லாததால், வாணியும் அவளுடன் பேசும் முயற்சியை அத்தோடு கை விட்டிருந்தாள்.

மனதில் ஒரு மூலையில் கஷ்டமாக இருந்தாலும், அவள் பேசாவிட்டால் தனக்கென்ன வந்தது என்று வாணியால் அதை அலட்சியப் படுத்தவும் முடிந்தது.

''வாணி''

''சொல்லுங்க அத்தை.''

''சாப்பிட டிபன் மட்டும் குடுத்துட்டு இப்படி நின்னுட்டா எப்படி? குடிக்க யார் யாருக்கு என்ன வேணும்னு கேட்டுப் போட்டுட்டு வா.''

''இதோ போறேன் அத்தை'' என்று சென்றவள் தான் ஏற்கனவே அனைவரிடமும் கேட்டறிந்தபடி, குடிப்பதற்குச் சூடாக காபி, பூஸ்ட் என்று அனைத்தையும் கலக்கி எடுத்து வந்தாள்.

அனைவருக்கும் கொடுத்து விட்டுத் திரும்பியவள், ''தூ'' என்ற சத்தத்தில் நின்று திரும்பிப் பார்த்தாள்.

தான் கொடுத்திருந்த காபியை ஒரு வாய் குடித்துப் பார்த்து விட்டுத் தான் ராதிகாவின் நாத்தனார் அப்படி செய்தாளென்று வாணிக்குப் பிறகு தான் புரிந்தது.

''இதுக்குப் பேரெல்லாம் உங்க ஊர்ல காபியா? இந்த அளவுக்குக் கேவலமான காபிய நான் என் வாழ்நாள்ல குடிச்சதே இல்ல அதான் அப்படிப் பண்ணிட்டேன் ஸாரி'' என்றாள் அவள்.

அவள் ஸாரி கேட்காமலே இருந்திருக்கலாமோ என்று தோன்றியது வாணிக்கு.

ஆனாலும் இந்த அளவுக்குக் கூட மற்றவர்களை அவமதிக்க இவளால் எப்படி முடிகிறது?

ஆனால் அதையே அந்த ஸ்வேதா சொல்லக் கேட்டதில் வாணிக்குத் தான் மிகுந்த ஆச்சரியமாகிப் போயிற்று.



வாணிக்குத் தன்னைப் பிடிக்கவில்லையாம்.

அதிலும் தன்னைப் பார்த்துப் பொறாமையாம்.

அதனால்தான் இவ்வளவு மோசமாக காபி போட்டுக் கொடுத்தாளாம்.

தனக்கு வேண்டாமென்று சொல்லியிருந்த மஹாலட்சுமி, வாணியை அருகில் அழைத்து அவளது கையிலிருந்த ட்ரேயிலிருந்து ஒரு காபி டம்ளரை எடுத்துக் குடித்துப் பார்த்தார்.

என்ன சொல்லப் போகிறாரோ என்று வாணி சற்று பயத்துடன் பார்க்க, மஹாலட்சுமி வாணியைப் பார்த்த பார்வையில் எரிச்சலும், கோபமும் மிகுதியாகத் தெரிந்தன.

''ஸ்வேதா எதையும் மிகைப்படுத்தி சொல்லல, தயவு செஞ்சு யார் யாருக்கு காபி குடுத்தயோ அவங்ககிட்டயெல்லாம் திருப்பி வாங்கிட்டுப் போய்க் கீழ ஊத்திடு'' என்று தனது அத்தை சொன்னதில், அழுகை வந்துவிடும் போல ஆகிவிட்டது வாணிக்கு.

இருந்திருந்து தனது நாத்தனாரின் முன்னிலையில் இந்த அம்மா அண்ணியை இந்த அளவுக்குப் பேச வேண்டுமா? என்று ராதிகாவால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

நல்லவேளையாக வீட்டு மாப்பிள்ளை ஹாலில் அமர்ந்திருக்க, அங்கு பெண்கள் நால்வர் மட்டுமே இருந்தார்கள்.

நிவேதாவும் அன்றைக்குத் தான் வருவதற்குக் கொஞ்சம் நேரமாகுமென்று மதியமே அழைத்துச் சொல்லியிருந்தாள்.

''வேற ஏதாவது கலக்கிக் கொண்டு வரச் சொல்லட்டுமாம்மா?'' என்று மஹாலட்சுமி ஸ்வேதாவிடம்

கேட்க, அவள் பயந்து நடுங்குவது போல "ஐய்யய்யோ வேண்டாம்" என்றாள்.

தனது அண்ணி இன்னும் அங்கேயே நின்றிருப்பதைப் பார்த்து "குடிக்கத் தண்ணி வேணும் அண்ணி" என்று கேட்டாள் ராதிகா.

வாணி உள்ளே செல்லத் திரும்ப, சில வினாடிகளில் "இருங்கம்மா நானே போய்க் குடிச்சுட்டு வந்துடறேன்" என்று தானும் எழுந்து வாணியைத் தொடர்ந்து சமய லறைக்கு வந்தாள் ராதிகா.

வந்தவள் நேராக வாணியிடம் சென்று அவளது கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

"தயவுசெஞ்சு என்ன மன்னிச்சுடுங்க அண்ணி."

.........

தன்னை சாதாரணமாகக் காட்டிக் கொள்ள வாணி பட்ட சிரமத்தைப் பார்த்து மனம் உருகிப் போயிற்று ராதிகா வுக்கு.

மேலும் சில வினாடிகளில் ஓரளவு தன்னை சமாளித் துக் கொண்ட வாணி "என்ன பெரிய வார்த்தையெல்லாம் சொல்றீங்க?" என்று சிரித்தாள்.

"என்ன வா, போன்னு கூப்பிடுங்கன்னு நிறைய முறை சொல்லியிருக்கேனே அண்ணி" என்று குறைப்பட்டாள் ராதிகா.

"எப்படி ராதிகா, நம்ம ரெண்டு பேருக்கும் முழுசா ஒரு வருஷம் மட்டும் தான் வித்யாசமாக்கும்" என்றாள் வாணி.

"அதுமட்டுமா, அதோட நீங்க என்னோட அண்ணி யாச்சே. அண்ணாவுக்குக் குடுக்கற மரியாதையெல்லாம் அவர்ல பாதியான உங்களுக்கும் உண்டு" என்று சிரித் தாள் ராதிகா.



"ஓஹோ, அப்புறம்?"

"வாவ் நீங்க சிரிக்கும்போது இன்னும் எவ்வளவு அழகா இருக்கீங்க தெரியுமா அண்ணி?" என்று உண்மையாகவே ஆச்சரியப்பட்டவள், "அதான் எங்க அண்ணாவையே தலகுப்புற விழ வெச்சுட்டிங்களே அதுக்கும் மேல சொல்றதுக்கு எதுவுமே இல்ல" என்றாள்.

ஸ்வேதாவின் பேச்சுக் குரல் அருகில் கேட்க, "அந்த சிடு மூஞ்சிக்குத் தான் நீங்க ரொம்ப அழகா இருக்கறத னால உங்களப் பாத்து பொறாம" என்று சன்னக்குரலில் ரகசியம் போல உரைத்தாள் ராதிகா.

"நான் அத பெரிசா எடுத்துக்கல ராதிகா."

"அட நான் சொல்றது நிஜம்தான் அண்ணி. எனக்குக் கல்யாணமானதுல இருந்தே அண்ணாவப் பத்தி அவ ஏதாவது கேட்டுட்டே இருப்பா தெரியுமா அண்ணி?"

"அதுக்கும் மேல திடீர்னு அண்ணாவுக்கு மேரேஜ் பிக்ஸ் ஆனப்ப எங்கிட்ட அவ நடந்துக்கிட்டத வெச்சுத் தான் எனக்கு உண்மையே புரிஞ்சது."

"அதுலயும் தான் பணக்காரி, தான் நினைக்கற தெல்லாம் கண்டிப்பா நடந்தே ஆகணும்னு எப்படியெல் லாம் குதிப்பா தெரியுமா?"

"எங்கிட்டயே அந்த அளவுக்கு நடந்துக்கிட்டவ எங்க அண்ணாகிட்டயும் கொஞ்சமாவது தன் சுயருபத்தைக் காட்டியிருப்பான்னு தான் நானும் எப்பவும் நினைச்சுக்கு வேன் அண்ணி."

''ஆனா என்னோட அண்ணாவாச்சே, கண்ணாடிக் கல்லுக்கும் வைரக் கல்லுக்கும் இருக்கற வித்யாசத்தைக் கரெக்டா புரிங்சுக்கிட்டார்'' என்று பெருமையுடன் உரைத்தாள் ராதிகா.

தன்னைத் தாய் அழைப்பது கேட்க, ''இதோ வர் றேம்மா'' என்று சென்றாள் ராதிகா.

ராதிகா என்னதான் தன்னை சமாதானப்படுத்துவதற்காக நிறைய சொல்லிவிட்டுப் போயிருந்தாலும், தனது அத்தை சொன்னதை நினைத்ததில் அப்பொழுதும் கண்களைக் கரித்துக் கொண்டு வந்தது வாணிக்கு.

ஆனாலும் அப்போதைக்கு முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

தான் செய்தது பெரிய தவறுதானோ?

புகுந்த வீட்டிற்குத் தான் வந்ததிலிருந்து காலையில் வாணி தான் அனைவருக்கும் காபி கலக்கிக் கொடுத்துக் கொண்டிருக்கிறாள்.

அனைவருக்கும் என்றால் தனது மாமனாருக்கும் கணவருக்கும் எப்போதாவது நிவேதாவுக்கும்.

மற்றபடி காலையில் மிகவும் நேரத்திலேயே எழுந்து கொள்ளும் தனது அத்தை தனக்குத்தானே காபியை கலந்து கொள்ளுவார். காலையில் மட்டுமே அங்கு அனைவருக்கும் காபி குடிக்கும் வழக்கமிருப்பதால் இதுநாள் வரை தான் தயாரித்த காபியைத் தனது அத்தை குடித்ததே இல்லையேன்னு நினைத்துக் கொண்டாள் வாணி.

தனக்கும் காபி குடிக்கும் பழக்கமில்லாததால் இத்தனை நாட்களாகத் தான் பிரமாதமாக காபி கலக்கிக் கொண்டிருப்பதாகத் தான் வாணி நினைத்துக் கொண்டிருந்தாள்.



இதுநாள் வரை யாரும் ஒரு முறை கூடத் தான் செய்த எதையுமே குறை சொன்னதில்லையே.

ஆனால் அவர்கள் சொல்லியிருந்தால் இன்றைக்குத் தனக்கு பிரச்சனையே வந்திருக்காதோ என்று வாணியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

தன் மேல் எவ்வளவு அன்பிருந்திருந்தால் ஒரு குறை கூடக் கூறாது இருக்கிறார்கள் என்று நினைத்த வாணிக்கு சற்று பெருமையாகக் கூட இருந்தது.

அதிலும் பெரும்பாலான நாட்களில் தனது கணவனுக்கு மட்டுமே காபி கலந்து கொடுத்திருக்கிறாள்.

அதிலும் எதுவானாலும் அனைவருக்கும் வாய்க்கு ருசியாக இருக்க வேண்டும், முக்கியமாக உனது கணவனுக்கு அப்படியில்லா விட்டால் சாப்பிடாமலே எழுந்து போய் விடுவானென்று உண்மையிலேயே தனது அத்தை பார்த்துப் பார்த்து அனைத்தையும் செய்வது நினைவுக்கு வந்தது வாணிக்கு.

அனைத்து விதத்திலுமே அவனை சமாளிப்பது சற்று சிரமமாயிற்றே. அதிலும் எந்த விதத்திலுமே ஒரு சிறு பிழையைக் கூட பொறுத்துக் கொள்ள மாட்டான். மனிதனாக இருந்தால் தவறுவது இயல்பு தான் இவனைப் போலவே அனைவராலும் இருக்க முடியுமா என்று எரிச்சலுடன் தனது அத்தை சிலமுறை சொல்லக் கேட்டதுண்டு.

அப்படிப்பட்டவன் திருமணமான இத்தனை நாட்களில் தன்னை எந்தக் குறையுமே சொன்னதில்லையே.

அதற்குத் தன் மேல் கணவன் வைத்திருக்கும் அன்பு தான் காரணம் என்று நினைத்தவளுக்கு, அப்பொழுதே

அவனைப் பார்த்தாக வேண்டும் போல நாடி நரம்பெல்லாம் பரபரத்தது.

சிறிது நேரத்தில் மஹாலட்சுமி வந்து இரவு டிபனுக்கான வேலையைப் பார்க்க, வாணியும் ராதிகாவும் தங்களுக்குள் பேசிக் கொண்டே அவருக்கு உதவினார்கள்.

''நீங்க இங்க வர்றது எங்க கல்யாணத்துக்கப்புறம் இதுதான் ஸெகண்ட் டைம் இல்லையா ராதிகா?''

''ஆமா அண்ணி, அதனால தான் இன்னைக்கு ஒரேயடியா நின்னு கிளப்பிட்டே வந்துட்டேன்.''

''பரவாயில்லையே, நீ ஒன்னு சொன்னா அத அண்ணா உடனே செஞ்சுடுவார் போலிருக்கே.''

''அட நீங்க வேற அண்ணி, அப்படின்னு ஒரேயடியா சொல்லிட முடியாது.''

''என்ன ராதிகா, நீ அங்க சந்தோஷமா, நிம்மதியாத்தான இருக்க?''

''ஆமா அண்ணி, இங்க நம்ம வீட்ல சக்திக்கு மீறி நிறைய செலவு செஞ்சுதான் என் கல்யாணத்த முடிச்சாங்க. அவங்களுக்கு அது அவசியமானதா இருந்திருந்தாலும் அன்னைக்கு நாங்க இருந்த நிலைமைல அது எங்களுக்கு எவ்வளவு ஆடம்பரம் தெரியுமா?''

.............

''ஆனா அப்படியெல்லாம் செஞ்சும் கூட நல்லதா ஒரு வார்த்தை அவங்க சொல்லியிருக்க வேண்டாம். எவ்வளவு குறை சொன்னாங்க தெரியுமா அண்ணி?''

''நானும் கல்யாணத்துக்கு வந்திருந்தேன் ராதிகா, எல்லாமே நீட்டா ரொம்ப பிரமாதமா செஞ்சிருந்தீங்க.''



''இவ்வளவு ஏன் அண்ணி, வீடு கட்டணும் ஆனா இடம் தான் இல்லன்னு ரெண்டு தடவ அண்ணாக்கு முன்னாடி ஜாடையாய் பேசியிருக்காங்க. அதுக்காக அண்ணா அம்பது லட்சம் செலவு பண்ணி ஒரு இடத்தக் கூட வாங்கிக் குடுத்திருக்கார்.''

தந்தையிடமிருந்து வாங்கியதாகத் தான் இருக்குமென்று நினைத்துக் கொண்டாள் வாணி.

''அது அண்ணா ரொம்பக் கஷ்டப்பட்டு அவரோட பிஸினஸ்க்காக சேத்து வெச்ச பணம் அண்ணி.''

.............

''ஆனா எங்க புகுந்த வீட்டு மனுஷங்க அத ஒரு பொருட்டாக் கூட மதிக்கல, அதுவும் அவங்க ரேஞ்சுக்கு அந்த சின்ன இடத்துலெல்லாம் வீடு கட்டினா நல்லா இருக்காதாம்.''

''அதாவது நாம வாங்கிக் குடுக்கறதெல்லாம் ரொம்ப சீப்பாம், அப்படியிருக்கறவங்க பெருந்தன்மையா வேண்டாம்னு சொல்ல வேண்டியதுதான?''

''இடத்துக்கு இப்ப என்ன சொல்றாங்க?''

''சும்மா கிடப்புல போட்டு வெச்சு இங்க வீட்ல யாரையும், முக்கியமா அண்ணாவக் கஷ்டப்படுத்தக்கூடாதேன்னு அந்த இடத்துக்குத் தகுந்த மாதிரி சின்னதா ஒரு வீட்டக் கட்டிக்கலாமேன்னு அவரைக் கன்வின்ஸ் பண்ணியிருக்கேன் அண்ணி.''

''உன் மனசுக்கு எல்லாமே நல்லதாத் தான் நடக்கும், கவலைப்படாத ராதிகா.''

''நான் இப்ப உங்ககிட்ட சொன்னதெல்லாம் ரொம்ப நாளா என் மனசுக்குள்ள பூட்டி வெச்சிருந்தது அண்ணி,

ஆனா அதையெல்லாம் சொல்லி நான் உங்கள போரடிச் சுடலயே?''

''நீ எங்கிட்ட இந்த அளவுக்கு எல்லாத்தையும் சொன்னதுல எனக்கு எவ்வளவு பெருமையா இருக்கு தெரியுமா? ஆனா நீ சொல்றதப் பார்த்தா இங்க வீட்ல யாருக்குமே இதெல்லாம் தெரியாதா ராதிகா?''

''எப்பவாவது ரொம்பத் தாங்க முடியாமப் போயிடுச் சுன்னா அம்மாவுக்கு போன் பண்ணி மேலோட்டமா சில விஷயங்கள மட்டும் சொல்லுவேன் அண்ணி.''

''உங்க அண்ணாவுக்கு?''

''ஐயோ இல்ல அண்ணி, தெரிஞ்சா அவர் ரொம்ப மனசு கஷ்டப்படுவார். அதோட அண்ணா நல்லதுக்கு எவ்வளவு வேணும்னாலும் விட்டுக் கொடுப்பார்னாலும், அவ்வளவா பொறுமைசாலி கிடையாது.''

''கவலைப்படாதமா, எல்லாம் சரியாயிடும்.''

''தேங்க்ஸ் அண்ணி. உங்ககிட்ட சொன்னதுலயே பாதி மன பாரம் குறைஞ்சு போன மாதிரி நிம்மதியா இருக்கு.''

''அப்ப இன்னொரு முறை சொல்லிடேன் மீதியும் காணாமப் போயிடட்டும்.''

''போங்க அண்ணி'' என்று சிரித்தாள் ராதிகா.

''என்ன ரெண்டு பேரும் பேசிட்டே எல்லாக் காயை யும் கட் பண்ணிட்டீங்க போலிருக்கு. சரி பாதிய அப்ப டியே எடுத்து ஒரு கவர்ல போட்டு நல்லாக் கட்டி ப்ரிட்ஜ்ல வெச்சுடு வாணி'' என்றவர், மீதியை சமயலறைக்கு எடுத்துச் சென்றார்.

அடுத்ததாக இருவரும் வெங்காயத்தையும், தக்காளி, இஞ்சி, பூண்டு என்று அனைத்தையும் கட் செய்ய ஆரம்பித்தார்கள்.



''ஏய் வாயாடி என்ன பண்ணிட்டிருக்க?'' என்று பின்னாலிருந்து வந்த குரலில் துள்ளி விழுந்தாள் ராதிகா.

''போங்கண்ணா நான் பயந்தே போயிட்டேன். இதுக்குள்ள நீங்க குளிச்சுட்டே வந்துட்டீங்களா? முதல்ல நீங்க எப்ப வந்தீங்க?''

''அத நான் கேக்கணும்'' என்றவன், ''நீங்க ரெண்டு பேர் மட்டும் தனியா ஏதோ செஞ்சுட்டிருக்கீங்க தெரிஞ்சிருந்தா நான் லேட்டா வந்திருப்பேனே'' என்றான் மதிவதணன்.

''நீங்க லேட்டா வர்றதா? கல்யாணத்துக்கப்புறம் யாரோ விழுந்தடிச்சிட்டு ஓடி வர்றதாத்தான நான் கேள்விப்பட் டேன்.''

''பெரிய மனுஷி இன்னும் வேற என்னவெல்லாம் கேள்விப்பட்டீங்க?''

''அப்புறம் உங்களையெல்லாம் இப்ப அப்பாயிண்ட் மெண்ட் வாங்கித்தான் பாக்கணுமாமே அண்ணா, நிஜமாவா?''

''ஆனா உன்னப் பாக்கறதுக்கு இப்பவெல்லாம் அப் பாயிண்ட்மெண்டே கிடைக்கறதில்லையாமே, அப்படியா?''

''ஓ, இப்படியெல்லாம் பேசினா நாங்க கேக்க வந்த விஷயத்தையே மறந்துடுவோமாக்கும்?''

''அப்ப டைரக்டா விஷயத்துக்கே வா, விடுகதையெல் லாம் ஏன் போடற?''

''பின்ன நீங்க ஏன் ஒருமுறை கூட எங்க வீட்டுக்கு வரவே இல்லையாம்.''

''ம், புதுசாக் கல்யாணமானவங்களுக்கு எத்தனையோ வேலையிருக்கும்'' என்று அவன் தனது மனைவியைப்

பார்த்த பார்வையில், வாணி தன் முக பாவனையை மிகவும் கட்டுப்படுத்திக் கொண்ட பிறகும் கூட அவளது முகம் லேசாக சிவந்து தான் போனது.

''ம், புரியது புரியுது.''

''சரி நம்மள மாதிரி தான அவங்களும் எதுக்குத் தேவையில்லாம போய் டிஸ்டர்ப் பண்ணி எரிச்சல வர வெக்கணும்னு நினைச்சோம்.''

''ஓ, அப்படியா விஷயம்? அப்ப நாங்க வந்து இப்ப உங்கள டிஸ்டர்ப் பண்ணிட்டோம், அதோட நாங்க வந்ததுல உங்களுக்கு எரிச்சலும் கூட.''

''நாங்களே மறைமுகமா தான சொல்றோம் அத கண்டும் காணாம இருக்கறத விட்டுட்டு இப்படி வெளிப்படையாவே கேட்டா அப்புறம் நாங்க ஆமான்னு தான் சொல்லணும் இல்லையாம்மா?'' என்று மதிவதணன் தனது மனைவியையும் பேச்சுக்குள் இழுக்க, ''அம்மாடி இனிமேல் நாங்க வந்தா எதுக்கு வந்தீங்கன்னு கூட கேப்பீங்க போலிருக்கே'' என்று வெகுவாக ஆச்சரியம் காட்டினாள் ராதிகா.

''மாப்பிளைய என்னமா இன்னும் காணல?''

''ஸ்வேதா ஏதோ பர்ச்சேஸ் பண்ணனும்னு சொல்லிட்டிருந்ததால அவள அழைச்சுட்டுப் போயிருக்கார். இன்னும் கொஞ்ச நேரத்துல வந்துடுவாங்கண்ணா.''

''பத்து நிமிஷத்துக்கு முன்னாடி பேசினப்ப, மாப்ள சொன்னாருமா, அப்புறம் இன்னும் ஒரு வாரத்துல வீட்டு வேல ஆரம்பமாயிடும் இல்லையா?''

''ஆமாண்ணா, அவரு உங்ககிட்ட சொன்னாரா?''

''மாப்ள பத்து நாளைக்கு முன்னாடியே எங்கிட்ட சொன்னார்மா, அப்புறம் இப்ப உனக்கு அங்க எந்தப் பிரச்சனையும் இல்லையே ராதிகா.''



தன் அண்ணன் கேட்க வருவது புரியாமல், ''என்னண்ணா?'' என்று கேட்டாள் ராதிகா.

''அவங்க ஜாடமாடையா ஏதாவது பேசினாலும் அட்ஜஸ்ட் பண்ணி இருமா, உங்க வீட்டு வேல முடிஞ்சதும் தனியா வந்துடுவீங்களாம்.''

''ம்''

''அதுக்காக நீங்க தனிக் குடித்தனம் வர்றத நான் என்கரேஜ் பண்றதா, நினைச்சுக்க வேண்டாம். உங்க வீட்ல எல்லாருக்குமே அந்த எண்ணம் இருக்கறதால தான் நானும் சொல்றேன்.''

''சரிண்ணா.''

''கூட்டோ, தனியோ அது எப்படியிருந்தாலும் பெரியவங்களுக்கு மரியாதை குடுத்து விட்டுக்குடுத்து தான் போயாகணும், இங்க அம்மா அப்பா ஏதாவது சொல்லிட்டா எப்படி எடுத்துக்கற அந்த மாதிரி அதவிட ரெண்டு மடங்கு அதிகமாவே அவங்ககிட்ட விட்டுக்குடுத்துப் போகணும் ராதிகா.''

''கண்டிப்பாண்ணா, நீங்க சொல்றதுக்கு முன்னாடியே நான் அப்படித்தான் நடந்துக்கறேன்.''

''நீதான் என் தங்கையாச்சே'' என்று தங்கையின் முதுகில் விளையாட்டுக்குத் தட்டினான் மதிவதணன்.

''இந்த விஷயத்துல என்ன உங்க தங்கையா இருந்து பாத்தா எனக்கு இந்நேரம் மூக்குக்கு மேல கோபம் தான் வந்திருக்கணும்'' என்ற ராதிகா தன் அண்ணியைப் பார்த்து சிரித்தாள்.

''என்ன ராதிகா?''

"உங்க அளவுல பாதி அளவு சொத்து கூட இல்லாதவங்கெல்லாம் ரொம்பத் திமிரா, கர்வமா நடந்துக்கும் போது உங்களால எப்படி அண்ணி இப்படியெல்லாம் இருக்க முடியுது?"

"நாம எவ்வளவு பெரிய பணக்காரங்களா இருந்தாலும், நம்மள விடப் பெரிய பணக்காரங்களும் உலகத்துல இருக்கத்தான செய்வாங்க. அதோட சந்தோஷமான வாழ்க்கைக்கு ஆதாரம் உண்மையான அன்பும், விட்டுக் குடுத்துப் போற மனப்பான்மையும் தான ராதிகா."

"சபாஷ் அண்ணா நீங்க ரொம்பவும் குடுத்து வெச்சவர் தான்" என்று உண்மையிலேயே உணர்ந்து சொன்னாள் ராதிகா.

"அதுலென்ன சந்தேகம்?" என்ற கணவனுடைய பார்வையை சந்திக்க முடியாமல் அவ்விடத்தை விட்டுப் போயே விட்டாள் வாணி.

"இந்தாப்பா காபி எடுத்துக்கோ" என்று தாய் கொண்டு வந்து கொடுத்ததை வாங்கிக் கொண்டான் மதிவதணன்.

தங்கை தன்னைப் பார்த்து சிரிக்க, என்னவென்று கேட்டான்.

தாய் அகன்றதும், சற்று முன்பு நடந்த அனைத்தையும் தனது அண்ணனிடம் சொன்னாள் ராதிகா.

எதுவும் பேசாமல் தான் சொன்னதைக் கேட்டுக் கொண்ட தனது அண்ணனின் முகத்திலிருந்து ராதிகாவால் எதையும் கண்டு கொள்ள முடியவில்லை.

"ஆமா நீ எதுக்கு சிரிச்ச?"

"உங்களுக்கு அம்மா காபியெல்லாம் பிடிக்குமாண்ணா?"



எதுவும் பேசாமல் சில வினாடிகள் தங்கையின் முகத்தைப் பார்த்தவன், "வேலையைப் பாரு வாயாடி" என்று அவ்விடத்தை விட்டு நகர்ந்தான்.

மேலும் சில நிமிடங்களில் மாப்பிள்ளையும், அவரது தங்கையும் திரும்பி வந்திருந்தனர்.

"என்ன அண்ணி அதுக்குள்ள எங்க போனீங்க?" என்று ராதிகா சிரித்துக்கொண்டே கேட்க, "விளக்கேத்தி வெச்சுட்டு வந்தேன் ராதிகா" என்றாள் வாணி.

"சரி நம்பிக்கறேன்" என்று ராதிகா சொல்ல, தனது அத்தை சொன்ன வேலைகளை செய்யலானாள் வாணி.

ஒரு மணி நேரத்தில் அனைவரும் சாப்பிடுவதற்காக வந்து அமர, "நீ எதையும் செய்யலையே" என்று வாணியைப் பார்த்தாள் ஸ்வேதா.

வாணி எதுவும் பேசாமல் ப்ளேட்களை எடுத்து வைக்க, ஆண்கள் இருவரும் பேசிக் கொண்டே சாப்பிட வந்து அமர்ந்தார்கள்.

"நானும் பரிமாறரேன்" என்று ராதிகாவும் வர, "நீங்க ரெண்டு பேரும் கூட உக்காந்துக்கோங்க நான் பரிமாறிக்கறேன்" என்ற மஹாலட்சுமி வந்து வாணியையும் ராதிகாவையும் அமர்ந்து கொள்ளச் செய்தார்.

"உங்க சமையல் சூப்பர் ஆன்ட்டி" என்று ஸ்வேதா சொல்ல, "ஏதோ வாய் நிறைய சொல்லவாவது செய்யறையே" என்றான் அவளது அண்ணன்.

"ஏன் பின்ன நான் வேறென்ன செய்யலன்னு சொல்றீங்க?" என்று ஸ்வேதா தன் அண்ணனைப் பார்க்க, "இல்ல உன் கையால நாங்க இன்னும் ஒரு வாய் கூட சாப்பிட்டதே இல்லேங்கற ஆதங்கத்துல சொல்லிட்டேன் அதான்" என்ற தனது அண்ணனைப் பார்த்தாள் ஸ்வேதா.

''அடடா தங்கை கையால சாப்பிடணும்னு உங்க அண்ணாவுக்குத்தான் எவ்வளவு ஆசை, இந்தா ஸ்வேதா இந்த சப்பாத்திய எடுத்து உங்க அண்ணாவுக்குப் பரிமாறு'' என்று மதிவதணன் சப்பாத்திகள் இருந்த ஹாட் பாக்ஸை ஸ்வேதாவின் அருகில் நகர்த்தி வைத்தான்.

''சும்மா விளையாட்டுக்கு தான் சொன்னேன். நீ சாப் பிடுமா'' என்று தனது தங்கையைப் பார்த்துச் சொன்னான் கார்த்திக்.

''நான் என்ன பண்றது வீட்ல வேலைக்கு ஆளுங்க இருக்கறதுனால கிச்சனுக்குள்ள போக வேண்டிய அவ சியமே இல்லாமப் போயிடுச்சு.''

''ம். அப்புறம்?''

''அட ஆமாண்ணா, இப்ப ராதிகாவயே எடுத்துக் கோங்க இங்க எல்லாமே செஞ்சு பழகினதுனால தான அங்க நம்ம வீட்ல எல்லாமே பிரமாதமா செய்யறா'' என்றாள் ஸ்வேதா.

ஸ்வேதாவுக்கு ராதிகாவை விடக் கூட ஐந்து வரு டங்கள் அதிகமென்பதால், அவளை ஒருமையிலேயே அழைத்துப் பழகியிருந்தாள்.

''சரி அப்ப வாணிய எடுத்துக்கோ, நம்ம வீட்ல இருக்கறத விடக் கூட அவங்க வீட்ல வேலைக்காரங்க நாலு மடங்கு அதிகமாத்தான் இருக்காங்க. ஆனா இங்க வந்து எல்லா வேலையும் செய்யறாங்க தான?''

ஏதோ ஜோக்கைக் கேட்டு விட்டதைப் போல சிரித்த ஸ்வேதாவை அனைவரும் பார்க்க, ''தயவுசெஞ்சு அந்த வார்த்தைய மட்டும் சொல்லாதீங்கண்ணா'' என்றாள் மீண்டும் வந்த சிரிப்பைக் கட்டுப்படுத்த முயன்றபடி.



.........

''அவ போட்டுக் குடுத்த காபிய மட்டும் நீங்க குடிச் சிருந்தீங்கன்னா, இந்த வார்த்தையை சொல்லியிருக்கவே மாட்டீங்க.''

''ஏன், எனக்கு வாணி குடுத்த பூஸ்ட் பிரமாதமா இருந்ததே.''

வாணி பாட்டுக்கு தனக்கு சம்பந்தமே இல்லாத எதைப் பற்றியோ பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் போல பேசாமல் சாப்பிட்டுக் கொண்டிருக்க, ''அண்ணி போட்ட காபி கொஞ்சம் லைட்டாப் போயிடுச்சு அத சொல்றாங்க'' என்று கணவனிடம் சொன்னாள் ராதிகா.

ராதிகா சாதாரணமாக சொன்ன பதிலில், தான் தான் ஏதோ ஒன்றுமில்லாததை வேண்டுமென்றே பெரிதாக்கு வதைப் போலத் தோன்ற, ஸ்வேதாவுக்கு வாணியின் மேலிருந்த கோபம் மேலும் அதிகம் தான் ஆனது.

ஆனால் அப்போதைக்கு அதைக் காட்டும் வழி தெரி யாமல் தன்னை சாதாரணம் போலக் காட்டிக் கொண்டாள்.

மற்ற அனைவருமே அந்த வாணியுடன் நன்றாக சிரித்துப் பேச, அதிலும் ராதிகா வாணியை அண்ணி, அண்ணி என்று குழைந்ததை ஸ்வேதாவால் சுத்தமாக சகித்துக் கொள்ளவே முடியவில்லை.

அனைவரும் சாப்பிட்டு முடித்து எழுந்திருக்க, வாணியை அழைத்தாள் மஹாலட்சுமி.

''சொல்லுங்க அத்தை.''

''ராதிகாவ வெறுங் கையோட அனுப்பினா நல்லா இருக்காது, நீ வந்து இந்த மாவ சலிச்சுக் குடுமா நான் மைசூர்பாகுக்கு பாகு காய்ச்சறேன்.''

"குடுங்க" என்று தனது அத்தைக்கு விரைவாக அனைத்து உதவிகளையும் செய்து கொடுத்தாள் வாணி.

ஒரு மணி நேரத்தில் ஒரு ஐந்து லிட்டர் தூக்கு நிறைய கமகமவென சூடான மைசூர்பாகுகளை எடுத்து அடுக்கி முடித்தார் மஹாலட்சுமி.

"எதுக்குமா இவ்வளவு வெச்சுக் குடுக்கறீங்க?" என்று வந்தாள் ராதிகா.

"ஆமாம் போ. இது கூட இல்லேன்னா எப்படி? குடிக்கறதுக்கு எல்லாருக்கும் என்னென்ன வேணும்னு கேட்டுட்டு வாம்மா."

"சரிமா, எப்படிமா இவ்வளவு ஸ்வீட் செய்யற அளவுக்கு எல்லாமே ரெடியா வெச்சுட்டிருந்தீங்களா?"

"இந்த வாரத்துல நீ எப்படியும் வருவேன்னு தெரிஞ்சு தான் எல்லாமே தயாரா வைச்சுட்டிருந்தேம்மா."

"ஓ, என்னமா நிவேதாவ இன்னும் காணோம்?"

"அவளோட மேம்க்கு இன்னைக்குக் கல்யாணம், அதுக்குத் தான் போயிருக்கா."

"சொன்னாமா, அவ எப்பத் திரும்பி வருவா?"

"உங்க அண்ணங்கிட்டே தான் சொல்லிட்டிருந்தா, நீ போய் முதல்ல குடிக்க யார் யாருக்கு என்ன வேணும்னு கேட்டுட்டு வா."

சரியென்று ராதிகா நகரவும், நிவேதா வரவும் சரியாக இருந்தது.

ராதிகா தங்கையுடன் பேசிக் கொண்டிருக்க, "அங்க உங்க வீட்டுக்குப் போனதும் ஸ்வீட்டையெல்லாம் வேற



ஒரு பெரிய பாத்திரத்துல பரவலா அடுக்கி வெச்சுடு இன்னும் ரொம்ப சூடா இருக்கு" என்றார் மஹாலட்சுமி.

"அக்கா நீ ஒரு நாளைக்காவது இங்க இரேன்."

"இல்ல நிவேதா, இன்னொரு நாளைக்குக் கண்டிப்பா வந்து இருக்கறேன்."

"ஏன் நீ எங்ககூட வாயேன் ரெண்டு நாள் இருந்துட்டு வருவியாம்."

"இல்ல ஸ்வேதாக்கா, எனக்குக் காலேஜ் போகணும்."

"ஏன் அங்கிருந்து போக முடியாதாக்கும்? எது எப்படியோ ராதிகா இல்லேன்னா அங்கு மம்மிக்கு ஒன்னும் சமாளிக்க முடியாது ஆன்ட்டி" என்றாள் ஸ்வேதா.

ராதிகா வாணியுடன் பேசிக் கொண்டிருக்க, "அப்படியாம்மா" என்றார் மஹாலட்சுமி.

"ஆமாம், அந்த அளவுக்கு ராதிகாவே எல்லா வேலைகளையும் பாத்துக்குவா. மம்மி எவ்வளவு ஃப்ரியா, நிம்மதியா இருக்காங்க தெரியுமா ஆன்ட்டி?"

"ரொம்ப சந்தோஷம்மா."

"ஆனா உங்களுக்கு தான் அந்தக் கொடுப்பின இல்லாமப் போயிடுச்சு போலிருக்கு ஆன்ட்டி. எல்லா வேலைகளையும் நீங்களே தான் செஞ்சுட்டிருக்கீங்க."

அங்கே அவளது தாய் குத்திக் காட்டி வேலை வாங்குவதெப்படி, இங்கே அதை எந்த அளவுக்கு மாற்றி சொல்கிறாள் என்று ராதிகாவால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அதோடு இங்கே தன் அண்ணியைக் குறை சொல்வதற்கு இவள் யார்?

அதற்கு இவளுக்கு என்ன உரிமை இருக்கிறது?

வாணியின் அனிச்சம்பூ முகம் சற்றே வாடித் தெரிய, ''அண்ணியும் எல்லாமே பிரமாதமா செஞ்சுட்டுத் தான் இருக்காங்க'' என்றாள் ராதிகா.

''அதத்தான் எப்படின்னு பாத்தேனே'' என்று சிரித்தாள் ஸ்வேதா.

''நீ செய்யறதுல பத்துல ஒரு பங்கு வேல கூட செய்யற மாதிரி தெரியல'' என்றாள் மீண்டும்.

உண்மையிலேயே தன் மகள் அவ்வளவு சிரமப் படுகிறாளா? என்று மஹாலட்சுமியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

ஸ்வேதா ஹாலுக்கு செல்ல, ''அக்கா வாயேன் நானும் அண்ணியும் போய்ப் பர்ச்சேஸ் பண்ணிட்டு வந்ததை யெல்லாம் காட்டறேன்'' என்று தன் அக்காவின் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு போனாள் நிவேதா.

''வாணி இங்க வா இதுல பாதாம் ட்ரிங் இருக்கு கொண்டு போய் எல்லாத்துக்கும் குடுத்துட்டு வா'' என்று தன் அத்தை கொடுத்ததை வாங்கிக் கொண்டு சென்றாள் வாணி.

ஹாலில் இருந்த ஆண்கள் இருவருக்கும் கொடுத்த வாணி, சற்று பயத்துடனேயே அடுத்தாக அமர்ந்திருந்த ஸ்வேதாவிடம் சென்று ட்ரேயை நீட்டினாள்.

''ஐயய்யோ இன்னொரு முறை விஷப்பரீட்சையா, தயவுசெஞ்சு என்ன விட்டுடு'' என்று அவள் பயப்படுவது போல நடிக்க, அந்த நேரம் பார்த்து ஹாலுக்கு வந்த மஹா லட்சுமி ''நான் கலக்கினது தான் எடுத்துக்கோமா'' என்றார்.

''அத வாயத் திறந்து சொல்றதுக்கென்ன? போ அவங்க ரெண்டு பேருக்கும் கொண்டு போய்க் குடு'' என்று மருமகளை அனுப்பி வைத்தார்.



மேலும் சிறிது நேரத்தில் குணசீலன் வர, அவருடனும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்த பின்பே ராதிகா வீட்டினர் கிளம்பினர்.

ராதிகா சந்தோஷமாக கையசைத்து விடைகொடுக்க, கார் காம்பவுண்டைத் தாண்டி சென்ற பிறகே அனைவரும் வீட்டுக்குள் வந்தனர்.

பாவம் மகள், அவளது புகுந்த வீட்டில் அவளுக்கு வேலை மிகவும் அதிகம் போலிருக்கிறது இப்படி இளைத் துப் போய்விட்டாளே.

தனக்கும் மருமகளாக ஒருத்தி வந்து வாய்த்திருக் கிறாளே.

இனிமேல் தானும் பாவம் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது என்று நினைத்த மஹாலட்சுமி, ''உங்கிட்ட வேல வாங்கறதுக்குள்ள போதும் போதும்னு ஆயிடும் எல்லாம் என் தலைவிதி எல்லாரும் குடிச்சுட்டு வெச்சிருக்கற டம்ளர்கள எடுத்துட்டு வா'' என்று வாணியிடம் எரிந்து விழுந்துவிட்டுப் போனார்.

'மஹாராணிக்கு எல்லாத்தையும் ஒவ்வொன்னா சொல் லிட்டிருக்கணும்' என்று தாய் முணுமுணுத்துக் கொண்டே சென்றது மதிவதனனின் கண்களில் படத் தவறவில்லை.

காலையில் வாணியின் தந்தை தன்னுடன் பேசியது தான் நினைவுக்கு வந்தது அவனுக்கு.

''வாணிக்கு அதிர்ந்து பேசியோ, யாரையும் அதட்டியோ பழக்கமில்ல. அவளும் யாரும் ஒரு வார்த்த கூட குறை சொல்ல முடியாத அளவுக்கு தான் நடந்துக்குவா.''

''எங்க வீட்டு ராணி அவ, நாங்க எல்லாரும் வாணிய ரொம்பவும் மிஸ் பண்றோம் மாப்ள'' என்று சொல்லும்

போது வாணிக்காக அவளது வீட்டில் அனைவரும் எவ்வளவு ஏங்குகிறார்கள் என்பது மதிவதனனுக்கு நன்றாகவே புரிந்தது.

தன் மனைவியை யாருக்குத்தான் பிடிக்காமல் போகும் என்ற பெருமிதமும் கூட.

ஆனால் இங்கே தன் அன்னை மனைவியை நடத்தும் விதம் ஒன்றும் சரியாகப் படவில்லையே.

''காலைல ஆறு மணிக்குள்ள எழுந்து வந்திருக்கணும், இன்னொரு தடவ சொல்ல வெச்சு என் உயிர வாங்காத'' என்று தன் அத்தை முறைத்ததை வாணியால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

இதோ வரத் தயாராக இருக்கிறேன் என்பது போல கண்களில் நீர் நிறைந்துவிட, உதட்டைக் கடித்து சமாளித்துக் கொண்டு அவ்விடத்தை விட்டு நகர்ந்தாள் வாணி.

கண்களில் நீருடன் சென்ற மருமகளைப் பார்த்த குணசீலனுக்கும், மனைவியின் மேல் எரிச்சல் தான் வந்தது.

குளியலறைக்குள் சென்று முகத்தை நன்றாகக் குளிர் நீரில் அடித்துக் கழுவி தன்னை சமாளித்துக் கொண்ட வாணி, சில நிமிடங்களில் பழைய மனநிலைக்குத் திரும்பி விட்டிருந்தாள்.

கடவுளே கணவனை எப்படி எதிர்கொள்வது என்று நினைத்துக் கொண்டே சென்ற வாணிக்கு, அவனும் தன்னை எதிர்பார்த்திருப்பது போலத்தான் தோன்றியது.

''நான் இன்னைக்கே உங்க வீட்டுக்குப் போய்ட்டு வரலாம்னு இருந்தேம்மா, கடைசிக்கு நாளைக்காவது போய்ட்டு வரலாம் அஞ்சு மணிக்கு வந்துடுவேன் ரெடியா இரு.''



''நிஜமாவா மதி சொல்றீங்க?''

''இல்ல சும்மா தான் சொன்னேன்.''

''மதி ப்ளீஸ்.''

''என்ன ப்ளீஸ், இவ்வளவு தூரத்துலெல்லாம் நின்னு பேசினா என்னால எதுவும் சொல்ல முடியாது.''

''சரி இப்ப'' என்று கணவனை ஒட்டி அமர்ந்து கொண்டு அவனது கழுத்தைக் கட்டிக் கொண்டு கேட்டாள் வாணி.

''ம் இப்ப யோசிக்கலாம்'' என்றவனது பார்வை என்னென்னவோ செய்ய, ''ப்ளீஸ் பதில் சொல்லுப்பா'' என்றாள் வாணி.

''இப்படிக் கேட்டாலும் பதில் சொல்ல முடியாது போலிருக்கே'' என்ற கணவனது பார்வையில் சிணுங்கினாள் வாணி.

''வாணி''

''ம்''

''அம்மா உடம்பு சரியில்லாத டென்ஷன்ல கூட எதையாவது பேசுவாங்க. நீ மனசுல வெச்சுக்காதடா.''

''என்ன மதி நீங்க, இதையெல்லாம் நீங்க எங்கிட்ட சொல்லணுமா? உங்களுக்காக இன்னும் ஆயிரம் மடங்கு கஷ்டம் வந்தாக் கூடத் தாங்கிக்குவேன்'' என்ற மனைவியைக் கண் இமைக்காது பார்த்தான் மதிவதனன்.

''என்ன மதி அப்படிப் பாக்கறீங்க?''

''ஏன் அப்படி?''

''ம், ஏன்னா எனக்கு உங்கள அவ்வளவு பிடிக்குமாக்கும்.''

''எவ்வளவு காட்டேன்.''

''ஒன்னும் சொல்ல மாட்டேன் போ'' என்றவளிடம் கணவனது கைகள் எல்லை மீற, அதைத் தடுக்கப் பார்த்தும் முடியாமல் அவன் மேலேயே சாய்ந்தாள் வாணி.



# 17

வாணிக்கு அன்றைக்குக் காலையில் எழுந்ததிலிருந்தே ஒன்றும் சரியாகப் படவில்லை.

படுக்கையிலிருந்து எழும்போதே உடலில் சக்தியே இல்லாதது போல கால்கள் துவண்டு போக, மிகவும் சிரமப்பட்டே காலைக் கடன்களை முடித்தாள்.

என்ன முயன்றும் சமயலறைக்குள் செல்லும் போதே மணி ஏழாகி விட, சற்று பயத்துடனேயே தனது அத்தையருகில் சென்று நின்றாள் வாணி.

''வாமா, யார் என்ன சொன்னா என்ன நீ உன் இஷ்டத்துக்கு தான் எல்லாம் செய்வ இல்லையா?''

''அச்சச்சோ இல்ல அத்தை, என்னவோ தெரியல உடம்புக்கே முடியல.''

''நினைச்சேன். ம், அப்புறம்.''

தான் ஏதோ வேண்டுமென்றே பொய் சொல்வதைப் போல அவர் கேட்ட விதத்தில் மனதிற்கு மிகவும் கஷ்டமாக இருக்க, ''நிஜமாதான் சொல்றேன்'' என்று சொல்லி முடிப்பதற்குள் வாணிக்கு அழுகையில் உதடு துடித்தது.

''சரிசரி இனியாவது நின்னு டைம் வேஸ்ட் பண்ணிட்டிருக்காம வேலையப் பாரு.''

அதற்குப் பிறகு நிற்கக் கூட நேரமில்லாமல் வாணிக்கு வேலையே சரியாக இருந்தது.



பதினோரு மணி வரை சிரமப்பட்டு சமாளித்தவள், அதற்குப் பிறகு சுத்தமாக முடியாமல் போய்ப் படுத்து விட்டாள்.

படுத்தவள் சிறிது நேரம் நன்றாகத் தூங்கி விட, விழித்துப் பார்த்த போது மணி பன்னிரெண்டாகி விட்டிருந்தது.

அவசரமாக வந்து வீடு முழுக்கக் கூட்டித் துடைத்தவள், துணிகளைத் துவைப்பதற்காக அந்தப் பெரிய அழுக்குத் துணிக் கூடையை சிரமப்பபட்டு மாடிக்குத் தூக்கிக் கொண்டு போனாள் வாணி.

போன வேகத்தில் தலை சுற்றிவிட, மாடிப்படி கிரில்லை இறுக்கமாகப் பிடித்தபடி அப்படியே கண்களை மூடி அமர்ந்து விட்டாள்.

கடவுளே எனக்கு என்ன ஆயிற்று என்று நினைத்தவளுக்கு கண்களிலிருந்து கண்ணீர் கடகடவென வழியலாயிற்று.

மேலும் ஐந்து நிமிடங்கள் கழிந்த பிறகே உடல் மீண்டும் தனது பேச்சைக் கேட்க ஆரம்பிக்க, மெதுவாக சென்று துணிகளைத் துவைக்க ஆரம்பித்தாள் வாணி.

தேவிக்குத் தான் அன்றைக்கு வீட்டில் யாரைப் பார்க்கவும் பிடிக்கவில்லை.

பார்க்கிற அனைவர் மீதும் எரிந்து விழுந்து கொண்டே இருந்தாள்.

''என்னடி இது, வரவர ரொம்பவும் ஓவராத்தான் போயிட்டிருக்க நீ.''

''அடப் போங்க பாட்டி, வாணிக்கா இல்லாம என் டேஸ்ட்டுக்குப் பேசக்கூட இந்த வீட்ல யாருமில்ல'' என்று அதற்கும் தனது பாட்டியிடம் சண்டைக்குப் போனாள் ஸ்ரீதேவி.

''க்கும், வாணி இங்க இருக்கற வரைக்கும் மட்டும் அவகூட எந்நேரமும் சண்டதான் போட்டுட்டிருந்த.''

''வாணிக்கா எப்பவும் சண்டப்போடற அளவுக்கெல் லாம் விடமாட்டா, அவ இல்லாம எனக்கு ஒன்னுமே பிடிக்கல யாரையுமே பிடிக்கல.''

''சரிசரி கத்தாதடி. எங்களுக்கு மட்டும் என்னவாம்'' என்று பெரிய பேத்தியைப் பற்றித் தானும் சிறிது நேரம் பெருமையுடன் பேசிக் கொண்டிருந்தாள் புஷ்பவள்ளி.

''அடப்போதும் பாட்டி, ஏற்கனவே எனக்கு அக்காவப் பாக்கலாம் போலிருக்கு'' என்றாள் தேவி.

''சரி போன்லயாவது வாணியக் கூப்புடுமா பேசலாம்.''

''ஒன்னும் வேண்டாம்.''

''ஏன் தேவி?''

''நான் அக்காவ நேர்லயே பாக்கப்போறேன்.''

''நாளைக்குப் போலாம்டா கண்ணா. நாங்களும் வர்றோம். இன்னைக்கு நாங்க ரெண்டு பேரும் ஹாஸ் பிட்டலுக்கு செக்கப் போகணும்மா.''

''சரி போய்ட்டு வாங்க. நாளைக்கு இன்னொரு தடவ கூடப் போனாப் போச்சு.''

''அப்ப நீ இன்னைக்குப் போகப் போறியா?''

''இப்பவே போகப் போறேன்'' என்று கிளம்பிய தேவி, டிரைவரை அழைத்து காரை எடுக்கச் சொன்னாள்.

''நீ சொன்னாக் கேக்கவா போற? சரி இரு வெறுங்கை யோட போகாத ஸ்வீட் காரமெல்லாம் இருக்கு எடுத்துட் டுப் போ.''

''வேண்டாம் பாட்டி, நான் போய் என் அக்காவுக்குப் பிடிச்சத வாங்கிட்டுப் போய்க்கறேன்'' என்று சந்தோஷத்



துடன் ஓடிய சின்னப் பேத்தியைப் பார்த்து, தங்களாலும் இன்றைக்கே செல்ல முடியவில்லையே என்று பெரு மூச்சு விட்டார் புஷ்பவள்ளி.

''பாத்துப் போ தேவி. நாங்க எல்லாரும் ரொம்பக் கேட்டதா சொல்லு'' என்று வெளியே வந்த புஷ்பவள்ளி கார் கிளம்பிய பிறகே வீட்டுக்குள் வந்தார்.

மதிய உணவை முடித்துக் கொண்டு ஒரு மணி நேரத் திற்கும் மேல் ஓய்வெடுத்த பெரியவர்கள், வீட்டிலிருந்த தங்களது டிரைவரை காரை எடுக்கச் சொல்லி மருத்துவ மனைக்குக் கிளம்பிப் போனார்கள்.

மருத்துவமனையிலிருந்து இரண்டு மணி நேரத்தில் திரும்பி விட்டிருந்த பெரியவர்கள், அங்கிருந்த காரைப் பார்த்து மிகவும் ஆச்சர்யப்பட்டார்கள்.

''என்னப்பா இவ்வளவு விரைவாத் திரும்பிட்டீங்க. தேவிக்கு அவ அக்காவ விட்டுட்டு கிளம்பவே மனசு வராதுன்னு நினைச்சேன்.''

புஷ்பவள்ளி கேட்க, அந்த டிரைவர் பதில் சொல்லத் தெரியாமல் விழித்தான்.

''என்னப்பா?''

''என்னவோ தெரியலைங்கம்மா, தேவி மேடம் அங்க வீட்டுக்குள்ள போன அஞ்சே நிமிஷத்துல கோபமாகத் திரும்பி வந்து கார எடுக்கச் சொல்லிட்டாங்க.''

''இப்ப தேவி எங்க?''

''வீட்டுக்குள்ள தான் இருக்காங்கமா.''

டிரைவர் சொன்ன பதிலில், புஷ்பவள்ளிக்கும் கங்கா தரனுக்கும் தலையும் புரியவில்லை காலும் புரியவில்லை.

டிரைவரிடம் எதையும் கேட்டுக் கொள்ளாமல், சரி தேவி யிடமே கேட்டால் போகிறது என்று வீட்டிற்குள் வந்தார்கள்.

''வாணி எங்காவது வெளிய போயிருப்பா, அதான் இவ உடனே கிளம்பி வந்துட்டா போலிருக்கு'' என்றார் புஷ்பவள்ளி.

''எங்க, அதிசயமா இருக்கு. தேவிக்குட்டி இருக்கற இடமே தெரியலையே'' என்று தானும் ஆச்சர்யத்துடன் சொல்லிக் கொண்டார் கங்காதரன்.

''அவ ரூம்ல இருப்பா'' என்று புஷ்பவள்ளி சொல்லிக் கொண்டிருக்கும் போதே ஹாலுக்கு வந்தாள் தேவி.

வெகுநேரம் அழுது வீங்கிய முகத்துடனும், சிவந்த கண்களுடனும் வந்த பெண்ணைப் பார்த்தவர்களுக்கு முதலில் நெஞ்சு பதறிப் போயிற்று.

''தேவி என்னமா, என்னாச்சு?''

பதில் சொல்லாமல் விசித்தவளை, ''என்னாச்சுன்னு முதல்ல சொல்லுடி'' என்று அதட்டினார் புஷ்பவள்ளி.

தேவிக்கு எப்பொழுதும் மற்றவர்களை விரட்டி, அதட்டித்தான் பழக்கமென்பதால் பெரியவர்கள் இருவரும் உண்மையிலேயே பயந்து தான் போனார்கள்.

தனது தாத்தாவிடம் ஓடிச்சென்று அவரது மடியில் முகம் புதைத்து மேலும் கண்ணீர் வடித்தவள், சில நிமிடங்கள் சென்ற பிறகே நிமிர்ந்து தனது தாத்தா, பாட்டியின் முகத்தைப் பார்த்தாள்.

''என்னமா?''

''முதல்ல இப்பவே கிளம்புங்க, போய் வாணிக்காவ நம்ம வீட்டுக்கே கூட்டிட்டு வந்துடலாம்.''

தங்களது சின்னப்பேத்தி சொன்னதைக் கேட்டு, பெரியவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் புரியாமல் பார்த்துக் கொண்டார்கள்.



''ஏன்?''

''என்ன ஏன்? அங்க வாணிக்கா எவ்வளவு கஷ்டப் படறா தெரியுமா?'' என்றவள் மீண்டும் அழ ஆரம்பித்து விட்டாள்.

''முதல்ல விஷயத்தை சொல்லித் தொலைடி.''

பாட்டி அதட்டிய பிறகே கண்களைத் துடைத்துக் கொண்டு, மீண்டும் பேச ஆரம்பித்தாள் தேவி.

ஒரு வழியாக அழுகையினூடே, அவள் சொல்லி முடித்த விஷயம் இதுதான்.

''நான் போனது கூடத் தெரியாம அவ பாட்டுக்கு வீடு முழுக்கத் தனியாளாக் கூட்டித் துடைச்சுட்டு, ஒரு பெரிய அழுக்குக் கூட நிறைய துவைக்கறதுக்காக துணிகள எடுத்துட்டுப் போறா பாட்டி.''

''அட இதத்தான்...''

''இருங்க பாட்டி நான் இன்னும் சொல்லியே முடிக்கல. எல்லாமே உங்களால வந்தது தான் வாணிக்கா படில உக்காந்து ரொம்பவும் அழுதா தெரியுமா?''

''அழுதாளா, ஏம்மா?''

''ம் இப்பக் கேளுங்க. நம்ம வீட்ல வேலைக்காரங் களுக்குக் கூட நாம அந்த வேலையெல்லாம் தர மாட் டோம். அவ அழுது நீங்க பாத்திருக்கணும்'' என்று கண் களைத் துடைத்துக் கொண்ட தேவியைப் பார்த்தார்கள் பெரியவர்கள்.

''நீ அவ கூடப் பேசினதான?''

''பேசறதா, அப்புறம் நானும் அவ கூடவே உக்காந்து அழ ஆரம்பிச்சிருப்பேன். இல்லேன்னா அவங்க கூட சண்டப்போட்டு அக்காவ கையோட கூட்டிட்டே வந்திருப்பேன்.''

'நல்லவேளை அப்படி எதையும் செஞ்சு வெக்கல' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்ட புஷ்பவள்ளி அதை வெளியே சொல்லவில்லை.

ஆனால் தேவி சொல்வதை வைத்துப் பார்த்தால் வாணி அங்கு சந்தோஷமாக இல்லை போலிருக்கிறதே. அதிலும் வாணி எவ்வளவு மென்மையான மனம் படைத்தவள்.

கடவுளே மகனுக்குத் தெரிந்தால் தாங்கமாட்டானே.

"அதுவும் எப்படி இளைச்சுப் போய்ட்டா தெரியுமா, சாப்பாடு கூட வயிறு நிறைய போட மாட்டாங்க போலிருக்கு. எனக்கு அப்பவே தெரியும் சும்மா பாக்க ஆளுங்க மட்டும் நல்லா இருந்தாப் போதுமா, நம்ம தகுதிக்கு ஒத்து வருவாங்களான்னு யோசிச்சிருக்க வேண்டாம்."

"போதும் தேவி."

"ஆமா என்ன மட்டும் அதட்டுங்க. இருந்திருந்து வாணிக்காவுக்கா இப்படியொரு நிலம வரணும்" என்று மீண்டும் தேம்பிய தேவியை பெரியவர் கங்காதரன் சமாதானப்படுத்தினார்.

"கவலைப்படாதமா, இதுக்கு நானொரு வழி பண்றேன்."

"என்ன பண்ணப் போறீங்க?" என்று கணவனைப் பார்த்தார் புஷ்பவள்ளி.

"சொல்லாதீங்க தாத்தா இது எதுக்கும் விடாது" என்றாள் தேவி.

"தேவி நாங்க நிச்சயமா வாணிக்கு ஏதாவது நல்லது பண்ணுவோம். நீ ரொம்பவும் சின்னப் பொண்ணு இதுல தலையிடாதமா."



"எனக்கொரு கப் காபி எடுத்துட்டு வர்றியா?" என்று கங்காதரன் மனைவியைப் பார்க்க, "இதோ எடுத்துட்டு வர்றேங்க" என்று சென்றார் புஷ்பவள்ளி.

சில வினாடிகளில் தேவியும் அவ்விடத்தை விட்டு நகர, அவளை அருகில் அழைத்தார் கங்காதரன்.

"என்ன தாத்தா"

"நீ இந்த விஷயத்த உங்க அப்பாகிட்டயும் சொல்ல வேண்டாம்மா, அவன் எதையும் செய்ய விட மாட்டான். உன் பாட்டியையும் சொல்ல வேண்டாம்னு சொல்லிட றேன்."

"சரி, நீங்க என்ன செய்யப் போறீங்க?"

"மாப்ள கூட நான் பேசறேன்."

"என்ன பேசப் போறீங்க தாத்தா?"

"அத நான் பாத்துக்கறேன். ஆனா வாணி மட்டும் நம்ம வீட்ல இருந்தா எப்படி இருப்பாளோ அந்த அளவுக்கு சந்தோஷமா, நிம்மதியா இருப்பா போதுமா?"

"தேங்க்யூ தாத்தா, நாம அக்கா கூட இப்பப் பேசலாமா?"

"இப்ப வேண்டாம். நீ எதையுமே கண்டுக்காம எப்பவும் போல இரு அவ்வளவுதான்."

"சரி தாத்தா."

## 18



மறுநாள் யாரும் அறியாமல் தங்களுடைய வீட்டு மருமகனைப் போய் சந்தித்தார் பெரியவர் கங்காதரன்.

திடீரென வருகை தந்த வாணியின் தாத்தாவை சந்தோஷமாக வரவேற்றான் மதிவதணன்.

''வாங்க, என் ஆபீஸ்க்கு நீங்க வந்ததுல எனக்கு ரொம்ப சந்தோஷம். உக்காருங்க.''

''என் பேத்தியும் உங்கள மாதிரியே சந்தோஷமா இருந்தா எனக்கும் நிம்மதி தான்'' என்று அங்கிருந்த சேரில் அமர்ந்தார் கங்காதரன்.

பெரியவர் சொல்வது வித்யாசமாக இருக்க, எதுவும் பேசாமல் பார்த்தான் மதிவதணன்.

''என்ன சாப்பிடறீங்க ஸார்?''

''எதுக்கு என்ன மூணாவது மனுஷனாக்கறீங்க? நீங்களும் வாணி மாதிரி என்ன தாத்தான்னே கூப்பிடுங்க.''

''ரொம்ப சந்தோஷம், வீட்ல எல்லாரும் எப்படியிருக்காங்க?''

''அதான் சொன்னேனே மாப்ள, என் பேத்தி சந்தோஷமா இருந்தா நாங்க எல்லாருமே சந்தோஷமா இருக்கற மாதிரிதான்.''

''என் வொஃய்ப் சந்தோஷமாதான் இருக்கா.''

''அப்படின்னு நினைச்சுட்டிருக்கீங்களா?''

''எதையோ தப்பாப் புரிஞ்சுட்டு வந்து பேசறீங்கன்னு மட்டும் தெரியுது.''

''நான் நேரடியா விஷயத்துக்கே வர்றேன் மாப்ள. நீங்க உங்க மனைவியை நல்லா வெச்சுட்டிருக்கலாம். ஆனா வாணி எல்லா விதத்துலயுமே எங்க வீட்ல இருந்த அளவுக்கு சந்தோஷமா இருக்கான்னு நினைச்சுட்டிருக்கீங்களா?''

''இன்னும் நீங்க விஷயத்துக்கே வரலன்னு நினைக்கறேன்.''



''எங்க வாணி ரொம்பவும் மென்மையான குணம் கொண்டவ, அவளுக்கு எப்பவுமே யார் கூடவும் எதிர்த்து நின்னோ சண்டைக்குப் போயோ பழக்கமில்ல.''

..........

''உங்ககிட்டயும் எந்தக் குறையும் இல்லேன்னாலும் இன்னும் கொஞ்சம் வசதியான இடத்துல என் பேத்தியக் கல்யாணம் பண்ணிக் குடுத்திருக்கலாமோன்னு என் மனசுக்கு அப்பப்பத் தோனிட்டே தான் இருக்கும். வாணிய உங்களுக்குக் கல்யாணம் முடிச்சுக் குடுக்க தாமோதரன் கேட்டப்ப ஒரேயடியா வேண்டாம்னு தான் சொல்லியிருப்பேன். ஆனா வாணிக்கும் உங்கள ரொம்பப் பிடிச்சுட்டதால நான் கையக் கட்டிட்டு பேசாம இருக்க வேண்டியதாயிடுச்சு.''

பெரியவர் சொல்லிக் கொண்டே போக, இன்னும் என்ன என்பதைப் போல அவரைப் பார்த்துக் கொண்டிருந்தான் மதிவதணன்.

''உங்களுக்குன்னு நீங்க சில ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன்ஸ் வெச்சுட்டிருப்பீங்க அத நான் தப்புன்னு சொல்லமாட்டேன். ஆனா வாணிய பழக்கமில்லாத கஷ்டமான வேலைகளையெல்லாம் செய்ய வெச்சுக் கசக்கிப் பிழியறீங்களே அது எந்த விதத்துல நியாயம்?''

''கொஞ்சம் புரியற மாதிரி பேசினீங்கன்னா நல்லா இருக்கும்.''

''எங்க வீட்டு வேலக்காரங்களக் கூட நாங்க கைல வீடு துடைக்கவும், துணி துவைக்கவும் விட்டதில்ல. அப்படியிருக்கும் போது அந்த வேலைகளையெல்லாம் என் பேத்தி செய்யறத எங்களால நினைச்சுக் கூடப் பாக்க முடியல.''

''சொல்லுங்க'' என்பதைப் போல கைகளை மார்பின் குறுக்கே கட்டிக் கொண்டு பெரியவர் கங்காதரனைப் பார்த்தான் மதிவதணன்.

''இவ்வளவு ஏன், எங்க வீட்டு வேலைக்காரங்க கிட்ட ரெண்டு வேலைய அதிகப்படியா செய்யச் சொல்லக் கூட வாணி பத்து முறை யோசிப்பா, ஆனா இப்ப நீங்க அவளையே...''

''இத நீங்க உங்க வீட்டுப் பொண்ண என் கையப் புடிச்சுக் குடுக்கறதுக்கு முன்னாடியே யோசிச்சிருக் கணும்னு நான் நிச்சயமா சொல்ல மாட்டேன். ஏன்னா என் மனைவி மேல உங்கள விட எனக்கும் பல மடங்கு அக் கறை அதிகமாவே இருக்கு. எல்லாத்துக்கும் மேல வாணி என்னோட மனைவி.''

''அதனால எங்களுக்கெல்லாம் எதுவும் சொல்ல உரிமையில்லேன்னு சொல்றீங்களா?''

''வாணி மேல இருக்கற அக்கறைல ஏதேதோ சொல் றீங்க. அத நானும் தப்பு சொல்ல மாட்டேன். ஆனா நீங்க இப்ப என்ன சொல்ல வர்றீங்கன்னு எனக்கு இன்னும் புரியல.''

''அவங்கம்மா போனப்ப மட்டும் தான் என் பேத்திக் கண் கலங்கி நான் பாத்திருக்கேன். அதைத்தவிர இன் னைக்கு வரைக்கும் அவங்க ரெண்டு பேர் கண்ல இருந் தும் ஒரு சொட்டுக் கண்ணீர் வந்து நாங்க பாத்ததில்ல.''

..........

''ஆனா வாணி நேத்து உங்க வீட்டுக் கஷ்டங்களைத் தாங்க முடியாம அழுததும், அதக் கேட்டு இங்க தேவி அழுததும் எங்களால சுத்தமா தாங்கிக்கவே முடியல.''



அதை சொல்லி முடிப்பதற்குள் பெரியவரின் கண்களில் தெரிந்த வலி, மதிவதணனையும் சற்று ஒரு மாதிரியாக்கி விட்டது.

ஆனால் அது வெளியில் தான்.

உள்ளுக்குள் அவனுக்கு செய்வதறியாத கோபமும், எரிச்சலும் வந்ததென்றால் அது சற்றும் மிகையல்ல.

தனது மனைவியை எவ்வளவு உயர்வாக எண்ணி யிருந்தான்.

அவள் தன்னிடம் எதையும் மறைக்காமல், வெளிப்படை யாக நடந்து கொள்கிறாளென்று நினைத்தானே.

அவளுக்கு என்ன கஷ்டமானாலும் அதைத் தன்னிடம் சொல்லியிருந்தால், அதை சந்தோஷமாகத் தீர்த்து வைத்திருப்பானே.

வாணியிடம் இருப்பதைப் போல கால் பங்கு அழகும் பணமும் இல்லாத பெண்கள் கூட யாருக்கும் அடங்காமல் எவ்வளவு ஆட்டம் போடுகிறார்கள் என்று தனது மனை வியைப் பற்றி மிகவும் பெருமையாக நினைத்திருந்தானே.

என்னுடைய வாணி எப்படி சராசரியான பெண் ஆக லாம்?

அதுதான் ஆகிவிட்டாளே இனி ஏன், எப்படி என்று சுய விமர்சனம் செய்து கொண்டு நேரத்தை வீணடித்துக் கொண்டிருப்பது முட்டாள்தனம்.

''வாணியோட அப்பா உங்ககிட்ட எப்படி உங்களையே தப்பு சொல்றதுன்னு தெரியாம மனசுக்குள்ள வெச்சுட் டிருக்கார். ஆனா எனக்கு அதுக்கும் மேல என் பேத்தி யோட சந்தோஷமும் நிம்மதியும் தான் முக்கியம்'' என்றார் கங்காதரன்.

என்னதான் அவளுடைய பிறந்த வீட்டு மனிதர்களே ஆனாலும் தன் மனைவி தன்னிடம் சொல்லாமல் அவர்களிடம் சொன்னது, மதிவதணனின் தன்மானத்திற்கு ஒரு பெரிய அடியாக இருந்தது.

ஆனால் அதைத் தனது முகத்தில் தெரியாதவாறு மறைத்துக் கொண்டு, கங்காதரனைப் பார்த்தான்.

"நாங்க உங்கள தப்பு சொல்றதா நினைச்சுக்க வேண்டாம் மாப்ள. வாணிய எங்க வீட்ல இருந்த அளவுக்கு உங்களால வெச்சுட்டிருக்க முடியலேன்னாலும், ரொம்பவும் வருத்தாதீங்க அவ்வளவுதான்."

"நான் ஏதாவது தப்பாப் பேசியிருந்தா மன்னிச்சுக்கோங்க" என்று எழுந்துவிட்டார் கங்காதரன்.

"அதோட இன்னொரு சின்ன வேண்டுகோள், நான் உங்ககூட வந்து பேசினத என் மகன்கிட்டயோ, பேத்திகிட்டயோ காட்டிக்க வேண்டாம்."

பதிலை எதிர்பார்த்து கங்காதரன் தன் முகத்தைப் பார்க்க, "இது பெருமையா வெளிய சொல்லிக்கற விஷயம் கிடையாதுன்னு தான் எனக்குப் படுது கவலைப்படாம தைரியமாப் போய்ட்டு வாங்க" என்றான் மதிவதணன்.

மருமகனின் உணர்ச்சி துடைத்த முகத்தில் என்ன கண்டாரோ, மேலும் எதையும் சொல்லாமல் வெளியேறிவிட்டார் கங்காதரன்.

தானும் விசாரித்து அறிந்து கொண்ட அளவிற்கு மதிவதணனின் மேலிருந்த மதிப்பும், மரியாதையும் நாளுக்கு நாள் கங்காதரனுக்கு அதிகம் தான் ஆனது.

குறுகிய காலத்திற்குள் அவனுடைய வளர்ச்சி நம்ப முடியாத அளவிற்கு உயர்ந்திருந்தது.



அதற்குக் காரணம் அவனுடைய விடா முயற்சியும், அயராத உழைப்பும், திறமையும் தான் என்பதில் அவருக்கு சிறிதும் சந்தேகமிருக்கவில்லை.

எது எப்படியானாலும் பூப்போன்ற தனது பேத்தியை எப்படி வருத்தலாம் என்ற சிறு கோபமும் நீரு பூத்த நெருப்பு போல மனதிற்குள் இருந்து கொண்டே தான் இருந்தது கங்காதரனுக்கு.

## 19



ஏனோ மனதிற்கு மிகவும் கஷ்டமாக இருக்க, பேசாமல் சற்று நேரம் படுத்துவிட்டாள் வாணி.

முந்தைய நாளே தனது தந்தையின் வீட்டிற்கு சென்று வரலாமென்று கணவன் சொல்லியிருக்க, மனதிற்குள் மிகுந்த எதிர்பார்ப்புடன் காத்திருந்து ஏமாந்தாள்.

ஆனால் எதிர்பாராத விதமாக திடீரென்று வந்த வேலைகளில், அவனும் தான் என்ன செய்வான் பாவம் என்று நினைத்துக் கொண்டாள் வாணி.

கணவனைப் பொறுத்தவரை அவன் தன் வாயால் சொல்லிவிட்ட எதையும் செய்து விடுவானென்று அனுபவத்தில் கண்டிருந்ததால், அன்றைக்காவது நேரத்திலேயே வந்து தன்னை அழைத்துச் செல்வானென்று ஆவலுடன் காத்திருக்கலானாள்.

நேரம் போய்க் கொண்டே இருந்தாலும் வாணிக்கு நம்பிக்கை மட்டும் சிறிதும் குறைவதாக இல்லை.

கடைசியாக இரவு மணி ஏழும் ஆகிவிட, ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டு தங்களது அறையிலிருந்து வெளியே வந்தாள் வாணி.

தனது அத்தை இரவு உணவுக்கான வேலையில் ஈடுபட்டிருக்க, தானும் சென்று அவர் சொன்ன உதவிகளை செய்து தரலானாள்.

இப்பொழுதெல்லாம் தனது மாமியார் தன்னிடம் வித்யாசமாக நடந்து கொள்வது போலவும், தன்னை வேண்டுமென்றே நிறைய குறை சொல்வது போலவும் வாணிக்குத் தோன்றிக் கொண்டே இருந்தது.

எது எப்படியானாலும் தன் மேல் யாரும் ஒரு சிறு குறை கூட சொல்லி விடக்கூடாதென்பதில் மட்டும் வாணி மிகவும் கவனமாக இருந்தாள்.

அவர் என்ன சொன்னாலும் சரியென்று பொறுத்துப் போனதோடு, இன்முகத்துடன் நடந்து கொள்ளவும் செய்தாள்.

ஆனால் அதுவே அவருக்குத் தன் மேல் இருந்த எரிச்சலை மேலும் அதிகப்படுத்தியது என்பதை வாணி அறியவில்லை.

அன்று அதிசயமாக இரவு எட்டு மணிக்கே கணவனும், அவனது தந்தையும் வீட்டிற்கு வந்திருந்தனர்.

தான் அதுநாள் வரை கண்டிராத கணவனின் கல்லைப் போன்ற இறுகிய உணர்ச்சி துடைத்த முகத்தில், எதையும் கேட்கத் தோன்றாது விலகிப் போனாள்.

இரவு உணவிற்காக அனைவரும் வந்து அமர்ந்திருக்க பரிமாறினாள் வாணி.

''நீங்களும் வாங்க அண்ணி'' என்று நிவேதா அழைக்க மறுத்துவிட்டாள்.

அதிகமாக எதையும் பேசிக் கொள்ளாமல் அனைவரும் சாப்பிட்டுக் கொண்டிருக்க இன்றைக்குத் தனது கணவன்



ஏனோ ஒரு மாதிரியாக இருக்கிறானே என்ற எண்ணம் தான் வாணிக்கு மனதிற்குள் ஓடிக் கொண்டிருந்தது.

வழக்கமாக என்றால் அவன் தன்னையும் உடன் வந்து சாப்பிட அழைத்திருப்பானே.

தனது கணவனும், அவனது தந்தையும் பேசிக் கொண்டிருக்க, தொழிலில் ஏதாவது பிரச்சனையோ என்று நினைத்துக் கொண்டே தனது அத்தை கேட்ட ஆம்லெட்டை நகர்த்திக் கொடுத்தாள்.

திடீரென்று ஒரு மாதிரியாக வர, எதுவும் செய்யத் தோன்றாமல் நின்றாள் வாணி.

அப்படி நின்றிருந்தது சில வினாடிகள் தான்.

மேலும் குமட்டிக் கொண்டு வேறு வர, எதுவு[illegible] காட்டிக் கொள்ளாமல் உடனே தங்களது அறைக்கு வந்து விட்டிருந்தாள்.

வந்தவள் நேராக வாஷ் பேசினில் சென்று குடலே வெளியே வந்துவிடும் போல வாந்தியெடுக்கலானாள்.

மேலும், மேலும் குமட்டிக் கொண்டே வர, நிற்க முடியாமல் தலையும் சுற்ற ஆரம்பித்திருந்தது.

சிரமப்பட்டு ஒரு வழியாகக் குளிர்ந்த நீரில் முகம் கழுவி வாய் கொப்பளித்தவள், சுவற்றைப் பிடித்துக் கொண்டு மெதுவாக நடந்து வந்து படுக்கையில் விழுந்தாள்.

யாராவது வேகமாக ஃபேனை சுழல விட்டால் நன்றாக இருக்குமே என்று நினைத்தவளுக்கு, பக்கத்து வீட்டின் மொட்டை மாடியில் குழந்தைகள் ஓடி விளையாடிய சத்தம் காதைப் பிளந்தது.

என்னவோ தோன்ற, திடீரென்று எழுந்து அமர்ந்தாள் வாணி.

இந்த ஓயாத தலை சுற்றலும், வாந்தியும்.

கணக்குப் போட்டுப் பார்த்ததில் நாட்களும் தள்ளிப் போயிருந்தது தெரிந்தது.

வினாடி நேரத்திற்குள் ஒரு இனம் புரியாத சந்தோஷம் வாணியின் நாடி நரம்பெல்லாம் பரவி, உடலின் ஒவ்வொரு அணுவையும் பரபரக்க வைத்தது.

உண்மையிலேயே நான் தாய்மைப் பேறு அடைந்து விட்டேனே.

'அதிலென்ன சந்தேகம்' என்று தனக்குத்தானே வாணி வாய்விட்டே சொல்லிக் கொண்டாள்.

எல்லையில்லாத ஆனந்தத்தில் உள்ளம் துள்ள, அதை உடனே ஓடிப்போய் கணவனிடம் சொல்ல வேண்டும் போலப் பரபரபத்த கால்களை மிகவும் சிரமப்பட்டுக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

இப்போது வேண்டாம், அவனாகவே மேலே வந்து வழக்கம் போல நடந்து கொள்ளும்போது சொல்லலாமென்று காத்திருக்கலானாள் வாணி.

ஆனால் அரை மணி நேரத்திற்கும் மேல் ஆகியும் கூட அவனைக் காணாது போக, தானே கீழிறங்கி வந்தாள்.

நிவேதா ஹாலில் அமர்ந்து பாட சம்பந்தமாக எதையோ செய்து கொண்டிருக்க, குணசீலன் டி.வி.யில் நியூஸ் சேனலை வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

''வாங்க அண்ணி, நான் இப்பதான் மேல வரலாம்னு இருந்தேன்.''

''ஏன் நிவேதா?''

''நீங்க இன்னும் டிபனே சாப்பிட்லயே, அதனால தான்.''



''இதோ போய் சாப்பிடறேன்.''

குணசீலன் அழைக்க, ''என்ன மாமா'' என்று சென்றாள்.

''நீயும் எங்க கூடவே சாப்பிட்டிருக்கலாமேம்மா, மணி பத்தாகப் போகுது பாரு.''

''இனிமேல் நேரத்துலையே சாப்பிடுக்கறேன் மாமா.''

''பாக்கவே ரொம்பவும் இளைச்சுத் தெரியறமா, அங்க அப்பா வீட்ல எப்படி இருப்பியோ அதே மாதிரி இங்கயும் ஃப்ரியா இருமா.''

''சரி மாமா''

''சரிமா சாப்பிடு போ.''

கணவனைக் காணவில்லையே என்று யோசித்துக் கொண்டே போனவளை, மஹாலட்சுமி அழைக்க நின்று திரும்பிப் பார்த்தாள்.

''சொல்லுங்க அத்தை.''

''உன் மனசுல நீ என்னதான் நினைச்சுட்டிருக்க? உன் வயித்துக்கு சாப்பிடக் கூட நான் வந்து கெஞ்சிட்டிருக்கணுமா, சாப்பிட்டு எல்லாத்தையும் ஒதுக்கிட்டு பாத்திரத்தையெல்லாம் கழுவி வெச்சுட்டுப் போய்த் தூங்கு.''

''சரி அத்தை.''

''எது சொன்னாலும் ஜடம் மாதிரி தலையத் தலைய ஆட்டு.''

கண்களில் நீர் நிறைந்து விட எதுவும் பேசாமல் தனது அத்தையைப் பார்த்தாள் வாணி.

''ஊர் உலகத்துல மருமகளுக சமையல் எல்லாம் பிரமாதமா செஞ்சு உக்காந்துட்டிருக்கற இடத்துல ப்ளேட்ல கொண்டு வந்து குடுக்கறாங்க, ஆனா இந்த வீட்ல நானே

எல்லாத்தையும் செய்யறதுமில்லாம விட்டா ஊட்டிக்கூட விட சொல்லுவா போலிருக்கு'' என்று முணுமுணுத்துக் கொண்டே சென்றவரைப் பார்த்தாள் வாணி.

தனது தாய் ஏதோ பேசிக் கொண்டே உள்ளே போக, கண்களில் நீருடன் நின்று கொண்டிருந்த மனைவியைப் பார்த்துக் கொண்டே தங்களது அறைக்குப் போனான் மதிவதணன்.

மனைவியின் வாடிய முகமும், கண்களில் தெரிந்த கண்ணீரும் மனதை என்னவோ செய்ய, அன்று மதியம் அவளது தாத்தா வந்து பேசியது தான் நினைவுக்கு வந்தது அவனுக்கு.

முயன்று அதை மனதில் இருத்திக் கொண்டு, கோபத் தையும் இழுத்துப் பிடித்துக் கொண்டான்.

அழட்டுமே, அழுகை எப்படி இருக்குமென்று அவளும் தான் தெரிந்து கொள்ளட்டுமே.

பிறந்த வீட்டில், புகுந்த வீட்டு மனிதர்களைப் பற்றி குற்றம் சொல்ல மட்டும் தெரிந்திருக்கிறதல்லவா, நன் றாகப் படட்டும்.

சாப்பிட்டதாகப் பெயர் செய்துவிட்டு சமயலறையில் அனைத்து வேலைகளையும் முடித்துவிட்டு வாணி வந்தபோது, தனது அலுவலக வேலைகளை மும்மூர மாகப் பார்த்துக் கொண்டிருந்தான் மதிவதணன்.

மனைவி நின்று தன்னையே பார்த்துக் கொண்டிருப்பது கருத்தில் பட, மதிவதணனுக்கு தொடர்ந்து வேலையில் கவனத்தை செலுத்துவது சிரமமாகிப் போனது.

கணவன் தன்னுடன் பேசுவான் என்று எதிர்பார்த்திருப் பாள் போல, மேலும் சில வினாடிகள் நின்று பார்த்துவிட்டு ஏமாற்றத்துடன் சென்றாள்.



தனது நைட் டிரஸ்ஸையும், பிரஸ்ஸையும் எடுத்துக் கொண்டு மனைவி குளியலறைக்குள் செல்ல, கையி லிருந்த ஃபைலை மூடி வைத்தான் மதிவதணன்.

யோசிக்க யோசிக்க தன் மனைவி செய்தது மிகப் பெரிய தவறு என்றே மதிவதணனுக்குத் தோன்றியது.

என்ன கஷ்டமாக இருந்தாலும் அவள் அதைத் தன்னிடம் சொல்லியிருக்க வேண்டாமா?

கணவன் தனக்காக எதையும் செய்வான் என்பதை அவள் இத்தனை நாளில் புரிந்து கொண்டிருக்க வேண் டாமா?

நன்றாக யோசித்துப் பார்த்ததில் மனைவி தன்னை ஒரு பொருட்டாகக் கூட மதிக்கவில்லையென்றே மதிவதன னுக்குத் தோன்றியது.

குளித்து முடித்துவிட்டு வாணி வெளியே வர, துவைத்த துணிகளை அவளுக்கு முன்பாகத் தூக்கியெறிந்தான் மதிவதணன்.

கணவனின் செய்கை புரியாமல் வாணி விழிக்க, என்ன மாதிரி நாடகம் போடுகிறாள் என்று மதிவதணனுக்கு கட்டுக்கடங்காத கோபம் வந்தது.

''சாப்பிடற சாப்பாடு செரிக்கறதுக்காவது ரெண்டு வேலைய செஞ்சா தேய்ஞ்சா போயிடுவ?''என்ற கணவ னின் வார்த்தைகளில் முழுமையாக நடப்புக்கு வந்தாள் வாணி.

''ஏன் இப்படி பேய் மாதிரி முழிக்கற? முதல்ல இந்த உலகத்துக்கு வா.''

அதுவரை தான் கண்டிராத கணவனின் கோபமான முகமும், எரிச்சலான பேச்சும் வாணியின் மென்மையான மனதைப் பதறச் செய்து விட்டது.

ஆனால் அதற்குள் மீண்டும் எரிந்து விழ ஆரம்பித் திருந்தான் மதிவதணன்.

''மஹாராணி படுக்கைக்குப் போயிடாத, இந்த நாலு செட் டிரஸ்ஸையும் நீட்டா அயர்ன் பண்ணி வெச்சுட்டு என்னவோ பண்ணித் தொல'' என்று சொல்லிவிட்டுத் தான் குளிப்பதற்காக சென்று விட்டான் மதிவதணன்.

கண்ணீர் கண்களை மறைக்க, குனிந்து படுக்கையில் சிதறிக் கிடந்த கணவனது துணிகளை சேகரித்தாள் வாணி.

கணவன் எதற்காகத் தன்மேல் கோபப்படுகிறா னென்று புரியாமல் படுக்கையில் விழுந்து அழ ஆரம்பித் தவள், சில நிமிடங்களில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு, எழுந்து சென்று அவனது துணிகளைத் தேய்க்க ஆரம்பித்திருந்தாள்.

மேலும் சில நிமிடங்களில் குளியலறைக் கதவு திறக்க, கணவனிடம் சென்று தான் செய்த தவறுதான் என்ன வென்று கேட்டால் என்ன என்று நினைத்தாள் வாணி.

ஆனால் இன்னொரு முறை அவன் எரிந்து விழுந்தால் நிச்சயமாகத் தன்னால் தாங்கிக் கொள்ள முடியாதென்று, தொடர்ந்து தனது வேலையைப் பார்க்க ஆரம்பித்து விட்டாள்.

கணவன் தன்னைக் கண்டு கொள்ளாமல் தூங்கப் போய்விட, மீண்டும் கண்களைக் கரித்துக் கொண்டு வந்தது வாணிக்கு.

திருமணமான நாளிலிருந்து அவன் ஒருமுறை கூடத் தன்னிடம் முகம் சுளித்ததே இல்லையென்பதால், அன் றைக்குப் புதிதாகக் கணவன் நடந்து கொள்ளும் முறையை வாணியால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.



துணிகளைத் தேய்த்து முடித்துவிட்டு என்னதான் படுக்கையில் விழுந்திருந்தாலும், வாணிக்குத் தூக்கம் அருகில் கூட வரமாட்டேன் என்றது.

கணவனிடமிருந்து வந்த சீரான மூச்சின் ஒலி அவன் நன்றாகத் தூங்கிக் கொண்டிருப்பதைக் காட்ட, அவன் விழித்துத் தன்னிடம் பேச மாட்டானா என்ற ஏக்கத்துடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் வெகு நேரத் திற்குப் பிறகு தூங்கிப்போனாள்.

அதிகாலையிலேயே தூக்கம் கலைந்து விழித்துவிட்ட மதிவதணனுக்கு, கோழிக்குஞ்சு போல சுருண்டு தூங்கிக் கொண்டிருந்த மனைவியை அள்ளி அணைத்துக் கொள்ள வேண்டும் போல உள்ளம் பரபரத்தது.

பட்டுப்போன்ற மிருதுவுடன் குழந்தைத்தனமாக இருந்த மனைவியின் முகத்தைத் தொட்டுப் பார்ப்ப தற்காகக் கைகள் நீண்டுவிட, அந்த வினாடியே படுக் கையை விட்டு இறங்கிவிட்டிருந்தான் மதிவதணன்.

மிஞ்சிப்போனால் இன்னும் ஒருநாள் கூடத் தன் னுடைய கோபம் நிலைக்காது போலிருக்கிறதே.

தன்னுடைய வாணியால் எப்படி அப்படி நடந்து கொள்ள முடிந்தது என்பதுதான் மதிவதணனுக்குப் புரியாத புதிராகவே இருந்தது.

ஆறு மணிக்குத் தூக்கம் கலைந்து விழித்த போதே, மீண்டும் ஒருவிதமான பாரம் வந்து தன் நெஞ்சை அழுத் துவது போல மனதிற்கு மிகவும் கஷ்டமாக இருந்தது வாணிக்கு.

அப்படியே படுத்துக் கொண்டே இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்குமென்று மனம் ஏங்க, தனது அத்தைக்கு

பயந்து உடனே படுக்கையை விட்டு எழுந்து விட்டிருந் தாள்.

தலை சுற்றி, உடல் எங்கோ பறப்பது போலத் தோன்ற மீண்டும் படுக்கையிலேயே அமர்ந்து விட்டாள்.

சில வினாடிகளில் தன்னை ஓரளவு சமாளித்துக் கொண்டு எழுந்தவள், மெதுவாக நடந்து சென்று காலைக் கடன்களை முடித்தாள்.

கணவனைப் பார்க்க வேண்டும், அவனிடம் பேச வேண்டும் என்பது போலவெல்லாம் மனம் ஏங்க, தன்னையே கடிந்து கொண்டாள் வாணி.

இப்போதைக்கு அவன் தன்னிடம் பேசாவிட்டாலும் கூடப் பரவாயில்லை, இன்னொரு முறை அவன் கோபப் பட்டால் அதைத் தாங்கிக் கொள்ளும் சக்தி தன்னிடம் நிச்சயமாக இல்லையென்று நினைத்துக் கொண்டாள் வாணி.

வழக்கம் போல கிச்சனுக்கு சென்று சமையலில் தனது அத்தைக்கு வேண்டிய உதவிகளை செய்து கொடுக்க லானாள்.

திடீரென தங்களது குளியலறையில் சோப் தீர்ந்து போன நிலையிலிருந்தது நினைவு வர, ஸ்டோர் ரூமிற்கு சென்று அவசரமாக ஒரு சோப்பை எடுத்துக் கொண்டு விரைந்தாள் வாணி.

நல்லவேளையாகக் கணவன் இன்னும் குளிக்கப் போயிருக்கவில்லை.

சோப், டவல் அனைத்தையும் தயாராக எடுத்து வைத்த வளுக்கு பழைய நினைவில் கண்களைக் கரித்துக் கொண்டு வந்தது.



கணவன் தான் தேய்த்து வைத்திருந்த துணிகளை அணிவதற்காக எடுத்துப் பார்த்துக் கொண்டிருக்க, டேபிள் மேல் லேசாகக் கலைந்து கிடந்த பொருட்களை ஒழுங்கு படுத்தினாள்.

''ஒரு நிமிஷம் இங்க வா'' என்ற கணவனது அழைப் பில் ஆவலுடன் சென்றாள் வாணி.

''இதுதான் தேய்க்கற லட்சணமா?'' என்று தான் தேய்த் திருந்த சட்டையை எடுத்துக் காட்டிக் கேட்ட கணவனை, சற்று பயத்துடன் பார்த்தாள் வாணி.

முன்பின் துணிகளைத் தேய்த்துப் பழக்கமில்லாத வாணிக்கு, அந்த சட்டையில் இருந்து சுருக்கங்கள் நன் றாகவே தெரிந்தது.

''உருப்படியா உனக்கு என்னதான் செய்யத் தெரியும்?'' என்று அந்த சட்டையைக் கசக்கி வீசிவிட்டுப் போனான் மதிவதனன்.

நேராகக் குளியலறைக்குள் சென்றவன், மீண்டும் அதே வேகத்தில் வெளியே வந்தான்.

''இதென்ன வீடா இல்லை சத்திரமா, பாத்ரூமுக்குள்ள இப்படி பேட் ஸ்மெல் வருது. பாத்ரூமக் கழுவிவிட்டா மேடம்க்கு பிரஸ்டீஜ் குறைஞ்சு போயிடுமோ? குடும் பம்னா ஆயிரம் வேலைகள செய்ய வேணடியதிருக்கும், சும்மா நோகாம பொழுதப் போக்கவெல்லாம் நீ இந்த வீட்ல இருக்க வேண்டிய அவசியமில்ல.''

...........

''தயவுசெஞ்சு என் முகத்துக்கு முன்னாடி நின்னு இன்னும் என் கோபத்த அதிகப்படுத்தாத'' என்ற கண வனது வார்த்தைகளில், அழுகையைக் கட்டுப்படுத்த முயன்றபடி கீழே இறங்கி வந்துவிட்டாள் வாணி.

# 20



என்ன முயன்றும் அன்று முழுவதும் வாணியால் சாதாரணமாக இருக்கவே முடியவில்லை.

காரணமறியாத கணவனின் கோபம் மீண்டும், மீண்டும் நினைவில் வந்து கொண்டே இருந்தது வாணிக்கு.

அன்று மகனுக்கும், மருமகளுக்கும் இடையில் என்னவோ சரியில்லையென்பது தெரிந்துவிட, மஹாலட்சுமியும் வாணியிடம் எந்த வேலையும் சொல்லாது கண்டும் காணாமல் விட்டு விட்டார்.

போனால் போகிறதென்று அன்றைக்கு அனைத்து வேலைகளையும் வாணியை எதிர்பார்க்காது தானே செய்து கொண்டார்.

அவன் அவ்வளவு பேசியும் கூட கணவனின் மேல் கோபம் வராமல், அவனுக்காக ஏங்கிய தன்னை நினைத்துத் தனக்கே ஆச்சரியமாக இருந்தது வாணிக்கு.

மாலை நான்கு மணிக்கு தனது வீட்டிலிருந்து அனைவரும் கிளம்பி வரப் போவதாக போன் வர, வாணிக்கு சந்தோஷப்படுவதா, வருத்தப்படுவதா என்றே தெரியவில்லை.

மேலும் ஒரு மணி நேரத்தில் சொன்னது போல அனைவரும் வந்து விட்டிருந்தனர்.

சில வினாடிகளிலேயே தனது கணவனும் வந்து விட்டிருக்க, வாணி தன்னை சாதாரணமாகக் காட்டிக் கொள்ள மிகவும் சிரமப்பட்டாள் எனலாம்.



நல்லவேளையாக எதையும் தூண்டித் துருவிக் கேட்காமல் தனது வீட்டினர் சாதாரணமான விஷயங்களைப் பேசியதில், வாணி சற்று நன்றாக மூச்சு விட்டாள் எனலாம்.

''என்ன பாப்பா இப்படி இளைச்சுப் போய்ட்ட?'' என்று தந்தை கரிசனத்துடன் வாணியைப் பார்க்க, ''அடப் போங்க டாடி உங்களுக்கு இந்தக் கேள்விய, விட்டா வேற எதுவுமே கேக்கத் தெரியாதா?'' என்றாள் தேவி.

''முதல்ல நீங்க ஏன் டாடி இப்படி இளைச்சுப் போயிட்டீங்க?''

வாணி அதே கேள்வியைத் தனது தந்தையிடம் திருப்பிக் கேட்க, ''அட நீயும் ஆரம்பிச்சுட்டயா, வாக்கா உன் ரூம எனக்குக் காட்டேன் நான் இன்னும் பாத்ததே இல்ல'' என்று வாணியின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனாள் தேவி.

''நீ இன்னும் மாறவே இல்ல தேவி'' என்று தங்கையுடன் தன்னறைக்கு வந்தாள் வாணி.

''ஆமாம் போ, ஒன்றரை மாசத்துல கூட யாராவது முழுசா மாறிப் போவாங்களாக்கா?''

'உண்மையிலேயே தனக்குத் திருமணம் முடிந்து ஒன்னரை மாதங்கள் தான் ஆகியிருக்கிறதா?'

''என்னக்கா அதுக்குள்ள என்னவோ யோசனைக்குப் போய்ட்ட? இந்த வீட்டோட மத்த ரூம்ஸக் கம்பேர் பண்ணும் போது பரவாயில்ல உங்க ரூம் கொஞ்சம் பெரிசா தான் இருக்கு'' என்று கருத்து வழங்கிய தங்கையை சிரிப்புடன் பார்த்தாள் வாணி.

''அக்கா''

''என்ன தேவி?''

''என்ன மன்னிச்சுடுக்கா?''

''எதுக்கு மன்னிக்கணும்? உளராம கொஞ்சம் புரியற மாதிரி பேசு தேவி.''

''அக்கா நான் நேத்தைக்கு முந்தின நாள், இங்க இந்த வீட்டுக்கு வந்துட்டுப் போனேன்கா.''

''அப்படியா! நான் வீட்ல தான் இருந்தேன். ஆனா உன்னப் பாக்கவே இல்ல.''

''நான் வந்ததும் ரெண்டு மூணு நிமிஷத்துல கிளம்பிப் போய்ட்டேன்கா.''

''என்ன தேவி சொல்ற?''

''ஆமாக்கா. நான் வந்தப்ப நீ வீடெல்லாம் துடைச்சு முடிச்சுட்டு, எல்லாத் துணிகளையும் எடுத்துட்டுக் கஷ்டப்பட்டு துவைக்கறதுக்காக மாடிக்குப் போயிட்டிருந்த.''

''சரி''

''நீ அப்ப முடியாம அழுததப் பாத்து எனக்கு மனசுக்கு ரொம்பக் கஷ்டமாப் போயிடுச்சுக்கா, அதான் நான் வந்ததே உனக்குத் தெரியாம இருந்துடட்டும்னு அப்படியே திரும்பிப் போய்ட்டேன்கா.''

''நிஜமாவா சொல்ற?''

''ஆமாக்கா, நீ அழுததப் பாத்து எனக்கு ரொம்பக் கஷ்டமாப் போயிடுச்சுக்கா. நானும் வீட்டுக்குப் போய் எப்படி அழுதேன் தெரியுமா?''

''அட லூசு.''

தங்கையின் பேச்சில் சிரிப்பு வந்தாலும், தன் மேல் அவள் வைத்திருக்கும் பாசத்தை நினைத்து வாணிக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது.



''நீ எதுவும் எங்கூட விளையாடலயே தேவி?''

''அட என்னக்கா நீ? அதுமட்டுமில்லக்கா இப்பவே போய் அக்காவ நம்ம வீட்டுக்குக் கூட்டிட்டு வந்துடலாம்னு ஒரேயடியா தாத்தா பாட்டி கூட சண்டை கூடப் போட்டேன்கா.''

''உனக்கு எதுவும் தெரியாதுன்னு யாராவது சொன்னா மட்டும் கோபப்படற, இப்படியெல்லாம் கூட யாராவது செய்வாங்களா தேவி?''

''ஆமா இப்ப சொல்லு. அப்ப மட்டும் நீ எதுக்கு அழுதியாம்?''

''அழறதுக்கு நியாயமான காரணம் கூட இருக்கலாம். சரி அதவிடு அதுக்கப்புறமும் என்னென்ன நடந்தது?''

''தாத்தா நேத்து உங்க வீட்ல அவர் கூடப் பேசியிருப்பார் போலிருக்குக்கா.''

ஓ, அதனால் தான் கணவன் நேற்றிலிருந்து ஒரு மாதிரியாக நடந்து கொள்கிறானோ.

''என்னக்கா எதுவும் பேச மாட்டேங்கற? நான் செஞ்சதுல ஏதாவது தப்பா இருந்தா என்ன மன்னிச்சுக்கோக்கா.''

''இதெல்லாம் அப்பாவுக்குத் தெரியுமா?''

''தெரியாது, தெரியவும் வேண்டாம்.''

''என்ன மேடம், அக்காகிட்ட என்ன ரகசியம் பேசிட்டிருக்க?'' என்ற குரலில் பெண்கள் இருவரும் துள்ளி விழுந்தனர்.

மதிவதனன் நின்றிருக்க, ''அதுதான் ரகசியம்னு உங்களுக்கே தெரிஞ்சிருக்கே பின்ன நாங்க அத வெளிய சொல்லுவோம்னு நீங்க எப்படி எதிர்பாக்கலாம்?'' என்றாள் தேவி.

"அதுவும் சரிதான். நிவேதா உன்னக் கீழ தேடிட்டிருந்தா."

"ஐய் நிவேதா வந்துட்டாளா?" என்று தனது அக்கா கணவனைப் பார்த்தவள், "நான் போய்ப் பாக்கறேன்கா" என்று கீழே ஓடியே போய்விட்டாள் தேவி.

வாணி பயத்துடன் கணவனது முகத்தையே பார்க்க, "என்ன மன்னிப்பயாம்மா?" என்று மனைவியைப் பார்த் தான் மதிவதணன்.

..............

"என்னடா, நான் ரொம்பவும் முட்டாள்தனமாத்தான் நடந்துக்கிட்டேன்."

மனைவியின் கண்கள் கலங்க, "வாணி" என்று அரு கில் வந்தான் மதிவதணன்.

"ப்ளீஸ் அழாதமா" என்றவனது குரலில் எல்லையில் லாத வருத்தம் தெரிந்தது.

"மதி இப்ப உங்களுக்கு எம்மேல எந்தக் கோபமும் இல்லையே."

"கொல்லதடா ப்ளீஸ். நான் உன்னத் தப்பாப் புரிஞ்சுக் கிட்டதுமில்லாம எப்படியெல்லாம் வேற பேசிட்டேன்."

"எனக்கு இப்ப ரொம்ப சந்தோஷமா இருக்கு மதி. கார ணமே இல்லாம உங்களுக்கு என்னப் பிடிக்காமப் போயி டுச்சோன்னு நான் எவ்வளவு பயந்துட்டேன் தெரியுமா?"

மனைவியின் பட்டான முகத்தைக் கையில் ஏந்தி யவன் "இப்படியெல்லாம் பேசி என்ன இன்னும் கஷ்டப் படுத்தாதடா" என்றான்.

கணவனுடைய கரங்களை தன்னுடைய மென்மை யான கரங்களால் பற்றிக் கொண்ட வாணி, அவனைப் பார்த்து அழகாகப் புன்னகைத்தாள்.



தான் செய்த தவறை நினைத்துக் கணவன் மிகவும் வருந்துவது தெரிந்தது.

"மதி நீங்க செஞ்சதுல எந்தத் தப்பும் இல்ல தெரியுமா, உங்க இடத்துல யார் இருந்திருந்தாலும் இப்படித்தான் நடந்திருப்பாங்க."

"இவ்வளவு முட்டாள்தனமாவா?"

"ப்ளீஸ் மதி அதையே நினைச்சுட்டிருக்காதீங்க. தேவி இந்த மாதிரி ஒரு முட்டாள்தனமான காரியத்த செய்யாம இருந்திருந்தா எந்தப் பிரச்சனையுமே வந்திருக்காது."

"இல்லடா, தேவி அப்படி நடந்துக்கிட்டதால தான நான் எவ்வளவு பெரிய தப்ப ரொம்பக் கூலா செஞ்சிருக் கேன்னு எனக்கே புரியது. அதோட எப்பவுமே உயர்ந்த நீ இன்னும் ரொம்பவும் உயர்ந்துட்ட வாணி."

கணவன் தன்னைத் திட்டியதை விட, அவன் அதையே நினைத்து தன்னைத்தானே வருத்திக் கொள் வதைத்தான் வாணியால் சுத்தமாகத் தாங்கிக் கொள்ள முடியாது போயிற்று.

"போதும் மதி. நீங்க இப்படி ஃபீல் பண்றதத்தான் என்னால தாங்கிக்கவே முடியல. எம்மேல நீங்க வெச்சுட் டிருக்கற அன்புனாலயும், உரிமையினாலயும் தான இவ எப்படி நம்மகிட்ட சொல்லாம அவங்க வீட்ல இருக்கற வங்கிட்ட சொல்லலாம்னு நீங்க அந்தளவுக்குக் கோபப் பட்டீங்க."

..........

"ஒரு விதத்துல பாத்தா அத நினைச்சு நான் ரொம்பவும் பெருமைப்படறேன். அதோட நீங்க என்மேல் வெச்சுட் டிருக்கற பாசத்தையும் என்னால இப்பதான் முழுசாப் புரிஞ்சுக்க முடிஞ்சது."

''நான் செஞ்ச தப்புக்கு தண்டனையா கொஞ்சம் வருத்தப்படக்கூட விடமாட்டயாடா? உன் முகத்தப் பாத்துப் பேசற தகுதி கூட எனக்கு இல்ல வாணி.''

''போதும் மதி ப்ளீஸ், எனக்கு உங்கள எவ்வளவு பிடிக்கும் தெரியுமா? நீங்க கோபப்பட்டதுக்கான காரணமே எம்மேல நீங்க வெச்சுட்டிருக்கற அளவுகடந்த அன்பு தான், அது எம்மேல உங்ககிட்ட இருக்குன்னு தெரிஞ்சுக்கறதுக்கான ஒரு வாய்ப்ப ஏற்படுத்திக் குடுத்ததுக்காக நான் உங்களுக்கு நன்றி தான் சொல்லணும் தெரியுமா?''

''எப்படிடா உன்னால இவ்வளவு பெருந்தன்மையா நடந்துக்க முடியுது? நிஜமாவே சொல்றேன் என் அளவுக்கு அதிர்ஷ்டம் செஞ்சவன் உலகத்துல ஒருத்தன் கூட இருக்க முடியாது வாணி.''

''ஓஹோ, அப்புறம்?''

''வாணி என்னால ஒண்ணும் முடியலடா, உன்ன இப்படியே என்னென்னவோ பண்ணலாம் போல என் மனசு துடிக்கிது'' என்று தனது மனைவியை மேலும் நெருங்கியவனிடமிருந்து விலகிக் கொண்டாள் வாணி.

''கீழே எல்லாரும் இருக்காங்க மதி.''

''இருக்கட்டும்.''

''அப்புறம் என்னடா போனவங்களயே காணமேன்னு மேலயே வந்துடுவாங்க.''

''வரட்டும்''

கணவனது பார்வை என்னவோ செய்ய, ''போங்க மதி நான் கீழே போறேன்'' என்று திரும்பயவளின் கையை எட்டிப் பிடித்தான் மதிவதணன்.

''ஆமா அழறதுக்கு என்னவோ நியாயமான காரணம் கூட இருக்கலாம்னு தேவிகிட்ட சொல்லிட்டிருந்தயே, என்னமா அது?''



''அது'' என்று முகம் சிவந்தவள், ''ஒன்னுமில்ல'' என்று மானாய் கணவனிடமிருந்து தப்பித்துக் கொண்டு ஓடியே விட்டாள் வாணி.

கீழே ஓடி வந்த மகளை ஆச்சரியத்துடன் எதிர்கொண்டார் தாமோதரன்.

''என்ன பாப்பா, என்ன இவ்வளவு அவசரம்?''

''ஆமாப்பா நீங்க வந்து எவ்வளவு நேரமாச்சு. நான் இன்னும் சாப்பிடக் கூட உங்களுக்கெல்லாம் எதுவும் தரலையே.''

''அடடா இதுக்குத்தான் இந்த அவசரமா? மெதுவா எடுத்துட்டு வாடாம்மா ஒன்னும் அவசரமில்ல.''

சிறிது நேரத்தில் வாணி அனைவருக்கும், ஸ்நேக்ஸ் கொண்டு வந்து கொடுக்க, தனது கணவனும் கீழே வந்து தனது தந்தையுடன் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

''தாத்தா எங்க டாடி?'' என்று கேட்டுக் கொண்டே திரும்பியவள், கண்களை இருட்டிக் கொண்டு வர அப்படியே கீழே சாய்ந்தாள்.

யாரும் கவனிக்கும் முன்னரே, அருகிலேயே அமர்ந்திருந்த மதிவதணன் வேகமாக எழுந்து வந்து கீழே விழுவதற்கு முன்பாவே மனைவியைத் தாங்கிக் கொண்டான்.

''எனக்கு ஒன்னுமில்ல'' என்று மனைவி மெதுவாக சொல்லிக் கொண்டிருக்க, ''நீ எதுவும் சொல்லாத'' என்று மனைவியைத் தூக்கிக் கொண்டு போய் அருகிலிருந்த சோபாவில் விட்டிருந்தான் அவளுடைய கணவன்.

''என்ன பாப்பா என்னாச்சு'' என்று முதலில் தந்தையும், பிறகு அவரைத் தொடர்ந்து அனைவரும் வந்து விட்டிருந்தனர்.

அனைவருடைய முகத்திலும் பதட்டம் தெரிய, ''சந்தோஷமான விஷயம் தான்'' என்று சொல்லிக் கொண்டே வந்தார் மஹாலட்சுமி.

''என்ன சந்தோஷமான...''என்று ஆரம்பித்த மதி வதணன் ''வாணி'' என்று மனைவியைப் பார்த்தான்.

அவனுடைய முகத்தில் தெரிந்த சந்தோஷத்தைத் தொடர்ந்து, ''ஆமாம்பா நீ அப்பா ஆகப் போற'' என்றார் மஹாலட்சுமி.

''அது மட்டுமா நீங்களும் தாத்தா ஆகப்போறீங்க'' என்று அவர் தாமோதரனைப் பார்க்க, ''நீங்க மட்டும் என்னவாம்? உங்களுக்கும் ப்ரமோஷன் தான'' என்று எல்லையில்லாத ஆனந்தத்துடன் மகளின் அருகில் சென்று அமர்ந்தார் தாமோதரன்.

தொடர்ந்து வந்து ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகத் தங்களின் சந்தோஷத்தை வெளிப்படுத்த, தனது கணவனுடைய பார்வையில் முகம் சிவந்தாள் வாணி.